www.tamilarangam.net

அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 22-10-1993

### சுவீடன் உண்ணாவிரதம் இடைநிறுத்தப்பட்டுள்ளது

கடந்த 1ம் திகதி முதல் சுவீடனில், தமிழ் அகதிகள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டம் கடந்த செவ்வாய்க் கிழமையுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளது. சுவீடன் குடிவரவு திணைக்கள உயர் அதிகாரிகளுடன் நடந்த பேச்சு வார்த்தையின்போது வழங்கப்பட்ட சாதகமான உறுதிமொழியை அடுத்தே உண்ணாவிரதம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதே வேளை, சுவீடனில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கான சூழ்நிலை இலங்கையில் இருக்கின்றதா என்பதை நேரடியாக அறிந்து கொள்வதற்காக சுவீடன் வெளியுறவு அமைச்சு உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு சென்றது. அங்கு சென்ற மேற்படி குழுவினர் அகதிகளைத் திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை தற்போது இல்லை என்பதால், இப்போதைக்கு அவ்வாறு செய்ய வேண்டாம் என சுவீடிஸ் அரசுக்கு சிபார்சு செய்வதாக உறுதி கூறியுள்ளனர். இந்த உறுதிமொழியை அடுத்தே உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டுள்ளது. ■

# தோல்வியை ஈடுசெய்ய மீண்டுமோர் இராணுவ நடவடிக்கை

## ☆ ஸ்ரீலங்கா அரசு பகீரதப்பிரயத்தனம்

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை, தமிழீழ விடுதலைப் புலிகளால் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து சிறீலங்கா அரசாங்கம் மீண்டுமோர் இராணுவ நடவடிக்கையை விரைவில் ஆரம்பித்து தனக்கேற்பட்ட தோல்வியை ஈடுசெய்ய பகீரதப் பிரயத்தனம் செய்துவருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்காக கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து ஆயுதக் கொள்வனவைத் துரிதப்படுத்தத் தொடங்கியுள்ளதாக மேலும் செய்திகள் கிடைத்துள்ளன. சிறீலங்காப் படைகளிடம் இருந்த நான்கு புக்காரா விமானங்களில் மூன்று, யுத்தக் களத்தில் செயலிழந்துள்ளதால் சிறீலங்கா விமானப்படையினருக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதை ஈடுசெய்வதற்காக அவசரம் அவசரமாக உலங்கு வானூர்திகளைக் கொள்வனவு செய்வதிலேயே அதிக அக்கறை காட்டப்படுவதாகத் தெரிகிறது.

வார்சோ ஒப்பந்த நாடுகளால் பயன்படுத்தப்பட்ட இரட்டை எஞ்சின் பொருத்தப்பட்ட MI 17 IV ரக போக்குவரத்து உலங்கு வானூர்திகள் மூன்று, இவ்வருட இறுதிக்குள் கொழும்பு வந்து சேர்ந்துவிடுமென சிறீலங்கா அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

### மேலும் பத்து இராணுவப் பிரிவுகள்

சிறீலங்கா இராணுவம் மேலும் பத்து இராணுவப் பிரிவுகளை அமைக்க வேண்டுமென அரசாங்கத்தைக் கோரியுள்ளது. சிறீலங்கா அரசாங்கம் ஐந்து இராணுவப் பிரிவுகளை உடனடியாக அமைப்பதற்கான அனுமதியையும், நிதியீட்டத்தையும் வழங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கிடை சிங்கள மீனவர்களை ஆயுதமயப்படுத்தும் படியும், இது கடற்படைக்கு துணைப்படையாக அமையுமெனவும் சிறீலங்கா அரசாங்கம் ஆலோசனை கூறியுள்ளதாகத் தெரிகிறது. தமிழ்ப் பிரதேசங்களின் எல்லைகளில் குடியிருக்கும் சிங்களவர்களை ஆயுதமயப்படுத்தி அவர்களை முன்னணிப் படையினராக வைத்திருப்பதன் மூலம் இராணுவத்திற்கு ஏற்படும் பேரிழப்புக்களை ஒருவாறு குறைக்கலாம் என்ற ஆலோசனையின் பெயரில் சிங்களக் குடியேற்றவாசிகளை அரசாங்கம் ஆயுதமயப்படுத்தி வருவது அனைவரும் அறிந்ததே.

தொடர்ச்சி 14ம் பக்கம்

# தீர்வுகளை ஆராய மறுக்கும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி

## ☆ ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவுக்கு பலத்த ஏமாற்றம்

இலங்கைத்தீவில் நடைபெறும் தமிழின அழிப்பு நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும், அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கும் சர்வதேச சமூகத்தினர் எடுக்கும் நடவடிக்கைகளை எல்லாம், எடுத்த எடுப்பிலேயே நிராகரிக்கும் சிறீலங்காவின் இனவெறி அரசாங்கம், சமீபத்தில் இலங்கைத் தீவுக்கு விஜயம் செய்த ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவையும், 'எமது விடயத்தில் தலையிடாதே' எனக்கூறி திருப்பியனுப்பியுள்ளது. சிறீலங்காவின் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்லாது சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் வெளியார் தலையீட்டை தாங்களும் விரும்பவில்லை என ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவுக்கு கூறியுள்ளனர். இதனால் அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகள் எதையும் கூறமுடியாத நிலையில் ஐரோப்பிய பாராளுமன்றக் குழு திரும்பியுள்ளது.

### பயங்கரவாதப் பிரச்சினை எனப் பதில்

ஐரோப்பிய பாராளுமன்றக் குழு, சிறீலங்கா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவைச் சந்தித்த போது ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவில் அங்கம் வகிக்கும் பிரித்தானியரான அனிற்றா பொலக், தமிழ்ப் பிரதேசங்களில் காணப்படும் யுத்த நிலை குறித்து சிறீலங்கா ஜனாதிபதியிடம் விளக்கம் கேட்டுள்ளார். சிறீலங்கா ஜனாதிபதி தனது அம்பாந்

தொடர்ச்சி 14ம்பக்கம்

## ஒருவாரத்தில்

# இரண்டாயிரத்திற்கு மேற்பட்டோர் கிளாலியூடாகப் பயணம்

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை பற்றி 'சண்டே டைம்ஸ்'க்கு பேட்டி அளித்துள்ள சிறீலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன, நான்கு நோக்கங்களுக்காக அந்நடவடிக்கை நடத்தப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். "முதலாவது, கிளாலியூடாக முன்னேறி புலிகளின் படகுகளை அழித்து, இந்தப் போக்குவரத்துப் பாதையை அடைப்பது. இரண்டாவது, முன்னேறுகையில் விடுதலைப் புலிகளின் முகாம்களை அழிப்பது. மூன்றாவது, கூடுமான அளவிற்கு விடுதலைப் புலிகளைக் கொன்றொழிப்பது. நான்காவது, இந்தக் கடற்பாதையூடாக பயணம் செய்வதன் மூலம் ஒரு மாதத்தில் மில்லியன் ரூபாக் கணக்கில் பணம் உழைக்கும் விடுதலைப் புலிகளின் முயற்சிகளைத் தடுத்து விடுதலைப்புலிகளுக்குப் பணப்புழக்கம் இல்லாமல் செய்வது." இவையே அவர் கூறிய நான்கு நோக்கங்களுமாகும்.

ஆயினும், இந்த 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை புலிகளால் முறியடிக்கப்பட்டதும் அல்லாமல், கிளாலிப் பாதை கடற்புலிகளின் பாதுகாப்போடு பயணத்துக்கென திறக்கவும்பட்டது. கடந்த வாரத்தில் மட்டும் இரண்டாயிரம் பேர் இப்பாதையூடாகக் கடற்புலிகளின் பாதுகாப்புடன் பயணம் செய்துள்ளனர். அத்துடன் சிறீலங்கா இராணுவத் தளபதி எதிர்பார்த்தபடி புலிகளின் முகாம்கள் அழிக்கப்படவுமில்லை; விடுதலைப் புலிகள் அதிகளவில் கொல்லப்படவுமில்லை. மேலும் புலிகளின் நடமாட்டத்தை அவரால் கட்டுப்படுத்தவும் முடியவில்லை. எனவே அவரே தனது இராணுவ நடவடிக்கையின் தோல்வியை ஏற்றுக் கொள்கிறார். ■

### உள்ளே...


- போராளியின் குருதிச்சுவடுகள் - மேஜர் ஜொனி
- புகலிட இலக்கியத்தின் முகம்
- கொழும்பில் தமிழரின் அவலவாழ்க்கை
- அறிமுகம் 'உலக உலா' மாத இதழ்
- இலட்சியங்கள் வாழ்கின்றன - சிறுகதை
- இஸ்ரேல் உருவாக்கும் இரண்டாவது சதாத்
- தரையிலிருந்து கடலுக்கு விரியும் போர்முனை
- தமிழகத்தில் பராமரிப்பற்ற நிலையில் ....


# நாசிகளின் பாணியில் தமிழர் வேட்டை

கொழும்பு களுபோவில, கொச்சிக்கடை, மாத்தளைப் பகுதியிலுள்ள களுதாவளை போன்ற இடங்கள் பாதுகாப்புப் படைகளால் சுற்றிவளைக்கப்பட்டன. பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாக தமிழர்களை வெளியே இழுத்து வந்து, கிட்லர் நாசி முகாம்களுக்கு ஆட்களை அள்ளிச் சென்றது போல, கைது செய்து கொண்டு சென்றுள்ளனர். தமிழ்ப் பிரதேசங்களில் அட்டகாசம் செய்யும் அதே பாணியில் இக் கைதுகள் நடைபெறும் வேளையில் யாரும் இப் பிரதேசத்தின் உள்வரவோ, வெளியேறவோ அநுமதிப்பதில்லை. இக் கைது செய்யும் படலம் மணிக்கணக்கில் தொடர்கிறது., கொழும்பில் களுபோவில பகுதியில் மட்டும் ஒரே நாளில் 200 பேர் கைது செய்யப்பட்டனர். மாத்தளையில் கைதான 12 தமிழ் வாலிபர்களும் தொடர்ச்சியாகக் காவலில் வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கைதாக்கப்பட்டு பத்துக்கும் மேற்பட்ட சித்திரவதைக் கூடங்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அமைதிக்கு எதிரான குற்றம்

சிறீலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்காவின் அரசியல் தத்துவமான "இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதமே" என்ற கோட்பாட்டின் அடிப்படையில், "யாழ்தேவி நடவடிக்கை" என்ற இராணுவத் தாக்குதல் -அப்பட்டமான ஆக்கிரமிப்பு யுத்தம், தமிழீழ மக்கள் மீது நடாத்தப்பட்டுள்ளது. ஆயினும், தமிழீழ மக்களின் அரசு நோக்கிய அரசின் (Defacto Government) பொறுப்பாளர்களான, தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலால் சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் பலத்த சேதத்துக்கும் உயிரிழப்புக்கும் ஆளாகியதனால், யாழ்தேவி நடவடிக்கை என்ற ஆக்கிரமிப்பு யுத்தம் விடுதலைப் புலிகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், இதுதொடர்பாக சிறீலங்கா பாதுகாப்புப் படைத் தளபதி கமில்டன் வணசிங்கா அளித்த பேட்டியில், "இந்த இராணுவ நடவடிக்கைக்கான நான்கு காரணங்களைக் விளக்கியுள்ளார். முதலாவது, குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பாதையையும், படகுகளையும் அழிப்பது, அதாவது, வேறு வார்த்தையில் கூறுவதானால் மக்கள் மீது முற்றுகை யுத்தம் நடாத்துவது. இரண்டாவது, இராணுவம் முன்னேற முயன்ற பாதையில் உள்ள புலிகளின் பாதுகாப்பு அரண்களை அழிப்பது. விளக்கமாகச் சொன்னால், தமிழீழ மக்களின் தேசியப் பாதுகாப்பை சிதைப்பது. மூன்றாவதாக, எவ்வளவு அதிகமாகக் கொல்ல முடியுமோ, அவ்வளவு அதிகமாக விடுதலைப் புலிகளையும் ஆதரவாளர்களையும் கொல்வது. தெளிவாகச் சொன்னால், சர்வதேச யுத்த விதிகளுக்கு முரணான வகையில் மக்களையும், மக்கள் படையையும் கொன்று குவிப்பதற்கான இனஅழிப்பு உத்தரவு. நான்காவதாக, விடுதலைப்புலிகளுக்கு பொருளாதார நகர்ச்சி ஊடாகக் கிடைக்கும் வருமானத்தைத் தடுப்பது. அழுத்தமாகச் சொன்னால், தமிழீழ மக்களின் பொருளாதார நகர்வைத் தடை செய்து, மக்கள் மேல் பொருளாதாரத் தடையை முற்றுமுழுதாக அமுலாக்குவது. மக்கள் மீதான முற்றுகை, தேசிய பாதுகாப்பை அழிப்பது, இனஅழிப்பு (Genocide), மக்கள் மீது பொருளாதாரத் தடை இவைதான் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் நோக்கமாக இருந்தது என்ற உண்மையை வெளியிட்டமைக்கு, சிறீலங்காவின் தலைமைத் தளபதிக்கு நன்றி கூறத்தான் வேண்டும். ஏனென்றால், இவை எல்லாமே ஒட்டுமொத்தமாக யுத்தக் குற்றங்கள் (War crimes); பொதுவாக ஒருநாடு இன்னொரு நாட்டின் மீது படையெடுக்கும் போது நிகழ்த்தப்படுபவை. தமிழீழத்தை, சிறீலங்கா எண்ணத்திலும் செயலிலும் வேறு வேறு நாடுகளாகவும், நாட்டு மக்களாகவும் கருதி வருவது என்பதே யதார்த்த உண்மை. இதனால்தான், தமிழீழ மக்களின் பிரச்சினை ஒரு இனத்தின் பிரச்சினையாகக் கூட இல்லாமல், வெறும் பயங்கரவாதமாக சிறீலங்கா ஜனாதிபதிக்குத் தெரிகிறது. ஆகவே சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவும், அவரின் படைத் தளபதியும் நூரம் பேர்க் (Nuremberg) சாசனப்படி, அமைதிக்கெதிரான குற்றத்தை (Crime against Peace) திட்டமிட்டது; ஆயத்தப்படுத்தியது; தொடங்கியது; நடாத்தியது என்ற அடிப்படையில் ஆக்கிரமிப்புக் குற்றத்தைச் செய்தவர்களாகக் காணப்படுகின்றனர். காலனித்துவ அல்லது ஆக்கிரமிப்புக்கு உள்ளான மக்கள், அம் மேலாண்மையிலிருந்து தம்மை விடுவிப்பதற்குத் தமது சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தலாம் என்கின்றது, மக்களதும் மனிதனதும் உரிமைக்கான ஆபிரிக்க சாசனம். இந்த சுயநிர்ணய உரிமைக்கான குரலை இயக்கங்களும் எழுப்பலாம் என, சுயநிர்ணய உரிமைக்கான சவால்கள் (The Challenge of Self Determination) என்ற தலைப்பில் பக்கம் 19இல், 92 -93 ஆம் ஆண்டுக்கான இராணுவ தந்திரோபாய புள்ளி விபர நூல் (Statistics Survey 1992 -1993) கருத்து வெளியிட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், முரண்பாட்டின் பரிமாணம் (The Scope of Conflict) என்ற பகுதியில்,

'இனங்களுக்கிடையிலான சண்டைகளில் அடிப்படையாக இருப்பது, இந்த சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை. இத்தகைய இனப்பிரச்சினைகளை சர்வதேச அமைப்புக்களும் வெளியார் சக்திகளும் அவதானிக்கும்பொழுது, நான்கு விடயங்களுக்கு முக்கியம் கொடுக்க வேண்டும். 1) வன்முறையின் அளவு. 2). அந்தப் பிரச்சினையில் என்ன கேட்கப்படுகின்றது. 3). சுயநிர்ணய உரிமையைக் கோருகின்ற கூட்டத்தின் சக்தி நிலைகள் 4). அதற்கெதிராக நிற்பவர்களின் சக்தி நிலைகள்' என்பனவே அவை.

அத்துடன் இந்த ஆய்வில், தமிழீழப் பிரச்சினையைப் பயங்கரவாதம் எனக்கூறாது, உள்நாட்டு யுத்த நிலையாக உதாரணம் கூறப்பட்டுள்ளது. உண்மையில் காலனித்துவ பிரித்தானிய அரசால், தமிழீழமும் சிங்கள நாடும் செயற்கையான முறையில், ஒரே நாடாக உலகப் படத்தில் புகுத்தப்பட்டது. இதனால் இந்தக் காலனித்துவத் தொடர்நிலை, தமிழீழ மக்களின் பிரச்சினையை உள்நாட்டு யுத்தமாகப் பார்க்க வைக்கின்றது. ஆயினும் காலனித்துவ காலத்தில் ஓர் நாடாக இருந்த எத்தனையோ நாடுகளின் தேசிய இனங்கள், தமது சுய நிர்ணய உரிமையைப் பயன்படுத்தி தனிநாடுகளாக மாறிவிட்டன. பங்களாதேஸ் முதல் இன்றைய கிழக்கு ஐரோப்பிய ரஸ்ய நாடுகள் வரை எத்தனையோ உதாரணங்கள். இரண்டாவது உலக யுத்தத்தை அடுத்து தேசியத்துவ உணர்வு, உலக அரங்கில் அரசோச்சியது. ஆனால், பனிப்போரின் முடிவில், இன்று உலகில் இனத்தேசியத்துவம், ஒரே நாடுகளாகத் திகழ்ந்த பல நாடுகளை, இனத்துவ அடிப்படையிலான நாடுகளாக மாற்றுகின்றன. சுய நிர்ணய உரிமைக்கான போராட்டங்களே உலகின் அரசியல், இராணுவ தந்திரோபாயங்களை மாற்றி அமைக்கும் சக்தியாக இன்று விளங்குகின்றது எனக்கூறி இந்த இனத்தேசியத்துவ அடிப்படையில் எழும் சுய நிர்ணய உரிமைப்போராட்டங்களைஉலகு அங்கீகரிக்கின்றது. இவ்வகையில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமும், தமிழீழ மக்கள் தமது எதிர்காலத்தை நிச்சயிப்பதற்கான (சுயநிர்ணய உரிமை) போராட்டம். இத்தகைய நேரங்களில் 1989 இல் நமீபியாவிலும், 1993 இல் எரித்திரியாவிலும் ஐக்கிய நாடுகள் சபை சுயநிர்ணய உரிமைக்கான குடியொப்பங்களை நடாத்தி, மக்களது இறைமை அவர்களையே சென்றடைய வழிசெய்தது.

சிறீலங்கா ஜனாதிபதியும் ஒரு தேர்தல் பற்றியும், குடியொப்பம் பற்றியும் அடிக்கடி பேசுகிறார். ஆனால், இந்தத் தேர்தலையோ குடியொப்பத்தையோ தமிழீழத்தில் நடத்தும் தகுதியை அவரும், அவரது அரசாங்கமும் இழந்துவிட்டது. அத்துடன் இத்தேர்தல், குடியொப்பம் என்பவற்றின் நோக்கம் அவரினதும், அவரது அரசாங்கத்தினதும் ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துவதே. இத்தகைய ஒரு தேர்தல் அல்லது குடியொப்பம் ஒரு விடுதலைப் போராட்டக் காலத்தில் நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே ஐக்கிய நாடுகள் சபை, தமிழீழ மக்களின் இயக்கமாகவும், அரசு நோக்கிய அரசாகவும் திகழும் விடுதலைப் புலிகள் மூலம், சுயநிர்ணய உரிமைக்கான குடியொப்பத்தை நடத்துவதன் மூலம் மட்டுமே உண்மையான பொதுசன வாக்கெடுப்பை நடாத்தலாம். அதன் பின்னர்தான், அமைதிக்கெதிராக சிறீலங்கா அரசாங்கம் செய்யும் குற்றங்கள் உலகுக்குத் தெளிவாகும். ■

# பல சமர்களின் தோல்வி யுத்தத்தின் தோல்வியே

"ஒரு சமரில் பெற்ற வெற்றி முழு யுத்தத்திலும் பெற்ற வெற்றியாகாது" எனவும், "இவ்வாறான தோல்விகள் எதிர்பார்க்கப்படுவனவையே" எனவும் சிறீலங்காவின் தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமில்டன் வனசிங்கா அண்மைக்காலத்தில் இராணுவம் சந்தித்த தோல்விகளுக்குச் சப்புக்கட்டுக் கட்டியுள்ளார்.

விழுந்தவன் மீசையில் மண்படவில்லை என்பது போன்ற இவ் விளக்கமானது, ஜெனரல் கமில்டன் வனசிங்கா கூறியது போல், ஒரு சமரில் மட்டும் சிறீலங்கா இராணுவம் தோற்றுப் போயிருந்தால், சிலவேளை கருத்திற் கொள்ளப்பட்டிருக்கலாம். ஆனால், சிறீலங்கா இராணுவம் தொடர்ச்சியாகப் பல தோல்விகளைச் சந்தித்து வரும்போது, கமில்டனின் இவ் விளக்கமானது சிறுபிள்ளைத்தனமானது என்றே எண்ணவைக்கிறது.

சிறீலங்கா இராணுவம் இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய பின்னர், பெரும் தோல்விகள் பலவற்றைச் சந்தித்து வந்துள்ளது. அதிலும், 1992, 1993 ஆம் ஆண்டுகளில் அது சந்தித்த தோல்விகள் இராணுவத்திற்குப் பெரும் உயிரிழப்பையும், பொருளிழப்பையும் ஏற்படுத்தியுள்ளமை சகலருமே ஏற்றுக் கொண்டதொன்று. இவ் இழப்புக்களினால், இராணுவ நடவடிக்கைகளே மந்த நிலையை அடைந்தன என்பதே உண்மை.

அதிலும் குறிப்பாக, 1992 பங்குனியில் மணலாற்றில் 'ஒப்பரேசன் சிக்சரின்' போது இடம் பெற்ற மோதலும், ஆவணியில் அராலித்துறையில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவமும், ஐப்பசியில் நிகழ்ந்த கட்டைக்காட்டுத் தாக்குதலும், இந்த ஆண்டு ஆடியில் இடம்பெற்ற, மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான தாக்குதலும், ஆவணியில் யாழ். கடல் நீரேரிப் பகுதியிலும், பருத்தித்துறைக் கடற்பரப்பிலும் கடற் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களும் சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பையே அதிரவைத்த தாக்குதல்கன் ஆகும்.

இத் தாக்குதல்களின் விளைவுகளே, சிங்கள இராணுவத்திற்கு இளைஞர்களை வருந்தி அழைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை, சிங்கள அரசிற்கு ஏற்படுத்தியது. அதேவேளை, இராணுவக் கட்டமைப்பிலும் ஆறு மாதத்திற்கொரு முறை மாற்றம் செய்ய வேண்டிய நிலைமைகளையும் உருவாக்கியது. இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஆரம்பத்தில், மீண்டும் உருவாக்கப்பட்ட கூட்டுப்படைத் தலைமையகத்தைக் கலைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தியது.

இதேவேளை, அண்மைக்காலத்தில் தரையிலும் கடலிலும் சிறீலங்கா ஆயுதப்படையினருக்கு ஏற்பட்ட தோல்வியானது, அரசிற்குப் பெரும் பின்னடைவு என்பதை பல அரசியல், இராணுவ விமர்சகர்கள் வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டும் உள்ளனர். இதனை சிறீலங்கா அரசாங்கமும் ஏற்றுக் கொண்டமையே, கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைப் பணியகம் கலைக்கப்பட வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

இந்நிலையிலும், தமது இராணுவத் தோல்விகளை ஒரு சமரின் தோல்வி என்றும், தோல்விகள் எதிர்பார்க்கப்படுபவை என்றும் ஜெனரல் கமில்டன் வனசிங்கா கூறும் விளக்கமானது, சிலவேளை அவர் தனது மனச் சாந்திக்காகத் தனக்குத் தானே கூறும் ஆறுதலாக இருக்கலாம். ஆனால், அது ஒரு யதார்த்தபூர்வமான விளக்கமும் அல்ல, ஏற்புடைய வாதமுமல்ல. வடக்கில் கடந்த இரு வருடப் போரில், விடுதலைப்புலிகளின் கை ஓங்கியுள்ளது என்பதே பெரும்பான்மையோரது கணிப்பீடாகும்.

ஆகையினால், ஜெனரல் கமில்டன் கூறும் சமாதானங்கள், போரின் போக்கைத் தீர்மானிக்கப் போவதில்லை. ஒரு சமரின் தோல்வி, யுத்தத்தின் தோல்வி இல்லாதுவிட்டாலும், பல சமர்களின் தோல்விகள், யுத்தத்தின் தோல்விகளாக அமைந்து விடுவதே உலக வரலாறாகும். இதனை ஜெனரல் கமில்டன் புரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில், தொடர்ந்து சமர்களில் தோல்வியைச் சந்திக்கும் சிறீலங்கா இராணுவம், என்றோ ஒரு நாள் யுத்தத்தில் தோல்வியைச் சந்தித்தே ஆகும். இதுவே வரலாறும், நடைமுறையும் ஆகும். ■

## சமாதானப் பேச்சுக்கள் புலிகளைப் பலப்படுத்தக் கூடாது

■ கண்டி மாவட்ட எம்.பி

"சமாதானம் அவசியம்தான். ஆனால், சமாதானப் பேச்சு விடுதலைப் புலிகளின் கரத்தைப் பலப்படுத்துவதாக அமைந்து விடக்கூடாது" என, கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வி. எம். ஜெயரட்ண கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"வடக்கு - கிழக்கில் சமாதானம் ஏற்பட வேண்டும் என உரத்துப் பேசப்படுகிறது. சமாதானம் அவசியம் தான். ஆனால், இது விடுதலைப் புலிகளின் கரத்தைப் பலப்படுத்துவதாக அமைந்துவிடக் கூடாது. சமாதானப் பேச்சு ஒன்றுமறியாத பாமர மக்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

மேலும், "பொதுமக்களுக்குத் தெரியாமல் பேச்சுவார்த்தை இரகசியமாக நடைபெறுமாயின், அதன் பலன் பூச்சியமாகவே இருக்கும்" என்றார். ■

# தமிழ் மாணவரின் மனித உரிமைக்கு மீண்டும் சவால்!

■ 408 பேருக்கு மட்டுமே உயர்கல்வி அனுமதி

வரண்ட பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு கல்வி மூலமே தொழில் வாய்ப்புப் பெறவேண்டிய நிலை உள்ளது. இதனால், இப்பிரதேசங்களில் உயிர் வாழ்வதற்கும் கல்வி அடிப்படையான ஒன்றாகத் திகழ்கின்றது. ஆகவே வரண்ட பிரதேசங்களில் வாழ்பவர்களின் கல்வி, அடிப்படை மனித உரிமைகளுள் ஒன்று என்பது இன்று சர்வதேச மனித உரிமையாளர்களின் கருத்து.

இது இப்படியிருக்க, தமிழர்களின் மனித உரிமையை பறிப்பதன் மூலம், அவர்களின் வாழும் உரிமையை அழிப்பதையே நோக்கமாகக் கொண்ட சிறீலங்கா அரசு, யாழ். பல்கலைக்கழகத்தில் 1180 மாணவர்களுக்கு உயர் கல்வி அனுமதிக்கான இடம் இருக்கின்றது என யாழ். பல்கலைக்கழக செனட் அறிவித்த போதிலும் 408 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கிள்ளது.

அதேவேளை, சிங்களப் பல்கலைக்கழகங்களின் செனட் கேட்டதைவிட, அதிகளவில் அனுமதிகளை வழங்கியுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் 200 மருத்துவ மாணவர்களுக்கான இடம் உள்ள போதிலும் 60 மாணவர்கள் மட்டுமே, மருத்துவ பீடத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியிலும் கல்வியில் முன்னேறத் துடிக்கும் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடுப்பதற்கு சிறீலங்கா அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கை, சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மற்றொரு எடுத்துக்காட்டாக உள்ளது. ■

## 1992 வரை மட்டக்களப்பில் 20, 040 பேர் கொல்லப்பட்டுள்ளனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில், 1983 முதல் 1992 வரை யுத்த நடவடிக்கைகளினால் இருபதினாயிரத்து நாற்பது பேர் கொல்லப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஐயாயிரத்து அறுநூற்று பதினான்கு பேர் காயமடைந்துள்ளதாகவும் இப் புள்ளிவிபரத் திரட்டு தெரிவிக்கின்றது. கொல்லப்பட்டவர்களில் எண்ணூற்றி எழுபத்தியிரண்டு பேர் அரச ஊழியர்கள் என்றும் அறியப்படுகின்றது. சிறீலங்காப் படையின் தமிழ்க் கைக்கூலிகள், முஸ்லீம் ஊர்காவற் படை போன்றவற்றினால் பழிவாங்கப்பட்ட மக்களே இவர்களில் கணிசமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆட்சியாளர்கள் பலி எடுக்கின்றனர்

## மேல்மாகாணசபை சிங்கள உறுப்பினர் கவலை

"தமிழ்ப் பிரதேசத்தில் நடக்கும் யுத்தங்களில் இறக்கும் இராணுவ வீரர்கள் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள். வறுமை காரணமாக, இராணுவத்தில் வேலை செய்யச் சென்றவர்கள். ஆனால் தாம் அதிகாரத்தில் இருப்பதற்காகவே ஆட்சியாளர்கள், தொடர்ந்து போரினை நடாத்தி வருகிறார்கள். இதுவரை இறந்த இராணுவத்தினர் நாட்டுக்காக தமது உயிரை இழக்கவில்ல. அதிகாரத்தை தமது வசம் வைத்திருக்க விரும்பும் ஆட்சியாளர்களால், பலி எடுக்கப்பட்டுள்ளனர்" என 'யாழ் தேவி' இராணுவ நடவடிக்கையின் போது, இறந்த இராணுவத்தினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய மேல் மாகாண சபை உறுப்பினர் பிரேமச்சந்திர ரணவீர கூறியுள்ளார்.

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் தோல்வி, சிங்களவரிடை பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 'இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதமே என ஓலமிடும் அரசியல்வாதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிங்கள இளைஞர்கள் பலிக்கடா ஆக்கப்படுகின்றனர்' என்ற கருத்தை சிங்களப் பத்திரிகைகள் வெளிப்படையாகவே எழுதத் தொடங்கிவிட்டன.

'கிளாலித் துறையைக் கைப்பற்றத்தான், இப்படையெடுப்பு என அரசாங்கம் வர்ணித்தது. ஆனால், கிளாலி படகுச் சேவை எதுவித தடங்கலுமின்றி நடைபெறுகிறதே' என 'ஐலண்ட்' பத்திரிகை அரசாங்கத்தைக் கிண்டல் செய்துள்ளது.

அத்துடன் விமானப்படை விமானம் ஒன்றிலிருந்து 'யாழ் தேவி' படையெடுப்புக்குப் பின்னர், யாழ். குடாநாட்டை எடுத்த படமொன்றை பிரசுரித்த 'சண்டே ரைம்ஸ்', படையெடுப்பால் எவ்வித மாற்றமும் அங்கு நிகழவில்லை என உறுதிப்படுத்தியுள்ளது.

### யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள் விளக்கம்

இதற்கிடை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஈழநாதம் பத்திரிகை, புலிகளால் சேதமாக்கப்பட்ட தாங்கிகள் எரியும் புகைப்படங்களை வெளியிட்டுள்ளது. வீடியோப் படங்களும் புலிகளால் மக்களுக்குக் காட்டப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் தாங்கி எதிர்ப்பு அணியினர் இந்த யுத்தத்தில் பெருவெற்றி பெற்றுள்ளனர் என இராணுவ அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த யுத்தத்தில், விடுதலைப் புலிகளின் பெண்கள் அணியினரின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் தவித்ததாக கொழும்பில், காயமடைந்துள்ள இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

கேர்ணல் சரத் பொன்சேகா தலைமையில் போரில் ஈடுபட்ட சிறீலங்கா இராணுவ அணி மீது, விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 80 இராணுவத்தினர் தளத்திலேயே கொல்லப்பட்டு, கேர்ணல் சரத் பொன்சேகா உட்பட நூறுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தது, இராணுவ வரலாற்றில் புலிகளுக்கு கிடைத்த மற்றொரு வெற்றி என வர்ணிக்கப்படுகிறது.

காயப்பட்டவர்களை கொண்டு செல்லவும், இறந்தவர்களை அப்புறப்படுத்தவும் முடியாமல் சிறீலங்கா இராணுவம் தவித்த நிலையில்தான், சிறீலங்கா இராணுவத் தலைமைப் பீடம் படைகளை வாபஸ் பெறும் உத்தரவை வழங்கியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா இராணுவத் தலைமைப்பீடம் தான் இரண்டு T 55 தாங்கிகளை இழந்ததாகவும், பலகோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் இராணுவ தளபாடங்களை பறிகொடுத்து விட்டதாகவும் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளது. துடுப்பெடுத்தாட்ட (கிரிக்கட்) விளையாட்டு வீரர்களின் பெயர்களை இராணுவத் தளபதிகளுக்கு செல்லமாகச் சூட்டிக் கொண்டு, தமிழ் மக்களை துடுப்பந்தாட்ட பந்து போல் விளாசலாம் எனப்புறப்பட்ட சிறீலங்கா இராணுவத் தலைமைப்பீடம், ஆரம்ப ஆட்டத்திலேயே புலிகளால் 'ஆல் அவுட்' ஆக்கப்பட்டுவிட்டது என கொழும்பு அவதானி ஒருவர் நகைச்சுவையாகக் கூறியுள்ளார்.

இரு நூறுக்கு மேற்பட்ட இராணுவத்தினரை இழந்து, முன்னூறு பேர் வரை படுகாயமடைய வைத்தது. சிறீலங்கா ஜனாதிபதியின் அரசியல் சாணக்கியம் என கொழும்பில் பேசப்பட்டு வருகிறது. ■

# மூன்றாண்டுகளின் பின்னர் ஐஸ் கட்டிகள் உற்பத்தி

யாழ். நகரில் மூன்று ஆண்டு கால இடைவெளிக்குப் பின்னர், மீண்டும் ஐஸ் கட்டியினை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் முயற்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக கைத்தொழில் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

நவீன தொழில்நுட்பம் ஒன்றின் அடிப்படையில் ஆரியகுளம் சந்தியிலே அமைந்திருக்கும் உதயம் பல்பொருள் அங்காடி கட்டடத் தொகுதியிலேயே இந்த உற்பத்தித் தொழிற்சாலை இயங்கி வருகின்றது.

இதுவரை காலமும் ஐஸ் இல்லாமல் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்த மீன்பிடித் தொழிலாளர்கள், இதன் மூலம் மிகுந்த பயனைப் பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் தமது தேவைகளுக்கான ஐஸ்கட்டிகளை இங்கு தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ■

# மட்டு. மீனவர்கள் மீது அதிகாரிகள் கெடுபிடி

மட்டக்களப்பு வாவியிலும் கடலிலும் பதிவிலக்கம் இல்லாது காணப்படும் வள்ளங்கள், பறிமுதல் செய்யப்படும் எனவும் உரிமையாளர் மீது வழக்கு தொடரப்படும் என்றும் பாதுகாப்பு இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ரோகான் குணவர்த்தனா எச்சரித்துள்ளார். மூன்று அங்குல அளவிற்கு இலக்கம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்பிடிக் கடனை செலுத்தாத மீனவரின் வள்ளங்களை பறிமுதல் செய்ய, கடற்றொழில் விரிவாக்க அலுவலகமும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பனவும் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளன. மூன்று மாதங்களுக்கு மேலாக தவணைக் கட்டணங்களை செலுத்தாத 50 பேரின் வள்ளங்களை முதற் கட்டமாக பறிமுதல் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ■

# கருணாநிதியின் தந்திரங்கள் செயலிழந்தன

குடும்ப ஆட்சியைத் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குள் கொண்டு வருவதற்காகவும் மத்திய அரசுடன் இணைந்து எப்படியாவது பதவியைப் பெற்றிட வேண்டும் என்பதற்காகவும் கலைஞர் கருணாநிதி மேடையேற்றிய, 'புலிக்கதை' அவர் எதிர்பாராதவாறு அவரின் மானத்தைக் கப்பலேற்றியுள்ளது.

புலிகள் தன்னைக் கொல்ல ஆள் அனுப்பியிருப்பதாகவும் தன்னைக் கொன்று, கோபாலசாமியை பதவிக்குக் கொண்டுவருவதே நோக்கமெனவும் ஒரு தூய்மையான விடுதலை இயக்கத்தின் மேல், இந்திய உளவுப் படையுடன் சேர்ந்துகொண்டு களங்கம் கற்பிக்க முயன்ற கருணாநிதிக்கு அவரது தீய நோக்கே அவரைக் கட்சியுள் செல்வாக்கு இழக்க வைத்துவிட்டது.

அன்று போர்ப் பரணி பாடி, சுத்த வீரனுக்கு சாவு ஒரு மலர்ச் செண்டு என அடுக்குமொழி பேசிய கருணாநிதி, "ஈழத் தமிழர்கள் மேல் அநுதாபம் தான் உண்டு, தமிழீழத்தை தான் ஆதரிக்கவில்லை" எனப் பகிரங்கமாக அறிவித்து, இன்று தன் சுயநலரூபத்தைக் காட்டியுள்ளார். அத்துடன் நில்லாது, ஜெயலலிதா பாணியில் தான் அரசியல் துறவறம் பூணுகிறேன் என அறிக்கை விட்ட மறுநாளே, அதனை மீளப் பெற்று தனக்கும் ஜெயலலிதா பாணியில் நடிக்க முடியுமென நிரூபித்துள்ளார்.

கோபாலசாமியோ தான் தமிழீழத்தை ஆதரிப்பதாகவும் ஆனால், தனக்கும் புலிகளுக்கும் இடையே தொடர்பில்லை என இந்திய அரசியல் சாசனத்துக்கு விசுவாசம் தெரிவித்துள்ளார்.

மொத்தத்தில் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை, திராவிட முன்னேற்றக் கழகம் தனது உட்கட்சிப் பூசலுக்கு பகடைக் காய் ஆக்குவதைக் கண்டு, அவர்கள் மொழியில் கூறுவதானால், தமிழன்னை கண்ணீர் வடிக்கிறாள். ■

# நான்காக உடைந்த குழுவின் நாளாந்தம் மாறும் நிலைப்பாடுகள்

கிழக்கில் தேர்தல் வைப்பதற்கு, சிறீலங்கா அரசு காலத்துக்கு காலம் பகீரதப்பிரயத்தனம் செய்து வருவது வழமை. தற்பொழுது சிறீலங்கா அரசு தன்னுடன் ஒத்துழைத்த துரோகக் குழுக்களில் ஒன்றை, அபிவிருத்திப் பணியிலும் ஈடுபடவைத்து, கிழக்கில் அக்குழுவுக்கு செல்வாக்கைத் திரட்ட, திட்டம் தீட்டியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால், இதுவரை சிறீலங்கா அரசுடன் இணைந்து செயலாற்றிய அத்துரோகக் குழு, தான் தனது அரசியல் நடவடிக்கை எல்லாவற்றையும் கிழக்கில் நிறுத்திவிட்டதாகவும் கிழக்கின் அபிவிருத்தியிலேயே தான் இனி இறங்கப் போவதாகவும் அறிவித்துள்ளது. இதன் மூலம் அக்குழு தனக்கு பண பலத்தை அதிகரிக்கவும் செல்வாக்கை மக்களிடையே பெறவும் முடியும் என நினைக்கிறது. பின்னர் தேர்தல் ஒன்றை சிறீலங்கா வைக்க முயல்வது, தப்பித் தவறி நடைமுறைச் சாத்தியமானால், அந்நேரம் அத்தேர்தலில் ஈடுபட்டு, சிறீலங்கா அரசுக்குத் துணை போகலாம் எனவும் கருதுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, இக்குழுவின் இராணுவப் பிரிவில் இருந்த இன்னொருவர், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து அமைச்சராவதற்கான முயற்சிகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்.

முன்னொரு காலத்தில், சித்தாந்த சிந்தனைகளுடன் உறுதியாக இருப்பதாகக் கூறிக் கொண்ட இக்குழு, இன்று யாருடைய தாக்கங்களும் இன்றி, தானாகவே நான்காக உடைந்து தள்ளாடுவதும் அல்லாமல், நாளும் ஒரு நிலைப்பாடாக மாறிக் கொண்டிருக்கின்றது. இது உண்மையில் இதய சுத்தியுடன் போராட்டத்தில் இறங்காமல் விட்டால், எப்படித்தான் தத்துவங்கள் பேசினாலும் தானகவே அழிவைத்தேட வேண்டி வரும் என்பதற்கு, சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. ■

# குடியிருப்புக்கு முன்பாக உள்ள விவசாயக்காணி அனைத்தையும் நிர்வாகத்திடம் அளிக்கவும்

தோட்டத் தொழிலாளர்கள், தமது குடியிருப்புகளுக்கு முன்பாக உள்ள, விவசாயச் செய்கைக்குப் பயன்படுத்திவரும் காணிகளைத் தோட்ட நிர்வாகத்திடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று, தோட்ட நிர்வாகம் வலியுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தோட்ட நிர்வாகத்தின் இந்தத் திடீர் நடவடிக்கையால், பல ஆண்டு காலம் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தி வந்த நிலத்தைப் பறிகொடுப்பதோடு, அதில் உள்ள உற்பத்தியை அனுபவிக்க முடியாத நிலையும் தங்களுக்கு ஏற்பட்டுள்ளதாக, தொழிலாளர்கள் கவலை கொண்டுள்ளனர்.

தோட்ட நிர்வாகத்தின் உத்தரவுகளுக்கு அடிபணியாத தொழிலாளர்களுக்கு எதிராக, நடவடிக்கை எடுக்கப்படுமென நிர்வாகம் எச்சரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ■

# வவுனியாவில் கடவுச்சீட்டு; விண்ணப்பித்து ஏமாற்றம்

வவுனியா பிரதேசச் செயலகம் ஊடாக பாஸ்போர்ட்டிற்கு விண்ணப்பித்த பலருக்கு ஒருமாத காலத்திற்கு மேலாகியும் அவை வந்து கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் பாதுகாப்பு நிலைமைகள் உசார்ப்படுத்தப்பட்டதையடுத்து, அங்கு வெளிநாடு செல்ல பாஸ்போர்ட் பெறுவதற்காக வரும் வடபகுதி மக்களின் தொகையைக் குறைப்பதற்காக, வவுனியாவில் உள்ள மூன்று பிரதேச செயலகங்களிலும் பாஸ்போர்ட் பெற விண்ணப்பிக்கும் விசேட கருமபீடங்கள் ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே.

இக்கரும பீடங்களில் விண்ணப்பித்தவர்களுக்கு 10 நாட்களில் கடவுச்சீட்டு வழங்கப்படும் என குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்தார்கள். ஆரம்பத்தில் ஒருசில விண்ணப்பதாரிகளுக்கு இவ்வாறு உடனடியாகக் கடவுச்சீட்டுகள் கிடைத்தனவாம். ■

## கிளாலியில் மீண்டும் சண்டை

கடந்த செவ்வாய்க் கிழமை அதிகால்லை கிளாலிக் கடலேரிப் பகுதியில் நாற்பது நிமிடங்களுக்கு மேலாக கடற்புலிகளுக்கும் சிறீலங்காக் கடற்படையினருக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. 'யாழ்தேவி நடவடிக்கை'க்குப் பின்னர் நடைபெற்ற முதலாவது கடுமையான தாக்குதல் இதுவாகும். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஸ்ரீலங்கா மக்கள் பலரும் யுத்தத்தில் சலித்துள்ளனர்

— குமார் ரூபசிங்க

பொதுவாக சிறிலங்கா மக்கள் இந்த யுத்தத்தினால் களைத்துப்போய் உள்ளார்கள். தாமுண்டு, தமது வேலையுண்டு என்று தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் விடயங்களில் கவனம் செலுத்துகிறார்கள். ஆனால், இராணுவக் கீர்த்தி பெறுவதில் மூடத்தனமாக ஆர்வமுடைய சிலர் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களைப் பயமுறுத்தி யுத்தச் செய்திகளை வெளியிடுகிறார்கள். இவர்கள் ஒழுங்கு செய்யும் கூட்டங்களுக்கு ஆயிரம் பேர் கூட சேர்வதில்லை. இவர்கள் பத்திரிகைகள் மீதும், கொள்கை வகுப்பவர்கள் மீதும் மிதமிஞ்சிய செல்வாக்கைப் பாவிக்கிறார்கள். இவ்வாறு முன்னாள் ஐக்கிய முன்னணிப் பிரமுகரும், ஜனவேகய குழுத் தலைவருமான குமார் ரூபசிங்க 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பாடப் புத்தகங்கள் மாணவர்களின் தகவல் ஊடகமாக உள்ளன. சமூக மயமாக்கல் முக்கியமாகப் பாடநூல்கள் மூலமாகவும் இடம்பெறுகின்றன. பாடநூல்கள் சம்பந்தமாகப் பல நாடுகளில் பிரச்சினைகள் தலை தூக்கியுள்ளன. அமெரிக்காவில் கறுப்பின மக்கள் விஞ்ஞானம், கல்வி, சங்கீதம் ஆகிய துறைகளில் தாங்கள் வழங்கிய பங்களிப்பு இடம் பெற வேண்டும் என்று கோரி வருகிறார்கள். அமெரிக்க வரலாற்றை அங்லோ -சக்ஸன் இன அடிப்படையில் அணுகுவதை அவர்கள் ஏற்கிறார்களில்லை. அதனால், அமெரிக்காவில் பாடநூல்கள் மீளவும் எழுதப்படுகின்றன. எமது நாட்டிலும் எமது பாடப்புத்தகங்களில் உள்ள ஐதீகங்கள் களையப்பட வேண்டும். சமூகங்களுக்கிடையில் நல்லெண்ணத்தைக் கட்டி வளர்க்க பாடப் புத்தகங்கள் மீளவும் எழுதப்பட வேண்டும் என்றார். ■

## போராடிப் பெறும் உரிமை மேலானவை என்கிறார் கமீத்

மன்றாடிப் பெறும் சலுகைகளை விட, போராடிப் பெறும் உரிமைகளே மேலானவையாகும். அவற்றுக்கே மதிப்பு உண்டு. எனவே முஸ்லீம்களுக்கு இனி சலுகைகள் தேவையில்லை, உரிமைகளே வேண்டும். இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸி. எஸ். - கமீத் தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லீம் மஜ்லிஸின் ஆதரவில், பொறியியல் பீட ஈ. ஓ. ஈ. பெரேரா அரங்கில் நடைபெற்ற மாநாட்டின் போது, கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அமைச்சர் ஏ. - சி. எஸ். கமீத் மேலும் கூறுகையில்,

இதுவரை கிடைத்த சலுகைகளால் நாம் எதனைச் சாதித்து விட்டோம்? உரிமைகளுக்காகப் போராட, நாம் ஏன் முனையக் கூடாது? சமுதாயத்தின் விடியலைக் காண விழையும் நான், மேடையில் எடுத்துக் கூறும் இக் கருத்துக்களை வேறு எந்த ஒரு தலைவரும் துணிந்து கூற முன் வரமாட்டார்கள் என்றும் தெரிவித்தார். ■

## இனப்பிரச்சினைத் தீர்வில் அரசாங்கம் குழம்பியுள்ளது

■ கொழும்பு அரசியல் விமர்சகர் கருத்து

தனிப்பட்ட முறையில் கட்சி உறுப்பினர்கள் எவரும் யோசனைகளை முன்வைக்கக் கூடாது என்று ஐ. தே. க உயர்பீடம் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்திருப்பதாக கூறப்படுகின்றது. அதே சமயம் ஐ. தே. க. உயர்பீடத்தில் இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வா அல்லது அரசியல் தீர்வா காண்பது என்பதில் எவ்விதமான தெளிவான கருத்துக்களும் இல்லை என்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் அரசியல் விமர்சகர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்த விடயத்தில் ஐ. தேகவும் சுதந்திரக் கட்சியும் ஒரே மாதிரியான போக்கையே கடைப்பிடிப்பதாகவும் அவை இரண்டும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாகக் கூட ஒரு யோசனையை முன்மொழியாதது துக்ககரமானதே என்றும் தெரியப்படுத்தியுள்ளார்.

அத்துடன் அரசியல்வாதிகள் தமது இறுதி இலக்கு என்ன என்பது குறித்து தெளிவாக இல்லாத இந்த நிலைதான், இராணுவத்தினர் மத்தியில் குழப்பங்களுக்கு காரணமாகிறது என்றும், தள நிலைமைகளில் அது பிரதிபலிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார். ■

## சேவையில் நீடிக்குமாறு கமில்டனுக்குப் பணிப்பு

கடந்த மாதத்துடன் 60 வயதை அடைந்துள்ள சிறீலங்கா இராணுவத் தளபதி ஜெனரல் கமில்டன் வனசிங்காவை, மேலும் ஒரு வருடத்திற்கு இராணுவத்தில் பணியாற்றுமாறு அவரை, சிறீலங்காவின் ஜனாதிபதி டி. - பி. விஜயதுங்க பணித்துள்ளார்.

முன்னதாக இவ்வருடம், கமில்டன் இராணுவச் சேவையிலிருந்து ஓய்வு பெறுவார் என்றும் அவுஸ்திரேலியாவுக்கு சிறீலங்காத் தூதுவராகச் செல்வார் என்றும் செய்திகள் வெளியானது தெரிந்ததே. ■

## படையினர் -ஜே. வி. பியினர் இணைந்த கொள்ளைக்கோஸ்டி!

- சப் இன்ஸ்பெக்டர் தலைமை

ரிசர்வ் பொலிஸ் இன்ஸ்பெக்டராக இருந்துகொண்டே, ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஸ்டியொன்றை நடத்தி வந்ததாகக் கூறப்படும் சப்இன்ஸ்பெக்டர் ஒருவரை பொலிசார் தேடிவருகின்றனர். இராணுவம், கடற்படை ஆகியவற்றிலிருந்து தப்பியோடி வந்தவர்களையும் ஜே. - வி.பியுடன் தொடர்புடையவர்களையும் ஒன்றிணைத்து கொள்ளைகளில் ஈடுபடுத்தி வந்ததாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த கொள்ளைக் கோஸ்டியைச் சேர்ந்த, இராணுவத்திலிருந்து தப்பிவந்த ஒருவர், தற்போது பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இக் கோஸ்டியைச் சேர்ந்த மற்றுமொருவர் உடவளப் பகுதியில், கொள்ளையடிக்கச் சென்ற போது, வீட்டிலுள்ளவர்களாலும் அயலவர்களாலும் அடித்துக் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர் ஜே. - வி. பி. இயக்கத்தோடு தொடர்புடையவர் என்றும் விஜமுனிகே நந்தபால என்ற பெயருடையவர் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

ரிசர்வ் பொலிஸ் சப் - இன்ஸ்பெக்டரின் இந்த கொள்ளைக் கோஸ்டி பாவித்த மூன்று மோட்டார் சைக்கிள்கள், இரு உள்ளூர் துப்பாக்கிகள், இரு கத்திகள், குண்டுகள் என்பவற்றை பொலிசார் மீட்டுள்ளனர். ■

## கல்குடா வாகரைப் பகுதியில் சிங்கள மீனவர்கள் குடியேற்றம்

கல்குடா, வாகரைப் பிரதேசங்களில் சிங்கள மீனவர்களைக் குடியேற்றி, நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதற்கென பன்னிரண்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், பதினேழு இலட்சம் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் தலா முப்பதாயிரம் ரூபா பெறுமதியுடைய நூற்றி இருபது தோணிகள் விநியோகிக்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ■

## நறுவிலிக்குளத்தில் ஒருவர் மிதிவெடியில் காலிழப்பு

மன்னார் நறுவிலிக்குளம் பகுதியில், வீதித் திருத்த வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளம் 'குடும்பஸ்த்தர் ஒருவர் மிதி வெடியில் சிக்கியதில் தனது காலொன்றை இழந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தின் போது காலை இழந்தவர் நறுவிலிக்குளத்தைச் சேர்ந்த அந்திரேஸ் சந்தியோகு (வயது 24) என்னும் இளம் குடும்பஸ்த்தராவார்.

சிறீலங்கா இராணுவத்தினர் முன்னர் இப்பகுதியில் நிலைகொண்டிருந்து, பின்பு இப்பிரதேசத்தை விட்டு வெளியேறியமை தெரிந்ததே. இப்பிரதேசத்தை விட்டு இராணுவத்தினர் வெளியேறிச் செல்லு முன்னர், வீடுகள் அனைத்தையும் தகர்த்துவிட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்தில் பழுதடைந்த வீதிகளை ஒப்பந்த அடிப்படையில் திருத்தி அமைக்கும் வேலையைப் பொறுப்பேற்று செய்துவரும் போதே, வீதிக்கு அருகில் சென்ற சமயம் மேற்படி நபர் காலை இழக்க நேர்ந்தது. ■

## இலங்கையில் நிரந்தர அமைதிக்கு

# தமிழர் தன்னாட்சிக் கோரிக்கை ஏற்கப்பட்டே ஆகவேண்டும்

"இலங்கையில் நிரந்தரமான அமைதி ஏற்பட வேண்டுமானால், தமிழர்கள் முன்வைக்கும் தன்னாதிக்கக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டே ஆக வேண்டும்". இவ்வாறு பி. பி. சி. தனது இலங்கை தொடர்பான செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

தமிழர்கள் தமது தன்னாதிக்கக் கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கைக்கு மத்தியில், கடந்த பல வருடங்களாக வடக்கிலும், கிழக்கிலும் அரசுக்கெதிரான போராட்டம் நடைபெற்று வருகின்றது.

ஆனால், சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க, இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்றும் வெறுமனே பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என்றும் அடிக்கடி கூறிவருகின்றார்.

இவரது இக் கருத்துக்களால், சிங்கள மக்களிடமிருந்து ஜனாதிபதிக்கு ஓரளவு ஆதரவு பெருகக்கூடும். ஆனால், இலங்கையின் பூர்வீக வரலாற்றையே அலட்சியம் செய்யும் ஜனாதிபதியின் கருத்துக்களால், தமிழ் மக்கள் சலிப்படைவார்கள். அத்துடன் ஜனாதிபதியின் கடும்கோட்பாட்டுக் கொள்கை காரணமாக தமிழ் மக்களது மனித அடிப்படை உரிமைகள் இனிமேல் மேலும் கூடுதலாக அலட்சியம் செய்யப்படலாம் என்று ஏற்கனவே பல குடியுரிமைக் குழுக்கள் எச்சரிக்கைகளை விடுத்திருந்தன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. ■

## விவசாயப்பயிற்சியும் தொழில்வழங்கலும்

தமிழீழத்திலே தமது கல்வியை முடித்துக் கொண்டு வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு, விவசாயத்துறையில் ஒன்பது மாத கால பயிற்சியினை இலவசமாக வழங்கி, தொழில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

பயிற்சியினை திருப்திகரமாக முடித்துக் கொண்டு வெளியேறுபவர்களுக்கு திறமை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. விவசாயப் பயிற்சி நெறியைப் பயில விரும்புபவர்கள், க. பொ. த. (சா/த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராகவும் 25 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். அத்தோடு, க. பொ. த (உ/த) பரீட்சையில் தாவரவியல், இரசாயனம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருப்பின், விசேட தகைமையாகக் கணிக்கப்படும்.

தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ■

## யாழ். பல்கலைக்கழக நூல்கள் கொழும்பில் கையாடல்

யாழ். பல்கலைக்கழகத்துக்குரிய இரண்டு இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த நூல்கள், கொழும்பில் கையாடல் செய்யப்பட்டுள்ளன. யாழ். பல்கலைக் கழகம் பிரிட்டனிடம் இருந்து கொள்வனவு செய்த நூல்களே இவை. இந்நூல்கள் கொழும்பில், தபால் திணைக்கள பொதிகள் அறையிலிருந்து கையாடப்பட்டுள்ளன. பெறுமதி மிக்க மருத்துவ, வர்த்தக, முகாமைத்துவ துறைசார் நூல்கள் இவற்றில் அடங்கும். ■

## முல்லை மாவட்டத்தில் கோழித் தீன் தயாரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலே பரீட்சார்த்தமாக தயாரிக்கப்பட்டு வரும் கோழித்தீனை இங்குள்ளவர்கள் கோழி வளர்ப்பிற்குப் பயன்படுத்தி வருவதாக, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக விலங்கு வேளாண்மைப் பகுதியினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

அண்மைக் காலங்களில் கோழித்தீனுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்வதாக, இம்முயற்சி அமைந்தள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கோழித்தீன் தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படும் மீன்தூள், சிப்பித்தூள், தவிடு, அரிசிக்குறுணல் போன்றன போதியளவு கிடைக்கக்கூடியதாக இருந்தும் சோளம், இறுங்கு போன்ற தானிய வகைகள் போதியளவு கிடைக்காத காரணத்தால், தொடர்ந்து உற்பத்தியினை மேற்கொள்ள முடியாதுள்ளது எனவும், தொடர்ந்து போதியளவு கிடைக்கும் பட்சத்தில், தரமான கோழித்தீனை உற்பத்தி செய்ய முடியுமெனவும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொழும்பில் தமிழரின் அவலவாழ்க்கை; எவரும், எப்பொழுதும் கைதாகலாம்

நள்ளிரவு வேளைகளில் தமிழர் அதிகமாக வாழும் இடங்கள் என அடையாளம் காணப்பட்ட பகுதிகள் சுற்றி வளைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வீடாகக் கதவு தட்டப்படுகிறது. பொலிசில் பதிவு செய்து பெறப்பட்ட அத்தாட்சிப் பத்திரங்கள் தூக்கி வீசப்படுகின்றன. இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் பெரிய பொலிஸ் வாகனங்களில் பலவந்தமாக ஏற்றப்பட்டு, அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டுசெல்லப்பட்டு ஆடு, மாடுகள் போன்று அடைக்கப்படுகின்றனர்.

வெளிநாடு செல்லவென முகவர்களிடம் பணம் செலுத்திவிட்டு பெருமளவு வாடகை செலுத்தி தங்கியிருக்கும் விடுதிகள், இரவு பகல் பேதமின்றிச் சுற்றி வளைக்கப்படுகின்றன. 'தேசிய அடையாள அட்டைகள்' பரிசீலிக்கப்பட்டு, தமிழர் என அடையாளம் காணப்படுவோர் வாகனங்களில் ஏற்றப்பட்டு அடையாளம் காணப்படாத இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

முக்கிய சந்திகளில் தனிப்பட்ட போக்குவரத்து வாகனங்கள் பொலிசாரால் மறிக்கப்படுகின்றன. வாகனங்களில் பயணம் செய்வோரின் பொதிகள் தீவிரமாகப் பரிசீலிக்கப்படுகின்றன. வடக்கு -கிழக்கைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் இறக்கப்பட்டு வரிசையில் நிறுத்தப்படுகின்றனர். பின்னர் இவர்கள் பொலிஸ் நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுவது வழக்கமாகிவிட்டது. கொழும்பு நகர்ப் பகுதிகளிலும், புறநகர்ப் பகுதிகளிலும் இத்தகைய கைதுகள் சகஜமாக நடைபெறுகின்றன. தமிழர் என்றால் போதும் வயதெல்லை ஆண் -பெண் வேறுபாடின்றி ஆங்காங்கே இந்தக் கைது செய்யும் சம்பவங்கள் யூன் மாதத்திலிருந்து மிகத் தீவிரமாகியுள்ளன. அரச சொத்துக்களுக்கும், உயர் மட்ட அரசியல்வாதிகளுக்கும் ஆபத்து ஏற்படாமல் காப்பாற்றிக்கொள்ளவே இவர்கள் கைது செய்யப்படுவதாக நியாயப்படுத்தப்படுகிறது.

'அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய்' என்பதுபோல் வினோதமான பயத்தினால் பாதுகாப்புப் படையினரும், பொலிசாரும் தமிழர்களை வகைதொகையின்றிக் கைது செய்கின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் விசாரணை என்ற பெயரில் நீண்டகாலம் தடுத்துவைக்கப்படுவதும், சித்திரவதைப்படுத்தப்படுவதும் ஒரு சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

சிறீலங்கா அரசாங்கத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை, பொலிஸ் நிலையங்களினால் உறுதிப்படுத்திக் கொடுக்கப்படும் வதிவிட உறுதிப்படிவங்கள், மற்றும் சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் இருந்தபோதும் கூட, சந்தேகம் எனக்கூறி கைது செய்யப்படுகின்றமையை எவரும் தவிர்க்கமுடியாது.

கைது செய்யப்படுபவர்கள் பொலிஸ் நிலையங்களிலுள்ள விளக்க மறியல் கூண்டுகளிலும் ஏனைய முகாம்களிலும் நீண்ட நாட்கணக்கில் விசாரணையின்றித் தடுத்துவைக்கப்பட்டு மிருகத்தனமாகவும், தரக்குறைவாகவும் நடத்தப்படுகின்றனர். இதனால் பல தமிழ் இளைஞர்கள் விரக்தியின் எல்லைக்குத் தள்ளப்பட்டு ஏனோ தானோ என்ற வாழ்வை நடத்துகின்றனர். பலர் மனரீதியாகப் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

கைது செய்யப்பட்ட தமது உறவினரைத் தேடி அலையும் ஒரு கூட்டமும் கொழும்பு நகரில் சர்வ சாதாரணம். தமது உறவினர் எந்த இடத்தில் கைது செய்யப்பட்டார்? யாரால் கைது செய்யப்பட்டார்? எங்கிருக்கிறார், எப்படிப் பார்ப்பது என்ற பல்வேறு பிரச்சினைகளை இவர்கள் எதிர்நோக்குகின்றனர். பல வாரங்களாகக் கைது செய்யப்பட்டவர்களைக் காணமுடியாமலும் இருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பெரும்பாலும் விடுதிகளிலும் மற்றும் தமிழர்கள் அதிகமாக வாழும் தெகிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, கொம்பனித்தெரு, புறக்கோட்டை, தெமட்டக்கொட, பாலத்துறை, பொரளை, மாளிகாவத்தை, கொட்டாஞ்சேனை, மருதானை, மட்டக்குளி, நீர்கொழும்பு, வத்தளை, பேலியாகொட, ஊருகொடவத்தை, கிறான்பாஸ் போன்ற இன்னும் பல்வேறு பகுதிகளிலும் பிரதான நகரங்களை இணைக்கும் பிரதான வீதிகளிலும் தமிழர்கள் கைதாவது தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது, அவர்கள் கட்டாயமாக நடமாட வேண்டிய வேலைத் தளங்களுக்குச் செல்லவேண்டிய காலை, மாலை நேரங்களிலும், இரவு வேளைகளிலும் இடம்பெறுகின்றது.

இரவு வேளையில் இருப்பிடங்களைச் சுற்றிவளைத்து நித்திரை கொள்ளும்போது கைது செய்யப்படுவது அங்கு வாடிக்கையாகிவிட்டது. பொலிஸ் நிலையங்களின் வாசலில், பெரிய பொலிஸ் வண்டிகளில், வயது வேறுபாடு இன்றியும் ஆண் -பெண் வேறுபாடு இன்றியும் கொண்டுவந்து இறக்கப்படுகின்றார்கள். இந்தப் பரிதாபக் காட்சியை வேடிக்கையாகவும், ஏளனமாகவும் பார்த்துச் சிரிப்பவர்களும் உண்டு.

இவ்வாறு கைது செய்யப்படுபவர்களில் பொலிஸ் விதிகளுக்கு அமைய பொலிசில் வதிவிடங்களையும், பெயர்களையும் பதிவு செய்தவர்களும் அடங்குவது குறிப்பிடத் தக்கதாகும். இது சம்பிரதாயமே தவிர, பதிவு செய்தவர்களைக் கைது செய்யக் கூடாது என்றில்லை என்று பொலிசார் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றனர்.

காலையிலும், மாலையிலும் வீதித்தடைகளைத் திடீரெனப் போட்டு, வாகனங்களைச் சோதனையிட்டு, வேலைத்தலங்களுக்குச் செல்லும் தமிழர்களைக் கைது செய்வதும் ஒரு வகையாகும். சில இடங்களில் இராணுவமும் இன்னும் சில இடங்களில் கடற்படையினரும், வேறு சில இடங்களில் விமானப் படையினரும் இக்கைது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இதைவிட வெள்ளை வான், சிவப்பு வான் போன்றவற்றில் ஒருவர் மட்டும் சீருடை அணிந்தும் ஏனையவர்கள் சிவில் உடையிலும் வந்து தமிழர்களைக் கைது செய்து கொண்டு செல்கின்றனர். இவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் எங்கு கொண்டு செல்லப்படுகின்றனர் என யாருக்கும் தெரியாது. கைது செய்யப்பட்டு பல நாட்களுக்குப் பின்னர் தான் இவர்களைப் பற்றிய தகவல் உறவினர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. சில சமயங்களில் அதுவும் சந்தேகம்தான். வீதியில் நிற்கும் சாதாரண பொலிசார் கூட சில வேளை தமிழரைக் கைதுசெய்வதுபோல் பாசாங்கு செய்து பணம் பறிக்கும் சந்தர்ப்பங்களும் அதிகமாகவே உள்ளது.

கொழும்பில் அரசுடன் ஒட்டி உறவாடும் தமிழ்க்குழுக்கள் தமிழர் அதிகமாக நடமாடும் பஸ் தரிப்புகளிலும், தமது முகாம்களுக்கு அருகே இருக்கும் பஸ் தரிப்புகளிலும் நின்று, தமக்கு சந்தேகம் எனக்கூறி தமிழரை தடுத்துநிறுத்தி அடையாள அட்டையைக் கேட்டு,

**நிமலராஜன்**

அது அப்படி இது இப்படி என்று கூறி, முகாமுக்குக் கொண்டு சென்று, பின்னர் இவ்வளவு பணம் வேண்டும் எனப் பேரம் பேசும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

கைது செய்யப்படுபவர்கள், தலையாட்டி முன்னிலையில் விடப்படுகின்றனர். இவர்களில் அரசாங்கத்திற்கு துதிபாடும் தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். மேலும் வவுனியா, மன்னார் மற்றும் கிழக்கு மாகாணப் பகுதிகளில் கைது செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களும் தலையாட்டிகளில் அடங்குவர். இவர்கள் குறிப்பிட்ட தொகையினருக்கு தலையாட்டினால் மட்டுமே, இத் தலையாட்டிகளுக்கு விடுதலை கிடைக்கும் எனப்பேசிக்கொள்கின்றனர்.

ஆனால் இவர்கள் தலையாட்டாது விட்டால், பல மாதகாலம் தொடர்ந்து தடுத்துவைத்து, சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் அறியமுடிகின்றது.

தலையாட்டியினால் இனம்காணப்படாதவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னர் அவர்களின் விரலடையாளங்கள், மற்றும் சுயவிபரங்கள் பெறப்படும். எத்தனை தடவைகள் கைது செய்யப்பட்டபோதிலும் இதே நிலைதான். இந்த நிலையில் விடுதலை செய்வதற்கு ரூபா 5000 அளவில் பெறப்படுகிறது.

இந்தப் பணம் விசாரணைக்கு என அவரின் இருப்பிடத்திற்கு வரும் விசாரணையாளருக்கு வழங்கப்பட வேண்டும். அதன் பின்னரே விடுதலையை உறுதி செய்ய முடியும். அப்படியில்லாவிடில் பல்வேறு சாக்குப் போக்குகளைக்கூறி ஆகக்குறைந்தது மூன்று மாதம் இழுத்தடித்து விடுதலை செய்யப்படுவது வழமையாகும்.

தலையாட்டியினால் இனம்காணப்பட்டால் அவருக்குத் தடுத்து வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும். இவரை விடுதலை செய்வதானால் செலுத்த வேண்டிய தொகை பெரிய அளவினதாகும். இது ரூபா 50,000 வரை செல்வதுண்டு.

விடுதிகளில் உள்ளவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவது வழமையான நடவடிக்கையாக அமைந்துவிடுகின்றது. அநேக விடுதிகளின் உரிமையாளர்கள் தமது இருப்பிடத்திலுள்ளவர்களைப் பற்றி பொலிசாருக்கு தகவல் கொடுத்து அதன் மூலம் பெரும் பணம் சம்பாதிக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றனர். அதாவது வெளிநாடு செல்லும் ஒருவராயின், அவர் என்று வெளிநாடு செல்ல ஆயத்தமாகின்றார், என்பதை அவர்களின் நடவடிக்கைகள் மூலம் உணர்ந்து பொலிசாருக்கு தகவல் கொடுக்கின்றனர். இதன் பின்னர், தான் பொலிசாருடன் கதைப்பது போல கதைத்து பேரம் பேசி, இவரின் விடுதலைக்கு ஒழுங்கு செய்கின்றார். இதில் பொலிசாருக்கும் இவருக்கும் எத்தனை வீதம் என்று ஒப்பந்தம் இருக்கும்.

இதேபோன்று தான் வெளிநாட்டில் உள்ள தமது உறவினரிடம் பணம் பெறுவதற்காக செல்பவர்களைப் பற்றிய தகவல்களையும் கொடுத்து, அத்தகவல்கள் மூலம் அவர்களைக் கைது செய்ய உடந்தையாக இருந்து பணம் பறிக்கும் செயல் இடம் பெறுகின்றது. வெளிநாடுகளுக்கு பயண ஒழுங்குகளை மேற்கொள்ளும் முகவர்களும், தகவல்களைப் பொலிசாருக்கு வழங்குகின்றனர். வெளிநாடு செல்ல முயல்பவர்களிடையே ஏற்படும் போட்டா போட்டியால், ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுக்கும் நிலையும் அங்கு காணப்படுகின்றது. ஒரு முகவரினால் வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளும் ஒருவரைப் பற்றிய தகவலை, போட்டி முகவர் பொலிசாருக்கு வழங்குவது போன்ற சம்பவங்களும் இங்கு இடம்பெறுகின்றன. சுருங்கக் கூறின் தமிழர்கள் கொழும்பில் அடிமைகள் போல நடத்தப்படுவதுடன், பணம் காய்க்கும் மரங்களாகவும் காணப்படுகின்றனர். 'அவர்களை என்ன செய்தாலும் எவரும் கேட்க மாட்டார்கள்' என்ற நிலையே அங்கு காணப்படுகிறது. ■

## கொழும்பில் தொடரும் கைது 400 பேர் தடுத்து வைப்பு

கொழும்பிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் தொடர்ந்து பல தமிழர்கள் சிறீலங்காப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, பல தடுப்பு முகாம்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் மட்டும் நடைபெற்ற சுற்றிவளைப்பின் போது, பல தமிழர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்ற போதும், தொடர்ந்து 90 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, சிறீலங்காப் பொலிஸாரும் குற்றத் தடுப்புப் பிரிவினரும் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, 400 இற்கு மேற்பட்ட தமிழர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில், ஆறு பெண்களும் உள்ளடங்குவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் தங்கியிருப்பதற்கு, வீடுகளை வாடகைக்குக் கொடுத்த வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு எதிராக, வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும், இவர்கள் இச் சந்தேக நபர்கள் தொடர்பாக தகவல்கள் வெளியிடாமையே காரணம் என அச் சிரேஸ்ட அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். ■

**சட்ட திட்டங்களை**

## அடிக்கடி மாற்றும் நாடுகளில் சிறீலங்காவுக்கு முதலிடம்

சட்ட திட்டங்களை அடிக்கடி மாற்றும் ஒரு நாடாக சிறீலங்கா இருப்பதால், மக்கள் சட்டத்தின் முன் செல்லும்போது, சட்டத்தரணிகள் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டி இருக்கிறது" என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் அஜந்த குமார பி.பி.சியின் சந்தேசிய ஒலிபரப்புக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எழுபதாம் ஆண்டு முதல் 93 ஆம் ஆண்டு வரையிலான 23 வருடத்தினுள் இலங்கை இரண்டு அரசியல் அமைப்புக்களை உருவாக்கியது என்றும், இதேவேளை இந்த அரசியலமைப்புக்கும் பல திருத்த மசோதாக்கள் பல வழிகளில் வந்து கொண்டிருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

எனவே, சுதந்திர நீதிமன்றம் போன்று சுதந்திர சட்டத்தரணிகள் சங்கம் ஒன்றும் உருவாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் கொலைகள் நடைபெற்ற காலங்களில், சட்டத்தரணிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக ஆராய ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். ■

www.tamilarangam.net



# புகலிட இலக்கியத்தின் முகம்

இன்றைய தமிழ் இலக்கியத்தில், "புகலிட இலக்கியம்" என்ற ஒரு அம்சமும்—சேர்ந்து கொண்டுள்ளது, நவீன தமிழ் இலக்கியத்தின் புதிய வடிவங்கள் வெவ்வேறான தரிசனங்களைத் தந்த வேளைகளிலெல்லாம் அதனதன் பாய்ச்சலுக்கேற்பவும், எதிர்த்தும் காலக்குரல்கள் எதிரொலித்தன. இப்பொழுது புதியதொரு அனுபவமாக, வித்தியாசமான பாய்ச்சலாக, இன்னொரு தரிசனமாக புகலிட இலக்கியம் நமக்குப் பரிச்சயமாகி வருகின்றது. இந்தப் புகலிட இலக்கியம் என்பதன் பரிமாணங்கள் பற்றி இப்பொழுது அதிகமாகவும், தீவிரமாகவும் பேசப்படுகின்றதையும் அவதானிக்க முடியும்.

ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து அந்நிய நாடுகளில் புகலிடம் தேடியோரின் படைப்பாக்க, கலையாக்க முயற்சிகளே 'புகலிட கலை, இலக்கியம்' என்ற முகத்தைக் கொண்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, பிரித்தானியா, நோர்வே மற்றும் கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிடையே அநேகமான புகலிட இலக்கியத்தின் மேற்கிளம்புகை தெரிகின்றது. ஈழத்திலிருந்து உலகின் பல திசைகளிலும் தமிழர் வாழ்வு பரவியோ, சிதறியோ இருப்பினும் மேற்சொன்ன நாடுகளிலேயே இலக்கியம் மற்றும் கலை ஆக்க முயற்சிகளின் தீவிரத்தை அவதானிக்க முடிகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் ஈழத் தமிழர் இருப்பினும் அந்தந்த நாடுகளின் நடைமுறை விதிகள் காரணமாக மௌனக் குரலில் சில கீதங்கள் இசைக்கப்படலாம். ஆனால் அவற்றைக் கவனிக்க முடிவதில்லை.

புகலிட இலக்கியங்களில் எமது பார்வைக்குக் கிட்டுவன அங்கிருந்து வெளியிடப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஒலி ஒளி நாடாக்கள், மற்றும் நூல்கள் என்பனவே. அரங்கக் கலையை நாம் தரிசிக்கமுடியாத போதும், அங்கு நிலவும் அரங்கு பற்றிய மதிப்பீடுகளையும், விமர்சனங்களையும், அங்கிருந்து வெளியிடப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகளினூடாக அறிய முடிகின்றது. இவை தவிர கலை இலக்கிய பிரக்ஞைமிக்க நண்பர்களின் மூலமாகவும், அங்கு நிலவும் கலை இலக்கிய முயற்சிகள், தன்மைகள் என்பவற்றையும் அறிய முடிகின்றது. இவற்றைக்கொண்டு புகலிட இலக்கியத்தின் இன்றைய முகத்தைக் காணலாம்.

ஒரு தொடர்ந்த அவதானிப்பில் புகலிட இலக்கியத்தின் சில தன்மைகளைத் தெளிவாகக் கவனங்கொள்ள முடிகின்றது. அவை பிரதானமாக இரண்டு வகைப்படுகின்றன. முதலாவது வகை, தாம் எங்கிருந்தாலும் தாய்மண்ணின் விடிவு, தமது இனத்தின் விடுதலை, என்பவற்றுக்காகச் சிந்திப்பது, குரல் கொடுப்பது, போராடுவது என்ற அடிப்படையைக் கொண்டது. இரண்டாவது வகை, தாம்விரும்பிய ஒரு நிலை இங்கு இல்லையென்பதும், இந்தப் போராட்டத்துடன் இணைய முடியாததற்கான தம் காரணங்களை நியாயப்படுத்தித் தம்மைத் தூய்மையாளராகக் காட்டும் தன்மையதுமாகும்.

Meanwhile, it is reported that at the talks between Delhi and the US in Washington on September 15 and 16, the Clinton administration gave up pushing Delhi to participate in a five nation (US, Russia, India, China and Pakistan) conference on nuclear non proliferation and settled, for the time being, for Delhi's preferred option: bilateral talks with the US on those matters of concern to the US. In October 1963, Delhi and US signed a 30 year treaty on nuclear cooperation. General Electric sold India two small reactors for its Tarapur station. India reprocessed the fuel, making plutonium that was to be kept under safeguards operated by the Internatioanl atomic Energy agency i.e. it could not be put to military use. The question now was: after the treaty expires next month, do the safeguards continue? Can Delhi do whatever it wants with the plutonium it has manufactured at Tarapur? Delhi said: yes, ofcourse. US said: lets talk about it. **And, during the second day of the talks which dealt with regional issues, the US did talk - and called for more confidence building measures between India and Pakistan! Diplomatic observers wondered whether Sri Lanka also figured in the discussions, particularly in the context of President Clinton's declaration at the United Nations General Assembly on September 27 that he was making 'nuclear non proliferation one of our nation's highest priorities' and that the US intended to "weave its nonproliferation strategy more deeply into the fabric of all our relationships with the world's nations and institutions." The question is: how deep is 'deep'?**

# Ethnic Problem? What Ethnic Problem?

*continued from front page*

Eelam Tamil journalist and human rights activist, Subramaniam Sivanayagam, then Head of the Tamil Eelam Information Unit, put it well, in his own inimitable fashion in 1984: "Imagine a habitual wife beater who has been at it for twenty years. Imagine the little woman protesting, arguing, screaming, grappling and having come to the end of her tether one day, snatching the nearest kitchen knife to defend herself against further attacks. And then she says: 'You have tormented me enough. it is impossible to live with you anymore.' with that she files papers for divorce. If you were the judge, what causes would you attribute to the break up of the marriage? The Sri Lankan Government (as probably the habitual wife beater) attributes the causes to the wife snatching the kitchen knife and asking for separation! To any oppressor resistance to oppression is naturally the beginning of the problem."

To Sinhala chauvinism, there is no ethnic problem. To Sinhala chauvinism the problem is the armed resistance of the Tamil people to decades of oppression. President Wijetunga recent speeches expose the true nature of the cancerous growth of Sinhala chauvinism in the Sinhala body politic.

Meanwhile, informed non governmental sources in Geneva have commented that the political context which impelled President Wijetunga to deny the existence of an ethnic problem is significant. President Wijetunga needs foreign aid to meet the staggering annual Rs.20,000 million expenditure on the Sinhala armed forces. But aid donors (particularly those with Tamil refugees) are increasingly restive about continuing to pump money into a seemingly bottomless pit. They have begun to recognise that stability will not come to the island unless the parties to the conflict sit and talk to each other and structure a polity where two peoples, speaking two different languages, having two different histories, may live in equality and in freedom. Sri Lanka's rejection of the recent Nobel Prize Winners Peace proposal has not gone down well.

**Here, the statement of the leader of the Liberation Tigers of Tamil Eelam, Velupillai Pirabakaran, that the LTTE was prepared to consider a federal structure with the North-East forming the Tamil homeland only served to heighten President Wijetunga's discomfiture.**

On the 5 September 1993 the Political Correspondent of the Sinhala controlled Sri Lanka Sunday Times, put his finger on the current political reality on the ground: "With the national political parties continuing to grope in the dark on how to approach the ethnic issue, the Liberation Tigers of Tamil Eelam once again seized the opportunity to confound their adversaries by calling for a negotiated political settlement....The Government itself has been at sixes and sevens in the recent past in coming to grips with the issue...The ongoing war with little headway being made is not only bleeding the human resources of the country but also the economy which could only portend additional problems in the months to come..."

Clearly, President Wijetunga badly needed to boost the morale of his Sinhala constituency which was questioning a war which was 'not only bleeding the human resources of the country but also the economy which could only portend additional problems in the months to come'. He had also to withstand increasing pressures from Western aid donors to resolve the 'ethnic conflict'. What better way to buy time and get over the immediate pressures resulting from the continuing armed conflict in the North-East than by blandly asserting: Ethnic problem? What ethnic problem?

**The final assessment of President Wijetunga's comments may be left, for the time being, with his own Cabinet Minister S.Thondaman In a recent newspaper interview (reported in the Lanka Guardian of 1 October 1993). Minister Thondaman was typically circumspect but also perceptive: "It is the experience of history that statements are made by persons in positions and these statements cannot be interpreted in isolation. One has naturally to consider such statements in the context of general national policy. Persons in positions in any part of the world are constrained to make statements for many a reason, for example to boost the morale of a people."**

# Sri Lanka Army's Kilali Misadventure

***continued from frontpage***

**It was a case of back to square one for the Sri Lanka army - but with more than a hundred Sinhala soldiers dead, almost two hundred wounded and millions of rupees of weapons and ammunition lost to the LTTE.**

The Defence Correspondent of the Sinhala owned Sri Lanka Sunday Times commented: "Day one (of the offensive), with little or no resistance from the (LTTE) buoyed hopes and fuelled visions of a major victory. So much so, media accounts are glowing. But, just, the second day suffered a major set back. Colonel Sarath Fonseka was advancing with an infantry column from Pooneryn towards Chavakacheri when they faced an unexpected ambush. This was after they had moved four kilometres out of Elephant Pass. They were attacked in strength. The men who moved on foot protecting the advancing Czechoslovak built Main Battle Tanks (MBTs) were fired upon, many of them at close quarters.. **As they dropped dead, the Tigers took on the isolated MBTs. As women LTTE cadres provided fire support, their male colleagues fired Rocket Propelled**

**"While we appreciate their (European) concern for human rights and peace in Sri Lanka, we would like to ask them why West European Governments have joined the United States in playing political games while hundreds are massacred in Bosnia."** ...says Sinhala owned Sri Lanka Sunday Times

**Grenades (RPGs). Two tanks were soon ablaze with the men inside. One more was damaged but was still battle worthy. This single encounter left more than 70 soldiers, all from the same battalion, dead.** An equal number including Col. Fonseka were wounded. As the battle hotted up, Tigers also attacked a moving column from the flank... Besides the two MBTs that were destroyed, security forces lost among others, ten machine guns, four light machine guns, 72 personal weapons, four RPGs, two 16mm mortars, grenade launchers, grenades and a large quantity of ammunition... **With the serious debacle on the second day... top brass at the command room were soon rethinking on the original aims... The result was a withdrawal at 6 p.m. on 4 October. At midnight on the same day, the LTTE resumed activity at Kilali. The next day SLAF reconnaissance flights spotted more than 300 boats. It is now known that the Tigers had removed a large number of boats from the area presumably on the advance knowledge that they would come under attack... The security forces expedition to Kilali has been at the expense of 111 dead, 187 wounded and seven missing in action. Apart from human casualties, they have lost equipment worth several million rupees. The loss of equipment is costly not only in terms of money but also of the gain to the enemy."**

**The Editorial Comment of the Sinhala owned Sri Lanka Sunday Times revealed the concerns of the Sinhala establishment:** "The main question that is being asked by the people is why this operation was launched... When the troops finally reached Kilali on Thursday (30 September) and temporarily sealed the LTTE sea route, the army faced the option of proceeding to Chavakacheri or returning to base at Elephant base because it lacked the men and material to hold captured territory. Military analysts say that the army command had asked for more brigades from the East to join the force on the thrust to Chavakacheri. But the political decision was that troops could be transferred from the East only if the army could guarantee that the East would continue to be safe for proposed elections in February next year. Due to lack of man power, the army could not give such a guarantee for the East... Consequently Operation Yal Devi was called off and the troops returned to Elephant Pass. **There is information that another factor which led to the derailing of Operation Yal Devi was the presence and possibly some pressure from the European Parliamentary delegation now in Sri Lanka. While we appreciate their concern for human rights and peace in Sri Lanka, we would like to ask them why West European Governments have joined the United States in playing political games while hundreds are massacred in Bosnia."**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Eelam Tamils demonstrate before European Parliament Office in London - STOP BOMBING JAFFNA



Eelam Tamils in UK belonging to the Association of Christian Tamils, British Expatriate Tamils, Federation of Tamils UK, London Hindu Association, North London Tamil Association, Tamil Refugee Training and Employment Centre, Tamil Refugee Action Group, Tamil Refugee Housing Association, Tamil Information Centre and the Waltham Forest Tamil Sangam demonstrated before the office of the European Parliament at Queens Anne Gate in London on 6 October 1993 against the renewed genocidal attack launched by the Sri Lanka armed forces in late September.

The five hour demonstration which commenced at 1 p.m. ended with a letter being handed over for delivery to the Sri Lanka Committee of the European Parliament consisting of Ms.Anita Pollock M.E.P., Mr.Stan Newens M.E.P., Mr.Mel Reed M.E.P., Lord O Hagan M.E.P. and Mr.Richard Simmonds M.E.P.

The letter pointed out : **"Sri Lanka's latest offensive against the Tamil people comes in the aftermath of its rejection of the peace proposals put forward by four Nobel Prize winners in August this year. The offensive is intended to cut off all access to the Jaffna peninsula, at whatever cost in civilian casualties. In this way Sri Lanka seeks to compel the Tamil people to surrender to its dictate. Its actions appear to be in accordance with the views expressed by its Sinhala President ten years ago: 'The more pressure that I put on the Jaffna people the happier the Sinhala people will be... Really, if I starve the Tamil people out, the Sinhala people will be happy.'"**

The letter quoted the recent comments of the British Refugee Council publication, Sri Lanka Monitor, on the sustained aerial bombardment of Tamil civilians in Jaffna :

*"Daily life in Jaffna is conditioned by the distant drone of aircraft engines and the run to the bunkers behind almost every house. A phalanx of cyclists waits under trees by the side of the road gauging the intentions of the aircraft no more than silver specks in the glare. By night the crump of shells from Karainagar or Palaly thuds through the darkness triggering a nightmare chorus of howling dogs. Over 1,000 civilians have been killed in the three years bombing of Jaffna and almost 1,500 have died from gruesome injuries. Another 1,000 children died needlessly in 1992 because Jaffna hospitals lack basic drugs and medical equipment to save them. ...There were no warnings, no air-dropped leaflets announcing operations. Why should there be? After all, no one is watching. There will be no international protest or outcry... The Sri Lankan airforce lack the technology and advanced intelligence to pinpoint legitimate targets. The LTTE for all their ingenuity lack anti-aircraft defences. When defence sources say two LTTE arms factories were destroyed in another air raid on 30 July in Vaddukkottai, it means Jaffna student Thayaparan Muhunthan, 20, was blown apart and ten others including two-year old Sunthararam badly injured."*

**The letter concluded: "The actions of the Sri Lanka government are in gross breach of the humanitarian law of armed conflict and amount to war crimes. We appeal to you to tell the Sri Lanka Government that the world is watching and prevail upon it to: stop its genocidal attack on the Tamil people and end the aerial bombardment of Tamil towns and villages.**

**"Over 1,000 civilians have been killed in the three years bombing of Jaffna ...The Sri Lankan airforce lacks the technology and advanced intelligence to pinpoint legitimate targets...There are no warnings, no air-dropped leaflets announcing operations."**

## A VIEW FROM THE ENEMY'S CAMP

**"...I had occasion once to ask a newsman who was censorious about the way we tackled the (ethnic?) problem, why they were publishing military secrets in their newspapers which were definitely prejudicial to our war effort."** *(Sinhala Sri Lanka Prime Minister Ranil Wickremasinghe speaking at a Public Rally on 15 August at Nawagattegama in South Sri Lanka)*

**"Military analysts are of the view that the Tigers have a growing strength in the plantations - that there is infiltration from the East to Badulla onwards through Moneragala. Tiger infiltration in Colombo too is heavy and as many as 150 military wing cadres who had fought the (Sri Lanka army) and the IPKF were (reportedly?) arrested in Colombo during the last three weeks. According to official (Sri Lankan) estimates there are now 10,000 hard core LTTE cadres, 12,000 peripheral cadres and 2000 women cadres. In addition they have homeguards in most villages who join in when the Tigers stage an attack in their areas. There are also helpers drawn from the villages who are used to carry logistics (sic) during times of battle."** *(Sinhala owned Sri Lanka Sunday Island, 29 August 1993)*

"Military analysts say that a consignment of powerful weapons reached Jaffna recently. They included fifty .50 machine guns for the Tigers to beef up their anti aircraft operations. An aircraft has to fly at over 2000 feet in order to avoid flak from the five zeros. It is believed that some of the new machine guns were used on the (Tiger) attack on 25 August on (Sri Lanka) naval inshore patrol boats which were themselves fitted with five zero machine guns. " *(Sinhala owned Sri Lanka Sunday Island, 29 August 1993)*

**"A new set of military commanders and intelligence operatives had replaced the old in key changes in the LTTE's strategy... The new commanders have been appointed by LTTE leader Pirabakaran over the past two years, sources revealed.... After the changes, the new Tiger commanders had staged some spectacular strikes against the (Sri Lanka) military. There have also been key changes in the Sea Tigers, an elite unit responsible for sea borne operations and especially the transport services between the mainland and the peninsula across the Jaffna lagoon... (The earlier commanders) had been replaced with daring young commanders with years of combat experience, sources said. Since the new set of commanders launched operations, probably in January 1992, the (Sri Lanka) army had lost about 1250 men. The Tigers overran the army camps at Koddaikadu and Janakapura and removed at least Rs.70 million worth of military equipment... The new set of leaders were not in the public. Their identities, movements and other details remained secret with rebels imposing a veil of secrecy."** *( Sinhala Correspondent, Sharmina Fernando reporting in the Sinhala owned Sri Lanka Sunday Island, 22 August 1993)*

## "Sinhala Army lowers recruitment age to 17 and minimum height to five feet to urgently form new combat units"

**The Sinhala owned Sri Lanka Sunday Island reported on 22 August 1993: "The (Sri Lanka Sinhala) army command has lowered education qualifications, minimum height and age requirements for recruits in its search for men to urgently form new combat units. Anyone who has studies upto grade five, is not less than five feet in height and is between 17 and 25 years old could join the army. Earlier the army sought those who had passed grade eight, were not less than five feet four inches in height and were between 18 and 24 years."**

The report added: "The Sunday Island learns the government has agreed to release additional funds to raise new battalions and improve the fighting capabilities of the men after the LTTE wiped out the Janakapura camp on 25 July... Army headquarters believe that the necessary number of men could be found expeditiously in view of the lowered qualifications to join the army. **After ten years of fighting and several thousands soldiers killed and wounded today the army finds it difficult to find young men to wage war particularly because of political and military miscalculations resulting in stunning set backs."**

### Sri Lanka army recruits among school students

Meanwhile the Sri Lanka Army has launched a recruitment drive amongst school students. The Colombo based daily, the Virakesari reported on 19 September that a Sinhala Army Commanding Officer addressing a specially convened meeting of students at Saiva Pragasa Vidyasalai said: **"Those students who wish to join the army will earn a starting salary of Rs.2500 per month. They will also be sent to countries such as Lebanon to be trained."** All students studying at grade 10 and above at the main schools in Vavuniya were invited for this meeting which was held on Friday 17 September. Virakesari reported that the Army Officer added: "Those who wish to join up for duty in the North-East will be paid an additional incentive of Rs.600 per month. Please join the army now."

### Joint Operations Command disbanded

**In another move to bolster Sri Lanka's military efforts, President D.B.Wijetunge disbanded the Joint Operations Command (JOC) in mid September.** Under the reorganisation, the armed forces will operate under the respective commanders of the army, navy and airforce. The previous General Officer Commanding Joint Operations, Gen.Hamilton Wanasinghe has been appointed the new Defence Secretary.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையில் தமிழர்களின் தற்போதைய நிலைப்பாடு சரியானதா?...

அளித்தும், சிங்கள அரசு எவ்வித நடவடிக்கையினையும் எடுக்கத் தவறினால், "சுயநிர்ணய உரிமையின்" அடிப்படையில் தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்தினையும் உரிமைகளையும் வென்றெடுக்க அரசுக்கு எதிராக அறவழி நேரடி போராட்ட நடவடிக்கையில் இறங்கும் என சிங்கள அரசாங்கத்திற்கு அறிவித்தபடியாலும்,

11. 1975-2-6 அன்று நடைபெற்ற இடைத் தேர்தலில் காங்கேசன்துறை வாக்காளர், அதிகப் பெரும்பான்மை வாக்குகளால் **"சிங்கள அரசாங்கத்தினால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட குடியரசு அரசியல் அமைப்பை" நிராகரித்து சுதந்திர இறைமையுள்ள மதச் சார்பற்ற, "சோசலிச தமிழீழ அரசை" மீள்வித்துப் புனரமைப்புச் செய்யக் கட்டளையிட்டபடியாலும், 1976-5-14 திகதியாகிய இன்று "இத்தீவில் உள்ள தமிழீழத் தேசத்தின் குடிமக்களாகிய தமிழரின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் உரித்தான சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திர சோசலிச தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.**

மேலும், "தமிழீழ விடுதலைக்கான புனிதப் போரில் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்க முன்வருமாறும், இறைமையுள்ள சோசலிச தமிழீழ அரசு என்ற இலட்சியத்தை அடையும்வரை தயங்காது போராடுமாறு தமிழ்த் தேசிய இனத்துக்குப் பொதுவாகவும், தமிழ் இளம் சமூகத்துக்குச் சிறப்பாகவும் இம்மகாநாடு அறைகூவல் விடுக்கின்றது" என்றவாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தீர்மானம் முடிகிறது.

இத்தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்ட 1977-7-22 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், "தமிழீழத் தேசத்தின் விடுதலைதான் எமது முடிந்த முடிவு - இதுதான் எமது இறுதித் தேர்தல் -தமிழ் மக்களே! உங்களது பொன்னான வாக்குகளை எமக்கு அளியுங்கள். இளைஞர்களே, யுவதிகளே வாக்களிக்கக்கூடிய அனைத்து மக்களையும் (வயதானவர்கள், நடக்கமுடியாதவர்கள் உட்பட) தேர்தல் வாக்குச்சாவடிக்குக் கொண்டுவந்து வாக்களிக்க வையுங்கள்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வேண்டுகோள் விடுத்தனர். இவர்களின் வாய்வீரத்தை நம்பிய மக்கள் அலையலையாகச் சென்று தமிழீழ இலட்சியத்துக்காக வாக்களித்தார்கள். இளைஞர்களும், யுவதிகளும் வீடுவீடாகச் சென்று மக்களை வாக்குச் சாவடிக்குக் கொண்டு வந்தார்கள். மக்களின் பேராதரவின் மூலம் பெரும் வெற்றி பெற்ற கூட்டணியினர் பாராளுமன்றம் சென்றனர். சென்றவர்களை வரவேற்பதுபோல் சிங்கள ஜே. ஆர். அரசு, 1977-8-16 இல் தமிழினப் படுகொலை ஒன்றை நடாத்தி முடித்தது. சென்றவர்கள் சென்றவர்கள்தான். கூட்டணியினர் என்னத்தைச் சொல்லி தமிழீழ மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றோம் என்பதனை மறந்து பாராளுமன்றக் கதிரைகளைக் கட்டிப் பிடித்தபடி சிங்கள அரசினருக்கு துதிபாடிக் கொண்டிருந்தனர். சிங்கள அரசினர் காட்டிய மாயமான்களாகிய பிரதேச சபை, மாவட்ட சபை, மாகாணசபை ஆகியவற்றின் பின்னால் சென்று பொதுவாகத் தமிழீழ மக்களுக்கும், குறிப்பாகத் தமிழ் இளம் சந்ததியினருக்கும் துரோகம் செய்யத் தொடங்கினர். இத்துரோகம் இன்றும் தொடர்கிறது.

ஆனால் மேற் குறிப்பிட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு சில வருடங்களின் முன்பாகவே தமிழ் இளம் சமூகத்திடையே, தமிழீழ விடுதலைக்கான புரட்சிகர ஆயுதப் போராட்டத்திற்கு வித்திடப்பட்டுவிட்டது.

சிங்கள இனத்தால், தமிழ் மக்களின் மீது திட்டமிட்ட முறையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளும், இனஅழிப்பும் இளைய சந்ததியினருக்கு உயர் கல்விவாய்ப்புக்களும் வேலை வாய்ப்புக்களும் மறுக்கப்பட்ட நிலையில் ஏற்பட்ட விரக்தியும், தொடர்ச்சியாகச் சாத்வீகப் போராட்டங்கள் அலட்சியப்படுத்தப்பட்டு ஆயுத முனையில் முறியடிக்கப்பட்டு வந்த நிலையில்கூட, பாராளுமன்றத் தமிழ் அரசியல்வாதிகள் எந்தவொரு ஆக்கபூர்வமான மாற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது, காலம் கடத்தி வந்ததாலும் தமிழ் இளம் சமூகத்திடையே தீவிரமான போராட்ட உணர்வு உருவாகியது. அவ்வுணர்வு, 'புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் மூலமே தமிழினம் விடுதலை பெறமுடியும், விடுதலை பெற்ற தமிழீழத்திலேயே தமிழினம் சுதந்திரமாக -கௌரவமாக - பாதுகாப்பாக வாழமுடியும்' என்பதுதான்.

1970 களின் ஆரம்பத்தில் எதேச்சையாகக் கட்டுப்பாடற்ற முறையில் பிரவாகம் எடுத்த அரசியல் வன்முறை எழுச்சிகள், புரட்சிகர அரசியல் கோட்பாட்டையும் புரட்சிகர ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளையும் கொண்ட அமைப்பையும் புரட்சிகரத் தலைமையையும் நாடி நின்றன. இந்தப் புரட்சிகர அரசியல் சூழ்நிலையில்தான், அதாவது 1972 இல் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது. இந்தப் புரட்சிகர இயக்கம் தமிழீழத்தின் தேசியத் தலைவரும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பிரதம இராணுவத் தளபதியுமான வே. பிரபாகரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்ப காலத்தில், 'புதிய தமிழ்ப் புலிகள்' என்ற பெயரில் அழைக்கப்பட்டு பின்பு முழுத் தமிழீழ மக்களையும் பரந்துபட்ட ஆயுதப் போராட்டத்தில் ஒன்றிணைக்கும் நோக்குடன் சட்ட, திட்டங்கள் மாற்றப்பட்டு 1976-5-5 இல் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற பெயரைச் சூட்டிக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்ப கால நடவடிக்கைகள் கெரில்லாப் போர் முறையிலேயே ஆரம்பமாகின. காரணம், கெரில்லாப் போர் முறையானது ஒரு வெகுசனப் போராட்ட வடிவம். கெரில்லாப் போராட்டத்தை மக்கள் மத்தியில் படிப்படியாக நிலைப்படுத்தி மக்களின் பங்களிப்போடு விரிவுபடுத்தி, வெகுசன யுத்தமாக பரிணாமம் பெறச் செய்யும் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

அரசியல் ரீதியான செயற்பாட்டில் இவர்களின் நிலைப்பாடு "ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளுக்குப் புறம்பான இருகட்டமாக அல்லது அவற்றுக்கு முன்னோடியாக அரசியல் பிரச்சாரத்தை மேற்கொள்வது என்பது, எதிரியை விழிப்படையச் செய்வதுடன் பிரச்சாரத்தில் ஈடுபடும் போராளிகளை அழிவுப் பாதையில் இட்டுச் சென்று இராணுவ நடவடிக்கைகளுக்குச் சாதகமான பகுதிகளை அம்பலப்படுத்துவதாக முடியும். அத்துடன் தமிழீழச் சூழ்நிலையில் வலிமை வாய்ந்த அரசியல் பிரச்சார வடிவம் என்றால் அது வெற்றிகரமான ஒரு இராணுவ நடவடிக்கைதான்" என்பதாகும்.

மேற்குறிப்பிட்டவாறாக இராணுவ, அரசியல் செயற்பாடுகளை நடாத்திச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளையும், இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களையும் போர்க்களத்தில் பலிகொடுத்த நிலையிலும் மக்கள் பலமும், மனப்பலமும், இராணுவப் பலமும் கொண்டு சிங்கள இனவெறியர்களுடன் போராடி வருகிறார்கள்.

இதனால் சினம்கொண்ட சிங்கள இனவாதம், தமிழினத்தின் மீது பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை, மருந்துப் பொருள்களுக்கான தடை, விமானக்குண்டு வீச்சு, செல்லடி, பீரங்கித் தாக்குதல் என்றவாறாக தமிழினத்தின் உயிர் மூச்சில் கால்பதிக்க முனைகின்றது. தமிழ் மக்களிடையே விரக்தி நிலையைத் தோற்றுவித்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை அழிக்க முயல்கிறது. இதற்கு தமிழ்க் கூலிகளையும் பயன்படுத்துகிறது. தமிழ் மக்கள் இன்றுபடும் துன்ப துயரங்களுக்குக் காரணம் 'அவர்களால் நடாத்தப்படும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தான்' என்று கூறி சிங்கள இனவெறியர், தாம் தமிழர்களுக்குக் கடந்த 45 ஆண்டு காலத்தில் புரிந்த கொடுமைகளை மறைக்கப் பார்க்கிறார்கள். இந்த இடத்தில்தான், தமிழினம் மிக மிக விழிப்பாக இருக்க வேண்டும். மிக மிக உறுதியாகவும் இருக்க வேண்டும்.

சிங்கள இனம் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து எம்மினத்தின் மீதும், எம் தாய்ப்பூமிமீதும் ஏவிவிட்டுள்ள பயங்கரவாதச் செயல்களுக்குப் பயந்து, அவர்களிடம் சலுகைகளுக்காகக் கையேந்தினால் நாம் அடிமைகளாகத்தான் வாழவேண்டும். காலப் போக்கில் தமிழினமே சிங்கள இனவாதப் பூதத்தால் முழுமையாக விழுங்கப்பட்டுவிடும்.

சிலர் கூறுகிறார்கள்; 'இந்தியா எமது அயல்நாடு. பெரிய நாடு. தென்னாசியாவில் பலம் பொருந்திய நாடு. தமிழர்கள் மீது இந்தியாவுக்கு நல்லுறவு இல்லை. அதனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தற்போதைய நிலைப்பாடு சரியானது அல்ல' என்கிறார்கள். இது பிழையானதொரு விளக்கம். 1987-7-29 இல் இந்திய -சிறீலங்கா ஒப்பந்தத்தை தமிழீழ மக்களின் ஒப்புதல் இன்றிச் செய்த இந்தியா தனது படைகளை தமிழீழப் பகுதிகளுக்கு அனுப்பியபோது, அவர்கள் தம் இருண்ட வாழ்வில் ஒளியேற்றப் போகிறார்கள் என நம்பிய தமிழ் மக்களைத் தமது முதுகுக்குப் பின்னால் கொண்டு வந்த தீப்பந்தங்களால் உயிருடன் கொளுத்தி தமிழீழத்தையே சுடுகாடாக்கிய பின்னரே இந்திய இராணுவம் திரும்பிச் சென்றது. சமாதான முயற்சி ஒன்றுடன் தமிழீழம் திரும்பிய 'கேணல் கிட்டுவை' நடுக்கடலில் சாகடித்து, தமிழீழ மக்களின் வாழ்வில் வெளிச்சமே ஏற்படக்கூடாது என்று கங்கணம் கட்டிநிற்கும் இந்திய அரசிடம், தமிழ் மக்கள் தம் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி கையேந்தி நிற்கமாட்டார்கள். ஆனால், தமிழீழ மக்கள் இந்திய மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. இந்திய மக்களுக்கு இருக்கும் அதே சுயநிர்ணய உரிமைகள் தமக்கும் உண்டு என்பதனையே வலியுறுத்துகிறார்கள். தாம் இந்திய மத்திய அரசுக்கு எதிரானவர்கள் அல்ல, இந்திய மத்திய அரசு தன் சுய இலாபங்களுக்காக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்து, தமிழ் மக்களை சிங்கள இனத்திடம் நிரந்தர அடிமைகளாக்கும் நீதியற்ற சுத்த சுயநலப் போக்கினை நிராகரிப்பதிலேயே இந்தியாவுடன் முரண்படுகிறார்கள். இதில் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டியது இந்தியாவே. தமிழீழ மக்கள் தம் இன்றைய சரியான நிலைப்பாட்டில் உறுதியாகவே நிற்க வேண்டும்.

இவ்வருட முற்பகுதியில் இலண்டன் பி. பி. சி. க்கு பேட்டியளித்த தமிழீழத் தேசியத் தலைவர். - வே. பிரபாகரன் அவர்கள், "வடக்கு -கிழக்கு இணைந்த தமிழர் பூரண சுயாட்சி அதிகாரம் உள்ள சமஸ்டி அமைப்பு" சமாதானத் தீர்வு முயற்சியாக சிங்கள அரசால் முன்வைக்கப்பட்டால், அதனைத் தாம் பரிசீலிக்கத் தயார் என்று கூறினார்.

இதுபற்றி சிங்கள அரசோ, சிங்கள மக்களோ சிறு துளியும் சிந்திக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளை நம்பமுடியாது என்பவர்கள் ஏன்? சர்வதேச சமாதான முன்னெடுப்பாளர்களின் மத்தியஸ்த்தத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த முயற்சிக்கவில்லை. காரணம், அவர்களுக்கு (சிங்களவர்களுக்கு)த்தான் சமாதானத்தில் விருப்பமில்லை. அவர்களின் விருப்பமெல்லாம் தமிழினத்தையே அழிக்க வேண்டும் என்பதுதான்.

அண்மையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மகாநாட்டில் உரையாற்றிய சிறீலங்கா சிங்களப் பிரதிநிதி பின்வருமாறு கூறினார்; அதாவது "தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்தால், சிங்களப் பகுதிகளில் வாழும் தமிழர்களின் உயிர்களுக்கு சிங்களவரால் உயிராபத்து ஏற்படும்" என்று பகிரங்கமாக மிரட்டியுள்ளார்.

தற்போதைய புதிய சிங்கள ஜனாதிபதி ஒரு பத்திரிகைப் பேட்டியில் கூறுகிறார்; இங்கிருப்பது இனப்பிரச்சினையல்ல. பயங்கரவாதப் பிரச்சினையே" என்று.

இந்நிலையில் தெளிவாகத் தெரியும் ஒரு விடயம் என்னவெனில், "இன்றுள்ள தமிழரின் நிலைப்பாடு சரியானது. இந்த நிலைப்பாட்டில் இருந்து இம்மியளவு விலகினாலும் சிங்கள இனவாதம், தமிழினத்தைச் சுலபமாக விழுங்கிவிடும்" என்பதாகும்.

இனிமேல் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் வாழ முடியாது. தமிழீழ மக்கள் தமக்குரிய தமிழீழ அரசை அமைத்தால்தான் தமது சுதந்திரமான, கௌரவமான, பாதுகாப்பான பொருளாதார வாழ்வை மேம்படுத்தலாம்.

தமிழீழம் அமைவதில்தான், தமிழீழ மக்களின் 'உயிர் வாழும் உரிமை' பாதுகாக்கப்படும். இத்தனை வீரஞ்செறிந்த போராட்டங்களின் பின், வீர மகா சாதனைகளின் பின், இத்தனை பெரிய இழப்புக்களின் பின் நாம் எமக்கு இன்றுள்ள இக்கட்டான பொருளாதாரப் பிரச்சினைகளுக்காக ஓரளவு இறங்கிவந்தால் அதனால் எம்மினத்துக்கு ஏற்படும் இழிவையும், இழப்பையும் என்றைக்குமே மீட்டுக்கொள்ள முடியாது. என்றைக்கும் நாம் அடிமைகள். எமது பிள்ளைகள் அடிமைகள். பிள்ளைகளின் பிள்ளைகள் அடிமைகள்தான் என்பதனை எழுதி வைத்துக் கொள்ள வேண்டியதுதான். அப்படிப்பட்ட ஒரு இழிவான வாழ்வை எமது எதிர்காலச் சந்ததிக்கு சொத்தாக விட்டுச் செல்வதைவிட, ஒட்டுமொத்தமாக தமிழீழ விடுதலைக்காக போராடி நாம் அழிந்து போவதே மேல்.

எனவே, தமிழினம் தன்னை சகல அடக்குமுறைகளிலும் இருந்து விடுவித்துக்கொள்ளும் இறுதி நேரமாக இன்றைய காலகட்டம் உள்ளது.

வெளிநாடுகளில் அகதிகளாக வாழும் நாம் அனைவரும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களின் தேசிய இராணுவமாக முன்னணியில் நின்று போராடி வரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களை வலுப்படுத்த நிதி உதவி செய்ய முன்வரவேண்டும். வெளிநாடுகளில் வாழும் மக்களிடம் அவர்கள், இரத்தத்தைக் கேட்கவில்லை. உயிரைக் கேட்கவில்லை. தமது கரங்களை வலுப்படுத்த நிதியுதவி செய்யும்படியே கேட்கிறார்கள். நாம் உயிர் வாழ, தம்முயிரை அர்ப்பணிக்க காத்திருக்கிறார்கள்.

நாம் பிறந்து, தவழ்ந்து, விளையாடி வந்த மண்ணை மீட்க, எம் அனைவரையும் பங்களிப்புச் செய்யும்படி கேட்கிறார்கள். இன்றைய இந்த வரலாற்றுத் தேவையைப் புரிந்து கொண்டு நாம் அனைவரும் பங்களிப்புச் செய்ய முன்வருவதுடன், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவையை வெளிநாட்டு மக்களுக்கு விளக்கி அவர்களின் தார்மீக ஆதரவையும் நாம் பெற முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் எமது தேசிய விடுதலைப் போராட்டம் சர்வ தேச அங்கீகாரத்தைப் பெற முடியும். சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதும் வெளிநாட்டில் வதியும் தமிழ் ஈழத்தவரின் முக்கிய கடமையாகும்.

மிகுதியாக உள்ள எமது வாழ்வில் எந்தளவு கஸ்டங்களை எதிர்நோக்கினும் எதிர்கால தமிழீழச் சந்ததிக்கு, தமிழீழ தேசத்தை விடுதலையாக்கி விட்டே நாம் சாக வேண்டும். எமது அப்புவும் ஆச்சியும் விட்ட தவறை நாமும் விட்டு எமது எதிர்காலச் சந்ததியை அகதிகளாக, அடிமைகளாக உலகம் பூராகவும் அலையவிடக் கூடாது.

கடந்த 45 ஆண்டுகால தமிழர், தமது வரலாற்றைத் திருப்பிப் பார்க்கின்றபோது, "இன்றைய தமிழர்களின் நிலைப்பாடு சரியானதே". எனவே இந்த சரியான நிலைப்பாட்டில் இருந்தே தமிழீழம் மீட்கப்பட வேண்டும். இன்றுள்ள தமிழினமே அழிவதானாலும் எதிர்கால தமிழீழ மக்களுக்குத் தமிழீழத்தை விடுவித்துக் கொடுத்தே அழிய வேண்டும். ■

**நன்றி: 'உலகத் தமிழர்'**

## காங்கேசன் சீமேந்து ஆலை மார்கழியுடன் மூடிவிட திட்டம்

**எதிர்வரும் மார்கழி மாதத்துடன் சீமெந்து ஆலையை மூடிவிட சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் ஏற்பாடு செய்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.**

**இதனால் 850 பேர் வேலை இழப்பார்கள். இவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் வேலை இழக்கும் தொழிலாளி ஒருவர் ஆகக் கூடுதலாக இரண்டு இலட்சம் நட்டஈடு பெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ■**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலட்சியங்கள் வாழ்கின்றன

சிறுகதை

ரமணன்

மணலாற்றின் எல்லைப்புறத்தில் வளர்ந்து நிற்கும் காட்டு மரங்கள் சல சலத்து 'சுதந்திரம்', 'சுதந்திரம்' என்ற ஓசையை எழுப்பிய வண்ணம் இருக்கின் றன.

எதிரிகளின் வரவைக் கண்நோக்கி, கைகளிலே துப்பாக்கியுடன் பனிக்குளிர் உடலில் பரவ, நானும் என் தோழிகளும் தரையிலே படுத்திருக்கின்றோம். விடிவை வரவேற்கும் பறவையினங்க ளின் ஒலி காற்றிலே படர்ந்துவர, காலைக் கதிரவன் ஒளிக்கிரணங்களை வீசி, ராஜ நடை நடந்து வான வீதியில் வருகின்றான்.

எனது அணியின்ரின் காவல் பணி முடிந் ததும், அந்த இடத்திற்கு வேறு தோழி கள் மாற்றப்பட்டனர். நாம் சிறிது ஓய் விற்காக பாசறை நோக்கி புறப்பட் டோம்.

பாசறையின் ஒரு ஓரத்தில், வீரச்சாவை தழுவிவிட்ட தோழன் ஒருவனின் வர லாற்றுப் புத்தகத்தில் மூழ்கியபடி இருந்த நான், சிறிது நேரத்தில் கண் ணயர்ந்து விட்டேன். துர்க்காவின் கை என்னில் பட்டதும் துள்ளிக் குதித்து எழுந்தேன். போர் முனையில் இருக்கும் எந்த வீரர்களாயினும், தன்னை மறந்து இருந்து விடக்கூடாது என்பது ஓர் விதி. தூக்கக் கலக்கத்துடன் எழுந்த நான், எனக்கு முன்னே ஓர் கடிதத்துடன் நின்ற துர்க்காவை உற்று நோக்கினேன். அவள் என்னைப் பார்த்தபடி கடிதத்தை நீட்டினாள். வாங்கிப் பிரித்த நான் சிறிது நேரம் சிலையானேன்.

"கவலைப்படாதே! எல்லோருக்கும் நடப் பதுதான். உன்னை உடனடியாகப் புறப் பட்டுச் செல்லட்டாம்" என்றாள் துர்க்கா. ஒழுங்குகள் எல்லாவற்றையும் அவளே கவனித்துள்ளாள் என்பது எனக்குப் புலனாகியது.

பத்துமாதம் என்னைச் சுமந்து பெற்ற என் தாய், இவ்வுலகைவிட்டு மறைந்து விட்டாள். அவளின் உயிரற்ற உடல், எனக்காக இந்த மண்ணிலே காத்துக் கிடக்கின்றது. அவளை இறுதி நேரம், இறுதியாக நான் போய் பார்க்க வேண் டும். என்னதான் இருந்தாலும் போர் முனையிலே திடங்கொண்ட நெஞ்சுறுதி யுடன் எதிரியுடன் போர் புரிந்தாலும், என் அன்னையை இழந்து விட்டேனே என்ற அந்த நினைவு தாங்க முடியாமல் இதயத்தை அழுத்தியது. கடந்தகால அவளின் வாழ்க்கை... எனக்காக அவள் பட்ட இன்னல்கள்... மனம் வெந்து அழுதது. என் நிலையை என் னுடனே இருந்து கவனித்த துர்க்கா, ஏதோ ஆறுதல் வார்த்தைகள் சொல்லு கின்றாள். அவை ஒன்றும் என் மனதில் பதியவில்லை. என் மனதில் என் அம் மாவின் உருவம் தான் நிறைந்திருந்தது. கண்ணீர் என்னை அறியாமலே கன்னத் தில் வழிந்தது.

"என்ன ஜெய்சி குழந்தைப்பிள்ளை மாதிரி.... அழாதையும். நீர் ஒரு திடங் கொண்ட விடுதலைப்புலி வீராங்கனை என்பதை மறந்துவிட்டீரா? எத்தனை சாவுகளை கண்ணெதிரே கண்ட நீர், இப்படிக் கலங்கக் கூடாது" என் தோழி துர்க்காவின் குரல் எனக்கு இப்போது தெளிவாகக் கேட்கின்றது.

வாகனத்தில் எப்படி ஏறி அமர்ந்தோம், பல மைல்களுக்கப்பால் உள்ள குமுழ முனைக் கிராமத்தை எப்படி அண்மித் தோம் என்பது எனக்கு தெரியவில்லை. அழகிய அந்தக் கிராமம், இராட்சதப் பிறவிகளால் வானிலிருந்தே சிதைக்கப் பட்டிருந்தது. வீடு வாசல்கள் இடிந்தும், விழுந்தும், கால்நடைகள் இறந்தும் கிடந்தன. வாசலில் கட்டப்பட்டிருந்த வாழையும், தோரணங்களும் என்வீட்டில் நடந்த இழப்பு நிகழ்வை வெளிப்படுத் தின. எமது வாகனம் போய் நின்றதும், என் தோழிகளும் நானும் இறங்கி வள வினுள் சென்றோம். உறவினர்களில் சிலரும், மற்றும் பலரும் எம்மை எட்டிப் பார்த்தனர். அவர்களின் முகங்கள் காய்ந்து, வரண்டு சோகமாக காட்சிய ளித்தன. என்னைச் சூழ்ந்துகொண்ட உறவினர்கள் ஒப்பாரி வைத்து அழுதார் கள். பறை மேளம் முழங்கியபடி இருந் தது. அம்மா -அழகான வெள்ளை ஆடையில் மாலுக்குள் இருந்த கட்டி லில் படுத்திருந்தாள். அவளின் முகத் தில், நான் காலங்காலமாக பார்த்த ஏக் கம் விலகாமல் படிந்து போய் கிடந்தது.

சுற்றிவரப் பலர் தத்தம் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். அம்மாவின் முகத் தைப் பார்த்து அழுது தீர்த்த நான் நிமிர்ந்தேன். என் முன்னே என் தாயின் தமையனார்-என் மாமா சிதம்பரமுதலி யார்-விசும்பி அழுது கொண்டிருந்தார். மாமா... இப்படி... என்னால் நம்பமுடி யவில்லை. என் மாமாவைப் பார்த்து,

"மாமா, கொஞ்சநேரம் இப்படி வாங்கோ" என்றேன். என்னைப் பின் தொடர்ந்தவர்...

"என்ன பிள்ளை என்ன சங்கதி" என் றார். சொல்ல வந்ததை சொல்லத் தெரியாமல் நான் மௌனமாக நின்றேன். மாமாவே தொடர்ந்தார்.

"எங்கட குலம் பலரால் பாராட்டப் பெற்ற, முதலியார் பரம்பரையில் வந்த வேளாளர் குலமெண்டு எல்லோருக்கும் தெரியும் பிள்ளை. இந்த ஊரிலே ஒரு வருக்கும் செய்யாத முறையிலே இந்தச் சாவீட்டை நடத்திக் காட்டிறன் பார்" என்று பெருமை பேசியபடி என்னைப் பார்த்தார். அவரின் இந்த வார்த்தை களை என்னால் ஜீரணிக்க முடிய வில்லை. எனக்கு வந்த கோபத்திற்கு என்ன செய்வதென்றே தெரியாமல், சிறிது நேரம் அமைதியானேன்.

"என்ன பிள்ளை நேரம் போச்சுதெல்லே -இஞ்ச தம்பி அந்தோனியைப் பிடிச்சு, பொம்பிளையளைக் கூட்டிக் கொண்டு போய் குளிப்பாட்டுற வேலையைக் கவ னியுங்கோ" மாமா சுறுசுறுப்பாக நின் றார். ஒரு சுறுட்டை எடுத்து பற்ற வைத் தபடி என்னைப் பார்த்து,

"பிள்ளை உப்படி பேசாமல் இருந்தால் நான் என்னசெய்கிறது" என்றார் புகை யைவிட்டபடி. வறுமையில் வாடிய போது எம்மை வந்து எட்டிப் பார்க்காத இந்த மாமா, இப்ப எனது அம்மாவின் சாவில், தமது புகழை நிலைநாட்டத் துடிக்கிறார். என்னுள் ஒரு வேதனைச் சிரிப்பை உதிர்த்த நான், "மாமா இந்த சமுதாயத்தில் சாதி ஒழிப்பை மேற்கொ ண்டு, அடிமைத் தொழில்களை எல் லாம் அடியோடு ஒழிக்க வேணும் எண்ட ஓர் கொள்கையை, நாங்கள் மக்களின் முன் வைத்துள்ளோம். சனமும் இப்ப இதுகளை கைவிட்டு வருகின்றார்கள். இப்படி ஒரு நல்ல காலம் மலர்ந்து வரேக்கை, அது என்ர அம்மாவின் சாவால் அடியோடு மாறக்கூடாது".

என் நெஞ்சத்து உணர்வுகளை கொட்டி விட்டு, மாமாவைப் பார்த்தேன். முகத் தில கோபம் பொங்க, "பிள்ளை நான் ஆருக்கு இதுகள் எல்லாம் செய்தனான். உன்ரை அம்மாவுக்கு -என்ர தங்கச்சிக்கு -அதில உனக்கு விருப்பம் இல்லையென் டால், நான் இதில நிக்க விரும்பேல்ல" என்றபடி துவாயை உதறித் தோளில் போட்டுக்கொண்டார். போட்ட வெத்தி லையையும் காறித் துப்பிவிட்டு, "லெச் சுமி... இனி ஒரு நிமிசம் கூட இஞ்ச நிக்கக் கூடாது" என்று கர்ச்சித்தார். மாமாவின் குரல் கேட்டவுடன், மாமியும் பிள்ளைகளும் இன்னும் சிலரும் அவர் பின்னே சென்றார்கள். அவர்கள் ஏன் செல்லுகின்றார்கள் என்ற கேள்வியை, அங்கே நின்றவர்கள் பார்வையால் கேட் டனர்.

"நாட்டில் சமுதாய மறுமலர்ச்சியை ஏற் படுத்துங்கள்; சாதி அடிப்படையில் தொழில்களை கைவிட்டு, சமதர்ம பாதைக்கு வாருங்கள்; புதிய சமுதாயம் ஒன்றைப் படைக்க ஒன்று படுங்கள்" என்று குரல் கொடுக்கும் நாங்களே, அதை செயல்படுத்தாமல் விடக்கூடாது. அப்படி விட்டோமானால், மக்களால் என்றோ ஒரு நாள் தூக்கி வீசப்படு வோம் என்ற எண்ணத்தின் பிரதிப லிப்பே, இப்போ மாமா என்னையும் என் தாயையும் விட்டுப்போகின்றார் என்ற உண்மை, எத்தனை பேருக்குப் புரியும். அங்கே நின்ற சிலருடன் என் அம்மா வுக்கு செய்ய வேண்டிய இறுதிக் கிரி யைகளைச் செய்வதற்கு ஆயத்தமா னேன்.

"கொள்ளி யார் வைக்கிறது" ஆரோ ஒருவர் கத்தினார். மாமாவும் போய்விட் டார். மாமா நின்றிருந்தால் -காலம் முழுவதும் அம்மாவை வேதனைப்படுத் திய மாமாவே, அவளுக்கு தீயும் இட்டி ருப்பார்.

"ஏன், நான் நிக்கிறன்" என்னையும் அறியாமல் எனது வார்த்தைகள் வெளி யில் வந்தன. சுற்றி நின்றவர்கள் அதி சயமாகப் பார்த்தார்கள். அம்மாவின் பிள்ளை நான். என்னைவிட, அம்மா விற்குத் தீயிட, அங்கு எவருக்கும் தகுதி இல்லை.

அம்மாவின் இறுதிப் பயணம் தொடர்ந் தது.

போராளிகளின் கடமை நாட்டைக் காப் பது மட்டுமல்ல -புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதும் அவர்களின் கட மையே. சம்பிரதாயங்களும் சில சமூக பழக்க வழக்கங்களும் எம்மை அறி யாமை இருளினுள் தள்ளி விடுகின்றன.

அம்மா சிதையில் கிடந்தாள். இந்த உலகத்தில் எனக்கு கண்ணாக இருந்து, ஏன் எல்லாமாகவே இருந்த அம்மா... தீயுடன்... நான் அழுதேன். என்னால் இயலுமட்டும் அழுதேன்.

தீ... அம்மாவின் சிதையில்... என் கைகள் நடுங்கியது. உள்ளம் வேதனை யால் துடித்தது. ஆனாலும், என் உள் ளத்தில் புதிய உணர்வு ஒன்று ஆக்கிர மித்து நின்றது.

பெண் இனம் விழிப்புற, காலம் கால மாக மனித இனம் கடைப்பிடித்து வந்த சம்பிரதாயம், என்னால் மாற்றப்பட்டது என்ற பெருமையில் என்னை நான் மறந்து நின்றேன். ■

## இந்திய ரோந்து கோரிக்கை நிராகரிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்செல்வாக்கை அழிப்பதற்கு இலங்கை -இந்தியக் கடற்படை யின் கூட்டு ரோந்து தேவை, என சிறீலங்காத் தரப்பில் முன் வைக்கப்பட்ட யோசனையை இந்தியா நிராகரித்துவிட்டது. இதுபற்றிக் கருத்து வெளியிட் டுள்ள கொழும்புப் பத்திரிகை யொன்று, "இலங்கைக் கடற்பரப் பில் தனது மீனவர்களை மீன் பிடிக்க வைக்கும் ஆசையி லேயே இந்தியா கூட்டுரோந்தை நிராகரித்துவிட்டது" என எழுதி இந்திய எதிர்ப்புணர்வை அப்ப டியே வெளியிட்டுள்ளது.

இந்நிலையிலாவது இந்தியா தனது பாதுகாப்பை மனதில் கொண்டு, தனது எதிரி யார், தனது நண்பன் யார் , எதிர்கா லத்தில் இந்திய உப கண்டத் தில் போர் ஏற்படுமானால் சிறீ லங்கா எப்படி நடந்துகொள்ளும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது. பாகிஸ்தான், சீன யுத்தங்களின் போது சிறீலங்கா நடந்து கொண்ட விதத்தில் இருந்து இன்று அதிக தூரம் வேறுபட வில்லை என்பதை இந்தியா மறக்கக் கூடாது. ■

## கைக்குண்டுடன் பிக்கு; பொலிசாரால் கைது

கைக்குண்டுடன் பயணம் செய்த புத்தபிக்கு ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்புப் பகுதியிலுள்ள கிம் புல்லாப்பிட்டியில் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிசார் மேற் படி பிக்குவைச் சோதனையிட்ட போது, அவரிடம் கைக்குண் டொன்று இருப்பதைக் கண்டு, அவரைக் கைது செய்தனர்.

இவர் ஒரு பட்டதாரி ஆசிரியர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவரைப் பொலிசார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர். ■

## நிகழ்வும் நினைவும்....

யிட்ட 'லங்கா தீப', "கடற்புலிக ளின் கரும்புலித் தாக்குதல்க ளினால் பீதிப்படைந்துள்ள சிறீ லங்காக் கடற்படையினரின் மனோ வலிமையினை அதிகரிக் கச் செய்யவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது" எனத் தெரிவித்துள்ளது.

கடற்புலிகளின் படகுகளில் எந் தப் படகு வெடிமருந்தினைக் கொண்ட கரும்புலியின் படகு எனத் தெரியாமல் தத்தளிக்கும் கடற்படையினர், கடற்புலிகளின் படகுகளைக் கண்டாலே பீதிய டையும் மனநிலையில் இருக்கின் றனர் என்பதனை, 'லங்கா தீப' வின் இக்கருத்து புலப்படுத்து கின்றது. கடற்சிங்கங்கள் கட லில் உலாவினாலும், அவர்க ளும் இப்பீதிப்புடனேயே உலாவ வேண்டிவரும் என்பதனைக் காலம் 'சிங்கங்களுக்கு' உணர்த் தும். ■

## லொறியில் குண்டு வெடித்து இரு சிப்பாய்கள் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புனானை இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிவிபத் தில், இரு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் ஆறு இராணுவத்தினர் காயம டைந்தனர்.

காயமடைந்தவர்களில் 4 பேர், இராணுவத்தினருக்கு உதவ அமர்த்தப்பட்ட பொதுமக்கள் என்று கூறப்படுகிறது. லொறி ஒன்றில் வெடிகுண்டுகளை ஏற் றிக் கொண்டிருக்கும் போது மேற் படி குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. லொறி மூலம் மேற்படி முகாமில் இருந்து, வேறொரு முகாமுக்கு வெடிகுண் டுகளை ஏற்றிச் செல்வதற்காக அவை லொறியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த போது இச்சம்ப வம் இடம்பெற்றது. ■

## இராணுவத்தினர் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்

■ புனானை முகாமில் சம்பவம்

மைலந்தனைப் படுகொ லைகள் சிறீலங்கா இராணுவத் தால் தான் நடத்தப்பட்டன என் பது, நீதிமன்றத்தில் நிருபிக்கப் பட்டுள்ளது. முப்பத்தைந்து தமிழ் மக்களை குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் உட்பட, இராணுவம் படுகொலை செய்த சம்பவத்தில், தப்பிப்பிழைத்த பதினான்கு வயதுச் சிறுவன் ஒருவன், அடையாள அணிவகுப் பில், படுகொலையில் ஈடுபட்ட ஆறு இராணுவத்தினரை தெளி வாக அடையாளம் காட்டினான்.

புனானை இராணுவ முகாமைச் சேர்ந்த 80 இராணுவத்தினர் இப் படுகொலையில் ஈடுபட்ட போதும் 24 பேர் மட்டுமே அடையாளம் காணப்பட்டு, மட் டுநகர் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# போராளியின் குருதிச்சுவடுகள்

எங்களால் என்றுமே மறக்க முடியாத அந்த இருள் சூழ்ந்த நாட்கள்.

இங்கே 'அமைதி தேடுகின்றோம்' என வந்து -அக்கிரமங்கள் புரிந்த இந்தியத் துப்பாக்கிகளின் ஆட்சிக் காலம்.

வன்னியில், கருப்பட்ட முறிப்பு என்ற சிற்றூர்ப் பொறுப்பாளனாக ஜொனி இருந்தான்.

ஒருநாள் - அப்போதைய எமது பிரதான போக்குவரத்துச் சாதனமாக இருந்த மிதிவண்டியில் போய்க்கொண்டிருக்கிறான். அவன் சென்றுகொண்டிருந்த பாதை, யாழ்ப்பாண பிரதான வீதி சந்திக்கின்ற மூலை. மிதிவண்டி வளைவில் திரும்பவும், பதுங்கியிருந்த இந்தியப் படையினர் அவன் மீது பாயவும் சரியாக இருந்தது.

எதிர்பாராத தாக்குதல் - கண்ணிமைப் பொழுதுக்குள் அவன் செயற்பட்டான். தன்னைப் பிடிக்க வந்த படையினர் மீது, மிதிவண்டியைத் தூக்கி வீசினான்; அருகில் பதுங்கியிருந்தவர்கள் மீது, கைக்குண்டுகளை வீசினான். தப்பிவிடுகிறான் ஜொனி.

இந்தச் சம்பவத்தில் இரண்டு இந்தியர்கள் கொல்லப்பட்டனர்.

இப்படியாக - அந்த ஊரில் ஜொனி அரசியல் வேலை செய்த நாட்களில் -அடிக்கடி இந்தியப் படையினரைச் சந்தித்திருக்கிறான். அவை ஒவ்வொன்றும் மயிர்க்கால்களை குத்தி நிமிர வைக்கும் சம்பவங்கள். அப்போதெல்லாம் அவன், ஒரு புலி வீரனுக்கே இருக்கக்கூடிய சாதுரியத்துடன் தப்பிவிடுவான்.

அந்த ஊரில் - மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில், கடினமான ஒரு சூழ்நிலைக்குள் நின்று அவன் போராட்டப் பணிகளை ஆற்ற வேண்டியிருந்தது. இந்தியப் படையினரும், இந்திய அடிவருடிகளும் எங்கும் நிறைந்திருந்த அந்த நாட்களில் கிராமங்களிலோ, நகரங்களிலோ அரசியல் வேலை செய்வதென்பது ஒரு சுலபமான காரியமாக இருக்கவில்லை.

காடுகள், ஆறுகள், குளங்கள், வயல்வெளிகளினூடாக மைல்கணக்கான தூரங்களுக்கு, - அவனது கால்கள் நடக்கும். தனது பொறுப்பாளர்களால் ஒப்படைக்கப்படும் வேலைத் திட்டங்களை இவ்வாறாக சிரமப்பட்டுத்தான் அவன் செவ்வனே செய்து முடிப்பான்.

கருப்பட்டமுறிப்பு என்ற அந்த ஊர், எங்களது போராளிகளின் அணிகள் பொருட்கள், ஆயுதங்கள், ஆவணங்கள் என்பவற்றோடு முக்கிய தகவல்களையும் பரிமாறுகின்ற பிரதான இடங்களுள் ஒன்றாக இருந்தது. போராட்டத்தின் 'பெறுமதி மிக்க' இவ்வகையான வேலைகளுக்காக, இந்த ஊருக்கு வருகின்ற போராளிகளை ஜொனி, மிகுந்த இடர்களுக்கு நடுவில் பாதுகாத்துப் பராமரித்திருக்கிறான்.

இந்தியர்கள் வளைத்து நிற்கும் போதே, கிராமத்துக்குள் நுழைந்து, போராட்டக் கருத்துக்கள் அடங்கிய சுவரொட்டிகளை ஒட்டிவிட்டோ, பிரசுரங்களை விநியோகித்துவிட்டோ மிகச் சாதுரியமாகத் தப்பி, அவர்களின் முற்றுகைக்குள் இருந்து ஜொனி வெளியேறிய சம்பவங்கள் பல உண்டு.

மாணவர்கள், பெண்கள், தொழிலாளர்கள், புத்திஜீவிகள் என சமூகத்தின் எல்லா மட்டத்தினருக்குள்ளும் நுழைந்து, ஜொனி போராட்டக் கருத்துக்களை விதைத்தான். இதன் மூலம் -இளைஞர்களையும், பெண்களையும் பெருமளவில் போராட்டத்தோடு இணைத்தான்.

1989 ஆம் ஆண்டு எமது தேசம், மாவீரர் நாளை முதல் தடவையாக அனுட்டித்தபோது, கருப்பட்டமுறிப்புப் பகுதியில் அதனைச் சிறப்பாக நடத்தினான். தம்மை நோக்கி, இந்தியர்களின் துப்பாக்கி முனைகள் நீண்டிருந்தபோதும், அந்த மக்கள் உணர்வு பூர்வமாக அந்த நாளை அனுட்டித்தனர். அந்தளவுக்கு ஜொனி அவர்களோடு இரண்டறக் கலந்து, அவர்களைப் போராட்டத்தின்பால் ஈர்த்திருந்தான்.

அவனையும் தோழர்களையும் ஆபத்து நெருங்கி வந்த பல சந்தர்ப்பங்களில், அவன் நேசித்த இந்த மக்கள்தான் அவர்களுக்குக் கவசமாக நின்றிருக்கின்றார்கள்.

1990 இன் ஆரம்பம். இந்தியர்கள், எங்கள் தாயகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். இவனது திறமையான செயற்பாடு காரணமாக, இவன் மல்லாவிப் பிரதேசப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். போர் நின்றிருந்த அந்த நாட்களில் மக்களிடையில், அரசியல் வேலைத் திட்டங்கள் வேகமாக நடைமுறைப்படுத்தப்பட்டபோது, ஜொனி அவ் வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடித்தான். கிராம அபிவிருத்தி வேலைகள், சிறுவர்களுக்கு கல்வி வசதிகள் செய்தல், பெண்களுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் என இவனது செயற்பாடுகள் வளர்ந்தன. அந்த நாட்களில், சின்னக் குழந்தைகள் முதல் ஆச்சி, அப்பு வரை மக்கள் ஒவ்வொருவரோடும் இவன் நெருக்கமான உறவுகளை வளர்த்திருந்தான். அவர்களால் என்றுமே ஜொனியை மறந்துவிட முடியாத அளவுக்கு அது இருந்தது.

1990 இன் நடுப்பகுதி. சிறீலங்காப் படையினருடன் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்தது. சண்டைக்குப் போக வேண்டும் என்ற ஜொனியின் ஆவலைப் பூர்த்தி செய்யும் களமாக, அது அமைந்தது.

மாங்குள இராணுவ முகாம் மீதான முதலாவது தாக்குதல் தொடுக்கப்பட்டது. எனினும், வெற்றியீட்ட முடியாமல் போய்விட்ட அந்தத் தாக்குதலின் போது, ஜொனி காலில் காயமடைந்தான்.

காயம் மாறி, வட்டக்கச்சிப் பிரதேசப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டுப் பணியாற்றிக் கொண்டிருந்தபோதும், 'என்றைக்காவது ஒருநாள் இந்த முகாமை நிர்மூலமாக்கியே ஆகவேண்டும்' என்ற வேட்கையே, அவனுள் விஸ்வரூபம் எடுத்திருந்தது. அந்த நாளும் வந்தது. இரண்டாவது தடவையாகவும், இறுதியானதாகவும் மாங்குளம் இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், ஜொனி பெரும் பங்காற்றினான். அந்தத் தாக்குதலின், வெற்றி ஜொனியைப் பூரிப்படைய வைத்தது.

இந்தத் தாக்தல் முடிந்து சிறிது காலத்தின் பின், அவனது நீண்ட நாள் கனவு நனவானது. அரசியல் வேலையிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு, அவன் சமர் முனைக்கு அனுப்பப்பட்டான். அந்த நாட்களில் அவனைக் காண்கின்றபோது, ஓர் ஆத்ம திருப்தி அவன் முகத்தில் தெரிந்தது. ஒரு சின்னக்குழந்தை, மிக மிக ஆசையோடு எதிர்பார்த்த ஒரு பொருளை வாங்கிக் கொடுக்கும்போது, அக்குழந்தைக்கு ஏற்படும் மகிழ்வோடு அவன் சண்டைக் களங்களில் உலாவினான்.



## மேஜர் ஜொனி

(நாகநாதி ஜெகதீஸ்வரன்)
மீசாலை வடக்கு, மீசாலை.
பிறப்பு: 19.08.1969
வீரச்சாவு: 07.07.1991

எவ்வளவு ஆர்வத்தோடும், திறமையோடும் அவன் அரசியல் துறை வேலைகளைச் செய்தானோ, அதைவிட அதிக ஆர்வத்தோடு அவன் படைத்துறை வேலைகளில் ஈடுபட்டான். அரசியல் வேலைகளைச் செய்யும் போது, ஒரு சிற்றூர்ப் பொறுப்பாளனாக இருந்து பின்னர், கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளனாக வளரும் அளவுக்கு அவனுள் இருந்த ஆற்றல், சண்டைகளின்போதும் வெளிப்படத் தவறவில்லை.

நீண்ட காலமாக அரசியல் வேலை செய்து கொண்டிருந்த அவனுக்கு, அந்தச் சண்டைக் களங்கள் புதிய உற்சாகத்தைக் கொடுத்தன. போர் அரங்கிலே ஒரு முன்னணிச் சண்டைக்காரனாக நின்று....... ஓய்வின்றி, உறக்கமின்றி அவன் போரிட்டான்.

ஜொனி -
1969 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 19 ம் நாள் பிறந்தான்.

அப்பாவும், அம்மாவும் இவனுக்குச் செல்லமாக இட்ட பெயர் ஜெகதீஸ்வரன். குடும்பத்தில் 3 ஆண்களும் 4 பெண்களுமாக, 7 உடன்பிறப்புக்களுக்குப் பின்பு, இவன் பிறந்தான். இவனுக்குப் பின்பு ஒரு தங்கை. எவருடனும் அதிகம் பேசாத சுபாவமுடைய ஜொனி, ஆடம்பர வாழ்வு முறைக்குப் புறம்பானவனாக இருந்தான்.

மீசாலை இவனது ஊர். வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற இவனுக்கு, சமூகத்தில் சேவை செய்ய வேண்டும் என்ற சிந்தனையும் ஆர்வமும் இயல்பாகவே இருந்தன. சின்ன வயதிலிருந்தே பொது வேலைகளில் ஈடுபடுவான். மீசாலையின் புழுதி படிந்த தெருக்களில், வயல் நிலங்களில், தோட்ட வெளிகளில்.... எங்கும் அவனது சேவை பரந்திருந்தது.

பாடசாலையில் கல்வியில் மட்டுமன்றி, விளையாட்டுத் துறையிலும் திறமை மிக்கவனாக ஜொனி இருந்தான். அங்கு மாணவர் தலைவனாக இருந்த அவன், திறமையான செயற்பாடுகளுக்காகப் பரிசுகளும் பெற்றிருக்கிறான்.

இந்திய இராணுவம், எமது தாயகத்தை ஆக்கிரமித்திருந்த அந்தக் காலம், இவனுள் ஒரு புயலையே வீசச் செய்தது. இயல்பாகவே, மக்களுக்காக வேலை செய்ய வேண்டும் என்ற சுபாவம் உடையவனாக இருந்த ஜொனி, அன்றைய நெருக்கடியான நாட்களில், ஊரில் எமது போராளிகளுக்கு உற்ற துணையாக நின்றான்.

வீட்டாரிற்கும், வெளியாட்களுக்கும் தெரியாமல், மறைமுகமாக இயக்கத்திற்கு வேலை செய்து கொண்டிருந்த ஜொனி, 1989 இன் முற்பகுதியில் போராட்டத்தோடு தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டான்.

இரணைமடுவில் - வன்னியின் அடர்ந்த காடுகளின் நடுவில் - தனது பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய இவனுக்கு, எல்லாப் புலிவீரர்களுக்கும் இருப்பதைப் போல, சண்டைக்குப் போக வேண்டும் என்ற ஆசை இருந்தது.

ஆனாலும், இயக்கம் அரசியல் வேலைகளை வழங்கியபோது, திறமையுடன் அதனைச் செய்யத் தொடங்கினான்.

எங்கள் தேசத்தில் 1991 ஆம் ஆண்டின் சிறப்பான நிகழ்வு அதுதான்.
ஆனையிறவுப் பெருஞ்சமர்......

அந்த நீண்ட சண்டைகளின் போது, ஜொனி உயிர்த்துடிப்புடன் களங்களில் போரிட்டான்.

அந்தச் சமர்களின் இறுதி நாட்களில் ஒன்று. ஒரு மாலை நேரம்; ஐந்து மணிப் பொழுது.

எங்கள் காவலரணிற்கு வந்த ஜொனி, எம்மோடு மகிழ்ச்சியாகக் கதைத்துக் கொண்டிருந்தான். நீண்ட நேரம் அன்பான உரையாடல். நேரம் போனதே தெரியவில்லை. இருண்டுவிட்டதால் தனது காவலரணிற்குப் போவதற்காக எழுந்தான்.

தட்டுவன் கொட்டிப் பகுதியில் இவனது காவலரண்கள் இருந்தன. அப்பகுதியின் பொறுப்பாளனாகவும் இவன்தான் இருந்தான்.

எழுந்தவன், திரும்பிச் சொன்னான்....

"என்ர பொயின்ரைக் கடந்து ஆமி வாறதெண்டால், என்ர உடம்புக்கு மேலாலதான் வருவான்".

அவன் சொல்லிவிட்டுப் போன போது, நாங்கள் எவருமே அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அன்று இரவு கடந்து, மறுநாள் விடிந்துவிட்டது. நேரம் ஓடியது. காலை 11 மணியை நெருங்கிய போது, விமானங்கள் இரைய குண்டுகள்..... அதிரடிச் சண்டை தொடங்கிவிட்டது.

ஜொனியின் காவலரண் பகுதியை நோக்கிப் படை நகரத்துவங்கியது. வானிலிருந்து குண்டுகள் பொழிய, எறிகணைகள் கூவிவர, கனரக வாகனங்கள் - கனரக ஆயுதங்கள் சகிதம் எதிரி மெல்ல மெல்ல முன்னேறினான். அது ஒரு கடுமையான மூர்க்கத்தனமான சண்டையாக இருந்தது. தங்களில் சிலர் பிணங்களாகச் சரிய, எதிரி அங்குலம் அங்குலமாக நகர்ந்து வந்தான். அந்த நீண்ட சண்டை முடிந்தபோது .... எங்கள் ஜொனி... வரவில்லை. இன்றுவரை அவன் வரவேயில்லை. முதல் நாள் எம்மிடம் அவன் சொல்லிவிட்டுப் போனதைப்போல....

ஆனால், அவனோடு பழகிய அந்த இனிய நாட்களின் நினைவுகள், என்றும் எம்மோடு பசுமையாய் வாழும். இந்த இலட்சியப் பயணத்தில் அவனது நினைவுகள், எம்மோடு துணையாக வரும். ■




**அந்த நீண்ட சண்டை முடிந்தபோது... எங்கள் ஜொனி வரவில்லை; முதல் நாள் எம்மிடம் அவன் சொல்லிவிட்டுப் போனதைப்போல.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அறிமுகம்

# உலக உலா
# பல்துறை சார் மாத இதழ்

மதன்

'உலக உலா' பல கட்டுரைகளை உள்ளடக்கிய ஒரு மஞ்சரியாக வெளிவந்துள்ளது. 'உலக உலா' என்னும் சமூக, அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப மாத இதழினூடாக வாசகர்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வுறுகிறோம் என்று ஆசிரியர் குழுவினரால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. 1993 ஆவணி மாத இதழ் இதன் முதலாவது இதழாகும். முகப்புப் படம் இதழுக்கு மகுடம் சூட்டுகிறது. ஆசிரியர் குழுவின் அகிலத்தைத் தேடும் நோக்கை அந்தப் படம் சிக்கலில்லாமல் புரிந்துகொள்ள வைக்கின்றது என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

'உலக உலா' வாசகர்களின் தேடலை நெறிப்படுத்தும் ஒரு நடவடிக்கை. பிரபஞ்சமளாவிய சஞ்சிகைகளான நியூஸ் வீக், ஏசியா வீக், ரைம், பார் ஈஸ்ட்ரேன் எக்கனெமிக் ரிவியூ, த எக்கனோமிஸ்ட் ஆகியவற்றில் ஆங்கிலத்தில் வெளிவந்த பல கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து இணைத்து உருவாக்கி இந்த இதழ் வெளியாகியுள்ளது. எமது வரலாற்று நிர்ப்பந்த காலப் பின்புலத்தில் அனைத்துலக நோக்குடன் கட்டுரைகள் தமிழ்ப்படுத்தப்பட்டு அச்சுவாகனம் ஏற்றப்பட்டுள்ளமை 'உலக உலா'வின் மகாத்மியம். தமிழ் அறிந்தவர்களுக்குப் பருவ இதழ்கள் மூலம் உருவாக்கப்படும் வாசிப்புப் பண்பாட்டுக்கு இந்த இதழ் போன்றவைகள் தேவை.

உலக விவகாரங்கள் என்ற தலைப்பில் ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களில் நடந்த, மற்றும் தற்போதைய முக்கிய விடயங்கள் பற்றிய கட்டுரைகள் மொழியாக்கப்பட்டு பத்து முதல் எழுபத்தைந்து வரையிலான பக்கங்களில் இடம்பெறுகின்றன. தமிழ் மக்களுக்கு இக்கட்டுரைகள் அன்னை மொழியில் கிடைப்பது மிகவும் கடினம். அந்தத் தேவையை இந்த மொழியாக்கங்கள் ஈடுசெய்கின்றன.

'உலக உலா' சமூக, அரசியல் விடயங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளாமல் வாணிபம், மருத்துவம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஆகிய துறைகளில் சிறந்த கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து 76 முதல் 98 பக்கங்களில் அடக்கியிருக்கிறார்கள். நாம் சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் களங்களை விட விஞ்ஞானத் துறையில்தான் பின் தங்கியுள்ளோம். இதனை உணர்த்தவோ என்னவோ விஞ்ஞானம் மற்றும் மருத்துவக் கூறுகளை விளக்கும் ஐந்து கட்டுரைகளைப் புகுத்தியிருப்பது நல்ல நோக்கமாகும்.

மேலும் உலக விஞ்ஞான, அரசியல் பிரச்சினைகளில் முழுமையாக கை நனைத்துக் கொள்ளாமல், பல்திணைப் பகுதியில் புதிய அறிமுகம், செய்திச் சாரம், பார்வைகள் ஆகியவற்றைச் சேர்த்துக் கொண்டது சிறப்பான அம்சமாகும்.

ஆசியா என்ற தலைப்பில், எல்லையில் இரத்தம், இனச்சுத்திகரிப்பு, துணிகரமான புதிய உலகம், பயங்கரவாதத்தின் தொட்டில், சீன விவசாயிகள் சினமடைந்துள்ளனர், சமாதானத் திருப்பம், ராபினின் சங்கநாதம், அமைதியை நிலைநாட்டுவது யார்? ஆகிய மொழியாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக இனச்சுத்திகரிப்பு என்ற பதத்தின் பொருட்செறிவைப் பற்றியும் அதன் நடைமுறைகள் குறித்தும் சரியான கண்ணோட்டத்தைப் பெற இக்கட்டுரை உதவுகிறது. கம்போடியாவைக் கம்போடியருக்கான நிலமாக மாற்றும் கமரூச்சினரின் தொடர் முயற்சியை -அதன் முக்கியவத்துவத்தை இக்கட்டுரையில் தேர்ந்து தெளியலாம்.

ஐரோப்பா என்ற பகுதியில் ஐரிஸ் படைகள் தப்பிவிடும் போது, சிறேபிறேனிக்காவை இழந்தது யார்?, பிரியவேண்டிய நேரம், கீவ்: ஆயுதக் கைமாற்றம், நாடகத்தின் பின், மேற்குக் கையசைப்பு என்ற கட்டுரைகளை வரிசைப்படுத்தலாம். இக்கட்டுரைகளின் மொழியாக்கம், உள்ளடக்கம் பற்றி அளவிடப் போவது எமது நோக்கமல்ல. கட்டுரைகள் அண்மைக் காலத்தில் எழுதப்பட்டவை. அன்னை மொழி மட்டும் தெரிந்தவர்கள் ஐரோப்பிய விவகாரங்கள் பற்றிய பரிச்சயமின்றி இருக்கக் கூடாது என்ற எண்ணத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள கட்டுரைகள் இவை. தமிழ் வாசகர்கள் கட்டுரைகளைப் படித்துப் பயன்பெறலாம்.

அமெரிக்காவின் கோலத்தை உள்ளடக்கிய பகுதியில், சி. ஐ. - ஏ. இன் புதிய ஒற்றர்கள், கிளின்ரனைப் பற்றிய உலகக் கணிப்பீடு, உலகளாவிய காவற்தொழில், உண்மை வெளிவருகிறது என்ற நான்கு கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இக்கட்டுரைகள் அமெரிக்காவின் பரிமாணத்தை இனம்கண்டு கொள்ள உதவுகின்றன.

அங்கோலாவின் பக்க மாற்றம், புதிய நாட்டின் உதயம், மரணம் சற்று ஓய்வெடுக்கிறது, தென் ஆபிரிக்காவில் அரசியல், இம்சை குறைகிறது ஆகிய தலைப்புகள் ஆபிரிக்கா பற்றிய கணிப்புகளைத் தருகின்றன. பக்கங்களில் உள்ள பந்திகளில் பல கருத்துக்கள் பிரஞ்ஞையுடன் முன்வைக்கப்பட்டுள்ளன. கருத்துக்களுடன் வாசகர்களுக்கு உடன்பாடு ஏற்படாது போனாலும் ஆழமான சிந்தனை, விசாரங்கள் உருவாகும் வாய்ப்புகள் ஆபிரிக்கா பற்றிய கட்டுரைகளைப் படிப்பதால் உண்டாகும் என்பது உண்மை.

உலகளாவிய பற்றிய கட்டுரைகளை அவ்வப்போது வேறு பல பத்திரிகைகளில் பார்த்திருந்தாலும் இவற்றில் பலவற்றை ஒரு தொகுப்பாக படிக்கும் வாய்ப்பை 'உலக உலா' தந்திருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. மேலும் உலக விவகாரங்கள் பற்றி முறையே படிக்க விரும்பும் அரசியல், விஞ்ஞான மாணவர்களுக்கு 'உலக உலா' பருவ இதழ் பலன் தரும் என நம்பிக்கையாகக் கூறலாம். இப்படிச் சொல்லும்போது, கட்டுரையில் உள்ள கண்ணோட்டங்கள் எல்லாம் எல்லோருக்கும் ஏற்புடையவை என்று நான் சொல்வதற்கில்லை. இன்றைய நிலையில் உலகப் போக்கின் தன்மைகளை ஓர் இதழில் (வரப்போகின்ற இதழ்களிலும்) ஒருமைப்படுத்தித் தருவதால், பல பிரச்சினைகளைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு 'உலக உலா'ஒரு வாய்ப்பளிக்கிறது.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முயற்சி 'உலக உலா'. எனக்குத் தெரிந்தவரையில், தமிழில் மொழியாக்கங்களைக் கொண்ட ஒரு இதழ் -அதுவும் சமூக, பொருளாதார, அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப மாத இதழ் வெளிவருவது இதுதான் முதல் தடவை என்று இனம் காட்டிக் கொள்ளலாம். அந்த வகையில் புகழாரம் 'உலக உலா'வுக்கே சேரும். ■

சிறுகதைகள், கவிதைகள் எல்லாம் தவிர்க்கப்பட்டு ஏறக்குறைய நூறு பக்க அளவில் 'உலக உலா' இதழ் தமிழீழத்திலிருந்து வெளிவரத்தொடங்கியுள்ளது. ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் வாணிபம் - மருத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், பல்திணைப்பகுதி என்று மொழிபெயர்ப்பு ஆக்கங்களைக் கொண்ட ஒரு மாத இதழ் தமிழீழத்திலிருந்து வெளிவருவது அநேகமாக இதுதான் முதல் தடவையாக இருக்கும். அந்த வகையில் புகழாரம் 'உலக உலா'விற்குச் சேருகிறது.




## இஸ்ரேல் உரு......

இப்போது அமெரிக்க நல்லுறவை விரும்பி ஆமோதிப்பு) இச்சமாதான முயற்சி ஒரு தொடக்கமே, பின் படிப்படியாக பேச்சுக்கள் தொடரும் என்ற வாதம்; அமெரிக்க உத்தரவாதம்; இவற்றை நம்பி அவர், தன்னையே பணயம் வைத்து இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதேசமயம், இஸ்ரேலோ இம்மாதிரித் தருணம் இனிமேல் கிடைக்காது என எண்ணிச் செயல்படுகிறது. இதனாலேயே வழமைக்கு மாறான அறிவிப்புக்கள் 'ரெல் அவீவ்' இலிருந்து இப்போது வெளிவருகின்றன. இப்போது பலமற்று இருக்கும் பாலத்தீன விடுதலை இயக்கத்தோடு பேசாவிட்டால் பின்னர் பிடிவாதம், தீவிரவாதம் மிக்க கமாஸ் போன்ற அமைப்புக்களோடு பேச நேரிடும் என்பது இஸ்ரேலுக்கு விளங்கும். ஆனால் தொடக்கத்தில் பாலத்தீன விடுதலை இயக்கத்திற்கு எதிராக கமாஸ் இயக்கம் தோன்றி வளர்ந்தபோது, கண்டும் காணாமல் இஸ்ரேல் இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று கதையே மாறிவிட்டது. அத்தோடு நாட்டிலே பெரும் பணவீக்கம். பொருளாதார நெருக்கடி. அமெரிக்க அழுத்தம். தேர்தல் கால வாக்குறுதி. அமைதி வேண்டும் மக்கள் மனோநிலை என்பன ஏனைய காரணங்கள்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, தான் நம்பகரமான தரகன் என்பதை நிருபித்தாக வேண்டிய நிலை. மத்திய கிழக்கில் தானும், தனது அரபுலக நண்பர்களும் செல்வாக்குடன் இருக்க; நியூயோர்க் வெடிகுண்டு வெடிப்புக்கள் போன்ற சம்பவங்கள் தொடராமல் பாதுகாக்க; இஸ்ரேல் -அரபுகளிடையே சில காலமாவது நல்லெண்ணம் நிலவுவது அவசியமாகின்றது. இந்நிலையில் சிரியாவே ஒரு தடையாக இருக்க முடியும். ஆனால் சிரியா, கோலான் குன்றுகள் தன்னிடம் ஒப்படைக்கப்படுமானால் லெபனானில் இருந்து 'கிஸ்புல்லா' இயக்கம், இஸ்ரேல் மேல் செய்யும் தாக்குதல்களை தடுத்துவிடும் என்ற பேரத்தை விட்டுள்ளது. இவ்வுடன்பாட்டை முழுமையாக ஆதரிக்காதபோதும் தான் குறுக்கே நிற்கப் போவதில்லை என்றும், பாலத்தீனிய மக்கள் தங்கள் தலைவிதியை தாங்களே தீர்மானிப்பதை தான் தடுக்கவில்லை என்றும் சிரிய சனாதிபதி கூறியுள்ளார்.

என்றாலும், அரபு நாடுகளின் கரங்களை வெகுவாகப் பலவீனப்படுத்திவிட்டார் என்று அரபாத் மேல் கசப்பு ஏற்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. இப்போது சிரியா தன் செல்வாக்கிற்கு உட்பட்டிருக்கும் அரபாத்துக்கு எதிரான குழுக்களை எவ்வாறு கையாளப் போகின்றது என்பது பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டிய விடயம். கோலான் குன்றுப் பகுதியைப் பெறும் தனது முயற்சிகளில் மட்டும் சிரியா இனிமேல் ஈடுபடப் போகின்றது என்பது வெளிப்படை. இவ்வாறாக எல்லாத் தரப்பினாலும், பாலத்தீன மக்கள் பிரச்சினையை மையமாக வைத்து தத்தம் பிரச்சினையைத் தீர்க்க முற்படும் ஒரு விந்தை நிலையே இன்று தெரிகின்றது. இவ்வாறாக இன்று பாலத்தீனிய பிரச்சினையின் மையம் சிதைக்கப்பட்டு, அரபாத்தின் தலைமை கேள்விக்குரிய தாக மாற்றப்பட்டுவிட்டது. என்றாலும் ஒரு காலகட்டத்தில் பாலத்தீனிய தேசிய அரசிற்காக அரபு நாடுகள் கையில் சிக்கியிருந்த பாலத்தீனியத் தேசிய வாதத்தை மீட்டெடுத்து 1965 அளவில் முதல் தாக்குதல் இஸ்ரேலுக்கு எதிராகத் தொடுத்த பெருமை அரபாத்தையே சாரும். 1969 இன் பின் பாலத்தீனிய விடுதலை இயக்கத்தின் தலைவராகி பாலத்தீனிய விடுதலையோடு இரண்டாகக் கலந்தவர். அதேசமயம் ஜோர்தானில் இருந்து 1970 களில் விரட்டப்பட்டு பின் 1982, 83 களில் லெபனானிலிருந்தும் விரட்டப்பட்டு அரபு நாடுகளின் போட்டாபோட்டிகளில் சிக்கி சிதறடிக்கப்பட்டிருந்த பாலத்தீனியத் தேசியவாதத்தின் தலைமையும் அது பட்ட துயரங்களும் வரலாற்றில் மறக்கப்பட போகின்றவையல்ல. 1970 களில் உலகை உலுப்பிய பல தாக்குதல்களை, விமானக் கடத்தல்களை மேற்கொண்டு மிகத் தீவிர வன்முறை வழிகளைக் கையாண்டு இஸ்ரேலை அழிப்போம் என்றவர்கள், 1970 செப்டெம்பரில் அமைப்பு ஒன்றைத் தோற்றுவித்து 1972 செம்டெம்பரில் மியூனிச் ஒலிம்பிக் போட்டியில் புகுந்து யூதப் போட்டியாளரைப் பணயம் வைத்து உலகை அதிரச் செய்தவர்கள். எல்லாம் இன்று கடும் தலைமைப் போட்டி, சிந்தாந்தப் போட்டியால் தமக்குள் மோதி மடியும் நிலை இன்று அரங்கேறிவிட்டது. அதேபோல் சகல அரபு நாடுகளும் பாலத்தீனத்துக்கு ஆதரவு என்கின்ற போர்வையில் பாலத்தீனியத் தலைமையை சின்னா பின்னமாக்கியதும் வரலாற்றுத் தன்மை. இவ்வாறாக இன்று புதியதொரு போராட்ட அலையில், புதிய தலைமுறை ஆயுதப் போராட்டத்தை தொடர முனையும்போது, பாலத்தீனிய மக்கள் முன் வைக்கப்பட்ட உடன்பாட்டுத் திட்டம் இவ்வளவு தானா என்கின்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. என்றாலும் நாற்பத்தைந்து ஆண்டுகளிற்கு மேலாக அல்லல்படும் மக்கட்கு அமைதி கிட்டும் இவ்வுடன்பாடு, முடிவாக இராமல் தொடக்கமாக இருக்கட்டும் என நாம் வேண்டும் அதேசமயத்தில், போராடும் தன்மையை இழந்து மாற்றான் நல்லெண்ணத்தை மட்டும் நம்பி, போராட விரும்புவோரை மழுங்கடிக்கப் பயன்படப் போகும் உடன்பாடு உருவாக்கப்போகும் விளைவுகள் விபரீதமாக அமையும் அபாயம், கூடவே இருப்பதை நாம் சுட்டாமல் இருக்க முடியாது. எனவே சொந்தக் காலில், சொந்தத் தாயகத்தில் போராடுவோரே இலக்குகளை அடைவர் என்பதை நாம் சொல்லாமலிருக்க முடியாது. ■

## துரோகக் கும்பலினால் குடும்பஸ்தர் கைது

திருமலையில் குடும்பஸ்தர் ஒருவரை ரெலோ துரோகக் கும்பல் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றுள்ளது.

திருமலையில் உள்ள ஈச்சிலம்பற்றை சிறீலங்கா இராணுவ முகாமிலிருந்து விநாயகபுரத்திற்கு வந்த ரெலோ குழுவினரே திண்ணையடியைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான கைலாயபிள்ளை சித்திரவேல் (வயது 32) என்பவரைக் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இஸ்ரேல் உருவாக்கும் இரண்டாவது சதாத்

பாலகுமாரன்

அரபு, இஸ்ரேல் பேச்சு வார்த்தையைப் போல், ஒரு பெரும் எடுப்பில் நடக்கும் ஒரு பேச்சு வார்த்தையை இவ் உலகம் இது வரை கண்டதில்லை. உலகில் மிகமுக்கிய நாடுகள் பங்கேற்கும் இப் பேச்சுவார்த்தை கடந்த புரட்டாசி 1991 ஆம் ஆண்டு ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் ஆரம்பமாகி அதன் 11 ஆவது சுற்று வாசிங்டனில் நடைபெற்றது. இப் பேச்சு வார்த்தை பாலத்தீனிய தன்னாட்சி பற்றி மட்டுமல்ல, இஸ்ரேலுக்கும் அதன் அண்டை அரபு நாடுகளான சிரியா, யோர்தான், லெபனானுக்கும் இடைப்பட்ட பகை முரண்பாடுகளையும் தீர்க்க வேண்டும். ஆனால் இற்றைவரை எப்பயனும் -இஸ்ரேல் தன் நல்லெண்ணத்தைக் காட்டி வழங்கிய ஒரு சில சலுகைகளைத் தவிர -கிட்டவில்லை. ஏற்கனவே பிளவுபட்டிருந்த பாலத்தீனத் தலைமை, இப் பேச்சு வார்த்தைகளால் மேலும் பிளவுண்டது. 1967 ஆம் ஆண்டின் பின் இஸ்ரேலால் வெளியேற்றப்பட்ட முதல் பாலத்தீனியரும் பாலத்தீனிய நிழல் நாடாளுமன்றத்தின் சபாநாயகருமான அப்துல் கமித் அல் சாயா, இப்பேச்சுக்களையறிந்து அண்மையில் வெளியேறிய போது, "இது பேச்சுவார்த்தை அல்ல. சரண் அடைவதற்கு பிரயோகிக்கப்படும் நிர்ப்பந்தம்" என்றார். "என்னைப் பொறுத்தவரை இப்பேச்சுவார்த்தை மூலம் பாலத்தீனியருக்கு செய்யப்படப் போகும் தீங்குகட்கு நான் பொறுப்பாக இருக்கவிரும்பவில்லை" எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறான குழப்பநிலையிலிருக்கும் போதுதான், இனி ஒரு பேச்சுவார்த்தை பற்றி தகவல் வெளிவந்தது. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நோர்வே அரசின் உதவியோடு இஸ்ரேலியருக்கும் அரபாத் தரப்பினருக்கும் நோர்வேயில் நடைபெற்ற இரகசியப் பேச்சுவார்த்தை பற்றிய தகவலே இது. பாலத்தீனிய விடுதலை அமைப்பிற்கோ அல்லது தனது அல் -பத்தா அமைப்பிற்கோ தெரியாமல் அரபாத் நடத்திய பேச்சுக்களில் எட்டப்பட்ட உடன்பாடுகள் பற்றிய தகவல்கள் பல முழுமையாக வெளிவந்த போதும் -வந்தவையில், சில முரண்பாடுகள் இருந்த போதும், இதன் அடிப்படைகள் பின்வருமாறு அமையும் எனத் தெரிகிறது.



ஒப்பந்தத்திற்கெதிரானவர்கள் அரபாத்தின் உருவப்படத்தை எரிக்கும் காட்சி

1967 ஆம் ஆண்டு, இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட காசாப் பகுதிகள், மேற்குக் கரையின் ஒரு பகுதியான ஜெரிக்கோ நகரத்தில், மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி வழங்குவதும், இஸ்ரேலும் பாலத்தீனிய விடுதலை இயக்கமும் ஒருவரை ஒருவர் அங்கீகரிப்பதும் இதன் பிரதான அம்சமாகும். அதே சமயம் தனது இராணுவத்தை இப்பகுதிகளிலிருந்து வெளியேற்றும் என்றும், வெளிவிவகாரம், இஸ்ரேலிய குடியேற்றங்கள், பாதுகாப்பு போன்றவை இஸ்ரேல் கையில் இருக்கும் என்றும் உடன்பாடு கூறுகிறது. மாற்றாக பாலத்தீன விடுதலை இயக்கம் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு, உத்தியோகபூர்வமாக இஸ்ரேலை அங்கீகரித்து, தேவையான மாற்றங்களை தனது தேசிய சாசனத்தில் செய்யவும் சம்மதித்துள்ளது. அத்தோடு 'இன்ரிபாதா' மக்கள் எழுச்சியை நிறுத்த வேண்டும், என்றும் 5 வருட இடைக்கால திட்டமாக அமைதித்திட்டம் அமையும் என்றும், மூன்றாம் வருடத்தில் ஏனைய தீர்க்கப்படாத பிரச்சினைகள் பற்றி பேச்சுக்கள் ஆரம்பிக்கும் என்றும் உடன்பாடு கூறுகிறது. ஜெரிக்கோவிலும் காசாப் பகுதியிலும் நிலங்கள், காவல்துறைப் பணிகள் பாலத்தீனியர் பொறுப்பில் விடப்படும் என்றும் ஏற்கப்பட்டுள்ளது. அதேசமயம் மேற்குக் கரையையும் யோர்தானையும் தொடுக்கும் யோர்தான் நதிப் பாலம் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கும். இவ் உடன்பாடு இன்று உலகத் தலைநகர்களில் பெரும் பரபரப்பை தோற்றுவித்ததோடு, பற்பல உணர்வலைகளை இன்று உலகம் எங்கும் கிளப்பிள்ளது.

பாலத்தீனிய மக்கட்கு அமைதி கிட்டுவதை எவரும் எதிர்க்க விரும்பாத போதும், இம்மாதிரியான ஒரு அரைவேக்காட்டுத் திட்டம் எத்தகைய பலன்களை பாலத்தீனிய மக்கட்கு அளிக்கும் என்பதுதான் இன்றைய கேள்வியாகிறது. ஏனென்றால் பாலத்தீனிய சுதந்திர நாட்டை முதலில் கொடு, பின் பாலத்தீனிய தன்னாட்சி என இறங்கி அதுவுமின்றி மட்டுப்படுத்தப்பட்ட பகுதிகட்கு என்பது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் பாலத்தீன மக்கட்கு எவ்வாறு ஆனந்தத்தைக் கொடுக்க முடியும்? மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போதே பல நூறு சிக்கல்கள் இவ்வுடன்பாடுபற்றிக் கிளம்புகின்றன. கடந்த 26 வருடங்களாக அடக்குமுறையின் கொடுங்கரங்களில் சிக்கி, தன்னியல்பாக 19-87 ம் ஆண்டிலிருந்து கிளர்ந்து எழுந்து போராடி வரும் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை காசாப் பகுதி மக்கள், இவ்வுடன்பாட்டை ஏற்பார்களா என்பது சந்தேகமே. ஏனென்றால் இதுவரை காலமும், "நீங்கள் போராடுங்கள் நாங்கள் ஆதரிக்கின்றோம்" எனக்கூறி வந்த அரபாத் இப்போது, "நாங்கள் சொல்கிறோம் நீங்கள் கேட்டு நடவுங்கள்" எனத் தன்னிச்சையாகச் செயற்பட முற்படுகின்றார் என இம்மக்கள் கருதுவதாகத் தெரிகின்றது. இவற்றைவிட வெளி உலகிற்கு நல்லெண்ணத்தைக் காட்டும் இஸ்ரேல், இம்மக்கட்கு இழைக்கும் கொடுமைகளை எவ்விதத்திலும் இற்றைவரை குறைக்கவில்லை. குறிப்பாக தனது திட்டமிட்ட குடியேற்றங்களை மென்மேலும் விரிவாக்கும் முயற்சியே நடைபெறுவதாக இம்மக்கள் குறைப்படுகின்றனர். இன்றும் புல்டோசர்கள் புதிய யூதக் குடியேற்றங்களுக்காக நிலங்களைச் சமப்படுத்துவதாகவும், ஒரு இலட்சம் யூதர் குடியேறும் வகையில் பதினையாயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. இத்தகைய நிலையில் வளம் குன்றிய, வறுமை நிறைந்த காசாத் துண்டுக்கும், மேற்குக் கரையின் ஒரு பகுதிக்கும் உரிமை வழங்குவது என்பதே விசித்திரமானது. ஏனென்றால் நீர்வளம் , நிலவளம் உள்ள மேற்குக் கரையில், எழுபது வீதம் நீர்வளம் வெளிநிலங்கள் இஸ்ரேலால் கையகப்படுத்தப்பட்டிருப்பதை இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இப்போது கோலான் குன்றுப் பகுதியில் பன்னிரண்டாயிரம் பேரும், மேற்குக் கரையில் ஒரு இலட்சம் யூதக் குடியேற்ற வாசிகளும் உள்ளனர். எனவே இத்தகைய யூதக் குடியேற்றங்கள் பாலத்தீனியத் தன்னாட்சிப் பகுதிக்குள் வராது என்பது வெளிப்படை. எனவே மீதியிருக்கும் பாலத்தீனியத் தாயகப் பகுதிகள் பற்றிய பேச்சுக்கள் அடுத்த கட்டமாக மூன்று வருடங்களின் பின்னரே ஆரம்பமாக்கப்படும் எனத் தெரிகின்றது. அதேசமயம் இரு பகுதியினருக்குமே மிக உயிர் நாடியாக விளங்கும் ஜெருசலேம் நிலை, புரியாத புதிராக இருக்கிறது. பாலத்தீனக் கொடி ஜெருசலேத்தில் பறக்கும் என அரபாத்தும், எத்தருணத்திலும் ஜெருசலேம் கைவிடப்படமாட்டாது என ராபினும் அறைகூவி வருகின்றனர். ஜெருசலேத்திலோ படிப்படியாக மிக வேகமாக யூதக்குடியேற்றங்கள் வளருகின்றன. இன்று கிழக்கு ஜெருசலேம் பகுதியில் ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் யூதரும், ஒன்றரை இலட்சம் பாலத்தீன அரபுகளும் உள்ளதாக சனத்தொகை விகிதம் மாற்றப்பட்டுவிட்டது. எது எப்படி இருந்தபோதிலும் ஜெருசலேம் எமது தலைநகரம் என இருபகுதியினருமே விடாப்பிடியாக நிற்கப் போகிறார்கள் என்பது மிகத் தெளிவு.

இவை எல்லாவற்றையும் விட, தமது தாயகப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட பாலத்தீனிய அகதி மக்களின் எதிர்காலம் என்ன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. 1948 ஆம் ஆண்டு ஐ. நா. ஏற்பாட்டின்படி பாலத்தீனியப் பகுதி துண்டாடப்பட்டு யூதருக்கென தனியான தாயகப் பகுதி உருவாக்கப்பட்ட போது மூண்ட போரில் ஏறத்தாழ சனத்தொகையில் அரைவாசி மக்கள் (ஏழரை இலட்சம் பேர்) அகதிகளாக அண்டை நாடுகளுக்கு ஓடினர். 1948 ஆம் ஆண்டு யூதர் கையில் இருந்தது பாலத்தீனிய நிலங்களில் ஆறு வீதம் மட்டுமே. ஆனால் தமது சியோசைக் கோட்பாட்டின்படி சியோனீசியக் கோட்பாட்டை உருவாக்கிய தியோடர் கேர்சல் (Theodore Herzl) வலியுறுத்திய




அகன்ற இஸ்ரேல், பாலத்தீனிய நிலங்களை கையகப்படுத்தத் தொடங்கியதன் விளைவாக மூண்ட 1967 ஆம் ஆண்டுப் போரின்போது, எஞ்சியிருந்த எகிப்து, ஜோர்தான் கையிலிருந்த தமது தாயகப் பகுதிகளையும் பாலத்தீனியர் இழந்தனர். அப்போது ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாயினர். 1967 போரின் முன் மொத்த பாலத்தீன சனத்தொகையில் 21 இலட்சம் பேர் மேற்குக் கரையிலும், 4 இலட்சம் பேர் காசாப் பகுதியிலும் இருந்தனர் போரின் பின் 15 இலட்சம் பேர் அகதிகளாகவும், 12 இலட்சம் பேர் அடிமைகளாகவும் மாற்றப்பட்டனர். எனவே இன்று 20 இலட்சம் பேர் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலும், ஏறத்தாழ 40 இலட்சம் பாலத்தீனியர் பாலத்தீனியத் தாயகத்திற்கு வெளியேயும் வாழ்வதாகக் கருதப்படுகின்றது. இவர்களில் கணிசமான பங்கினர் தாயகம் திரும்பத் தயாராக இருப்பர் என்பது வெளிப்படை. இவர்கள் நிலை என்ன என்பது சிக்கலான வினா. இப்போது மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி வழங்கப்பட இருக்கும் காசாவில் எட்டு இலட்சமும், ஜெரிக்கோவில் 9 ஆயிரம் பாலத்தீனியரும் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்காரணிகளை விட, பாலத்தீன விடுதலை இயக்கத்தில் அங்கம் வகிக்கும் ஜோர்ச் கபாஸ் தலைமையில் இயங்கும் தீவிரத்தன்மை வாய்ந்த பி. எவ். எல். பி. மற்றும் டி. எல். எவ். -ஆர். போன்ற அமைப்புக்கள் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இயங்கும் 'கமாஸ்' இயக்கம், தென் லெபனானில் சிறிய கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஈரானின் ஆதரவோடு இயங்கும் 'கிஸ் புல்லா' அமைப்புப் போன்றவை இவ்வுடன்பாட்டினை முறியடிப்போம் என சூளுரைத்து நிற்கின்றன.

குறிப்பாக, இஸ்ரேலுக்கு எதிராக தனது ஆயுதப் போராட்டத்தை விரிவுபடுத்திவரும் கமாஸ் இயக்கம், உடன்பாட்டின்படி என்றோ ஒருநாள் தாயகம் திரும்ப எண்ணியிருக்கும் யாசீர் அரபாத்துக்கு பெரும் எதிர்ப்பையே காட்டப்போகின்றார்கள் என்பது திண்ணம். "சதாத்துக்கு நடந்ததை அரபாத்துக்கு ஞாபகப்படுத்துகிறோம்" என தீவிரவாத பாலத்தீனியத் தலைவர் அகமட் ஜிபரில் பெய்ரூட்டில் கூறியுள்ளார். இஸ்ரேலோடு தனித்து 'காம்ப் டேவிட்' ஒப்பந்தம் செய்த எகிப்திய சனாதிபதி அன்வர் சதாத், 1981 இல் கொலை செய்யப்பட்டமையை அவர் நினைவுபடுத்தினார். கமாஸ் இயக்கமோ, "பேச்சுக்கள் நடத்துவோரின் கூக்குரலை விட, புனிதப் போராளிகளின் துப்பாக்கி ரவைகள் மிக மேலானவை" எனக்கூறி காசாப் பகுதியில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தத் தொடங்கிவிட்டது.

எனவே, இத்தகைய அபாயங்களுக்கு மத்தியில் ஏன் இந்த முயற்சியில் அரபாத் ஈடுபட்டுள்ளார்? இங்கேதான் வரலாறு ஒரு முக்கிய பாடத்தை உலகிற்கும், போராடும் இயக்கங்களுக்கும் புகட்டுகின்றது. ஆயுதப் போராட்டத்தை நடாத்திய இயக்கங்கள், இஸ்ரேல் மீது தாக்குதல் நடாத்தியபோது 'தீவிர பயங்கரவாதி' என வர்ணித்த இஸ்ரேல், இன்று அரபாத்தைக் காப்பாற்றுவது தன் பொறுப்பு என முற்பட்டிருப்பது வரலாறு காட்டும் ஒரு பழைய பாடம்தான். ஏனெனில், இன்று பழைய தீவிரத்தன்மையை இழந்து (ஒரு காலத்தில் பாலத்தீனியப் போராட்டத்தை நான் மணம் முடித்துள்ளேன் என்றவர் இன்று தனது 60 வது வயதில் பாலத்தீனியப் பெண் ஒருத்தியை மணம் முடித்துள்ளார் என்பது செய்தி) தனது தலைமைப் பதவியின் இறுதிக் கட்டத்தில் போராடவும் வழியற்று, சாதிப்பதற்கு எதுவுமற்று தனித்துப்போய் விட்டார். அரபாத், இராசதந்திர போராட்டம் நடாத்தி உலகெல்லாம் தூதுவர் அலுவலகங்களைத் தொடக்கி உலக ஆதரவைப் பெற்றவர், இன்று தனது மக்களின் முழுமையான ஆதரவைப் பெற முடியாமல் நிற்கின்றார். மிகுந்த பண நெருக்கடியில் சிக்கியிருக்கும் அவர், தனது இறுதிக் காலத்திலாவது தாயகம் செல்லக் கிடைக்கும் எவ்வழியையும் பற்றித் தொங்கத் தயாராகிவிட்டார். எனவே இப்போது முழு மேற்குலகு ஆதரவு; இஸ்ரேல் அங்கீகாரம்! எகிப்து, சவூதி, குவைத் போன்ற வளைகுடா நாடுகள் உதவி; யோர்தான் ஆமோதிப்பு. (ஆரம்பத்தில் எதிர்ப்புக் காட்டிய யோர்தான்

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழகத்தில் பராமரிப்பற்ற நிலையில் இலங்கைத் தமிழ் அகதிகள்

1990 ஆம் ஆண்டின் ஆடி மாதத்தின் பின்னர் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை மாவட்டங்களில் இருந்து சுமார் ஒன்றரை இலட்சம் தமிழ் மக்கள் தமது வீடு வாசல்களையும், உடமைகளையும் இழந்து உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் இயந்திரப் படகுகளிலும், வள்ளங்களிலுமாகத் தமிழ் நாட்டிற்கு அகதிகளாகச் சென்றனர்.

இந்த அகதிகள் அங்கு படகுகளில் இருந்து கரையில் இறங்கிய சமயம், தமிழ் நாடு அரசாங்கம் பேருந்துகளில் ஏற்றிச் சென்று தமிழ் நாட்டின் பதினைந்து மாவட்டங்களில் 185 முகாம்களில் குடியமர்த்தியது.



தமிழகக் கரையோரத்தில், படகில் தமிழ் அகதிகள்

இவர்களுக்கு சமையல் பாத்திரங்கள், உடுதுணிகள், படுப்பதற்கான பாய் முதலானவைகள் வழங்கப்பட்டன. உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. சுகாதார மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

## அன்றும் இன்றும்

ஆரம்பத்தில் குடும்பத் தலைவருக்கு, மாதம் ஒன்றுக்கு 150 ரூபாவும், மனைவிக்கு 120 ரூபாவும் பிள்ளைகளுக்கு ஒரு பிள்ளைக்கு 60 ரூபா என்ற வீதத்திலும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

இதைவிட மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்துக்கு 12 கிலோ அரிசி; கிலோ 55 சதவீதமும், 10 லீற்றர் மண்ணெய்; லீற்றர் 3 ரூபா வீதமும், சீனி ஒரு கிலோ 8 ரூபா வீதமும் வழங்கப்பட்டது. அத்துடன் இரண்டு கிலோ மாவும் வழங்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டின் வாழ்க்கைச் செலவினத்துக்கே இந்த உதவிகள் பெரும்பாலும் மட்டுமட்டாக இருந்தது. அந்த நேரத்தில் பல அரச சார்பற்ற நிறுவனங்களும், பணம் படைத்த பலரும், சில சினிமா நடிகர்களும் இடையிடையே உணவுப் பொருட்களையும், உடுதுணிகளையும் இலவசமாக வழங்கிவந்தனர்.

ஆனால், 1991 ஆம் ஆண்டின் பின்னர் தமிழ் நாட்டில் அகதிகளை பராமரிக்கும் முறையில் மாற்றம் ஏற்பட்டது. அகதிகளை வேண்டா வெறுப்புடன் கவனிக்கும் நிலை ஏற்படலாயிற்று.

தற்போது, தமிழ்நாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்கள் அகதிகளுக்கு உதவி செய்வதில்லை. சமையல் பாத்திரங்கள், படுப்பதற்கான பாய் போன்றவை அரசினால் வழங்கப்படுவதில்லை. சமையல் செய்வதற்காக முன்னர் அரசாங்கம் கட்டிக் கொடுத்த கொட்டில்களைக் கூட அரசாங்கம் வேய்ந்து கொடுக்காததால், அகதிகள் தங்கள் சொந்தச் செலவில் இந்தக் கொட்டில்களை வேய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### ஒருகுடம் தண்ணீருடன் ஒருநாள் வாழ்க்கை

தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் தற்பொழுது ஒரு குடும்பத்திற்கு நாள் ஒன்றுக்கு ஒரு குடம் தண்ணீர் மட்டுமே கொடுக்கப்படுகிறது. இந்த ஒரு குடம் தண்ணீரைக் கொண்டே சமையல் வேலைகளையும், குடிநீர்ப் பாவனையையும் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அகதி மக்கள் குளிப்பதற்குக் கூட அயல் கிராமங்களிலுள்ள கிணறுகளையே நாடிச் செல்ல வேண்டியுள்ளது.

கல்வி கற்கும் சிறுவர்களுக்கு புத்தகம், பயிற்சிக் கொப்பிகள் முதலானவைகள் முன்பு இலவசமாக வழங்கப்பட்டு வந்தன. ஆனால் இப்போது இவ்விநியோகங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் அகதி மாணவர்களின் கல்வியில் வெகுவான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

முகாம்களில் அகதிகளின் பாவனைக்கான மலசலகூட வசதிகள் போதியளவு இல்லாமையாலும், உள்ளவற்றை நன்கு கவனிக்காமையாலும் முகாம்களில் தொற்று நோய்கள் பரவி வருவதால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அகதிகளுக்கு மருத்துவ வசதிகள் எதுவுமில்லை. இதன்காரணமாக பல நோயாளர்கள் இறந்துள்ளனர். பாரிய நோயினால் பீடிக்கப்பட்டவர்களை வசதியுள்ள பெரிய வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கான வசதிகள் கூட எதுவுமில்லை.

முகாம்களில் இறப்பவர்களின் பிரேத அடக்கச் செலவிற்காக நூறு ரூபா மட்டுமே வழங்கப்படுகின்றது. இப்பணத்தொகை பிரேத அடக்கச் செலவிற்குப் போதுமானதாக இல்லை என்பதால், இதனைச் சிலர் பெறுவதில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்கள் அகதிகளுக்கு உதவி வழங்கும் விடயத்தில், மத்திய அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளமையால் உதவி வழங்கிவந்த பல அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்து உதவிகளை வழங்க முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளன.

முகாம்களில் உள்ளவர்கள் வெளியிடங்களுக்குச் சென்று கூலித் தொழில் செய்து வருவாயைப் பெற்ற வழிமுறைகளுக்கும் இப்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. முகாம்களை விட்டு வெளியேறுவதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு அவை கடுமையாக அமுலாக்கப்படுவதால் அகதிகள் கூலித் தொழிலுக்கு செல்ல முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் வழங்கப்படும் நிவாரணங்களிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலையும், அவையும் கால் வயிற்று உணவுக்கே போதாத நிலையும் இருப்பதால் பலர், சில நாட்கள் பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமைகளால், "பட்டினியாய் கிடந்தாலும் நிம்மதியாக தமிழ் நாட்டில் கிடக்கலாம்" என்ற நிலையில் சிலரும், "பட்டினி கிடந்து சாவதை விட செத்தாலும் எமது தாய் நாட்டுக்குச் சென்று சாவதுமேல்" என்ற நிலையில் சிலருமாக அகதிகள் மத்தியில் இரண்டு சிந்தனைகள் காணப்படுகின்றன.

இன்னும் சுமார் எண்பத்தையாயிரம் அகதிகள் 135 முகாம்களில் தமிழ் நாட்டில் உள்ளனர். இவர்களில் ஏழாயிரம் பேர் மட்டுமே மீண்டும் தாயகம் செல்லச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ஏனைய அகதிகளின் இன்றைய அவல நிலையைப் பற்றி தமிழக அரசோ, மத்திய அரசோ எவ்வித அக்கறையும் காட்டாத நிலையே இன்னமும் தொடர்கதையாக உள்ளது. ■

## தோல்வியை ஈடு ....

### ஓய்வு பெற்ற அதிகாரிகள் மறுப்பு

இதற்கிடை புலிகளின் எதிர்த் தாக்குதல்களைச் சமாளிப்பதற்கு திராணியற்றவர்களாக உள்ள படைத் தளபதிகளுக்கு ஆலோசனையையும், உற்சாகமும் ஊட்டவென அனுபவமுள்ள ஓய்வு பெற்ற படை அதிகாரிகளை சிறீலங்கா அரசாங்கம் மீண்டும் சேவைக்கு அழைத்திருந்தது. ஆயினும் இதுவரை ஒருவர் கூட இவ்வழைப்பை ஏற்றுச் சேவையில் சேரவில்லை எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### இராணுவ தினம்

பௌத்த மத வழிபாட்டுத்தலமான அநுராதபுரத்தில் உள்ள சிறீமகாபோதி அரச மரத்தின் கீழ் சிறீலங்கா இராணுவ அணிகளின் கொடிகள் வைக்கப்பட்டு 'இராணுவ தினம்' ஒன்று சிறீலங்கா அரசாங்கத்தால் கொண்டாடப்பட்டுள்ளது. படை வீரர்களுக்கிடையிலுள்ள அச்சத்தைப் போக்கும் பொருட்டே இச் சமயச் சடங்கு நடாத்தப்பட்டதாக சிறீலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னா கூறியுள்ளார். பௌத்த சிங்கள வெறியைத் தூண்டும் வகையில் பேச்சுக்கள் இவ்வைபவத்தில் இடம்பெற்றன.

### 3 மாதம் பன்னிரண்டு மாதமாகியது

மார்கழி முடிவதற்குள், அதாவது மூன்று மாதத்துக்குள் யாழ்ப்பாணத்தைப் பிடித்து விடுவேன், தமிழர்களை ஒடுக்கி விடுவேன் எனச் சூளுரைத்த சிறீலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன, யாழ்தேவி நடவடிக்கைத் தோல்விகளை அடுத்து தமது தமிழின ஒழிப்பு காலக்கெடுவை 12 மாதங்களாக நீடித்துள்ளார். அநுராதபுர மகா போதியில் நடைபெற்ற இராணுவத் தினத்தில் உரையாற்றிய சிசில் வைத்தியரட்ன, "பன்னிரண்டு மாதத்துள் வடக்கு -கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து விடுவேன்" எனச் சூளுரைத்துள்ளார்.

### சிறீலங்கா ஜனாதிபதி சிறில் மத்தியூவைப் புனிதமாக்கினார்

"புத்த சாசனத்தின் பாதுகாவலராக சிறில் மத்தியூ விளங்கினார். சிங்கள நாட்டின் ஒற்றையாட்சிக்கு உழைத்த உத்தம தேசபக்தராகவும் அவர் போற்றப்பட வேண்டும்" என சிறீலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்க, 1983 இனக்கலவரம் உட்பட பல தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்குக் காரணமாக இருந்த சிறில் மத்தியூவுக்கு புகழாரம் சூட்டி அஞ்சலி செய்தார்.

சிறீலங்கா அரசாங்கமும், ஜனாதிபதியும் சிங்கள இனவெறி, பௌத்த வெறி என்பவற்றை தூண்டுவதில் அதிக அக்கறை காட்டிவருகின்றனர். சிங்கள மக்களிடையே, யுத்தத்தை நடத்தும் அரசாங்கத்தின் மேல் ஏற்பட்டு வரும் வெறுப்பை சமாளிக்க கொலைவெறியைத் தூண்டவது ஒன்றே ஜனாதிபதிக்கு வழியாகத் தெரிகிறது. களனியாவில் உள்ள சிறீகளனி சுதகரமடன சங்கமயா வளவில், சிறில் மத்தியூவின் உருவச்சிலை ஒன்றை நிறுவித் திறந்துவைத்த சிறீலங்கா ஜனாதிபதி, "இந்தத் தேசத்தின் தலை சிறந்தவர்களுள் சிறில் மத்தியூ முக்கியமானவர்" எனப் பிரகடனம் செய்தார். ■

## தீர்வுகளை ஆராய....

தோட்டை பிரகடனமான, "இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதமே காணப்படுகின்றது. பயங்கரவாதத்தை ஒடுக்கும் செயற்பாட்டையே படைகள் செய்கின்றன" என்ற தனது வழமையான பதிலைக் கூறியுள்ளார். அத்துடன் தான் ஐரோப்பிய நாடுகளிடம் பிச்சை வாங்குவதற்காக மனனம் செய்துவைத்துள்ள வாக்கியங்களான "நாங்கள் எப்பொழுதும் பேச்சு வார்த்தை மூலமான தீர்வுக்குத் தயாராக இருக்கிறோம். விடுதலைப் புலிகள் தான் பேச்சுவார்த்தைக்கு வருகிறார்கள் இல்லை" என்ற வழமையான கூற்றையும் சேர்த்து ஒப்புவித்துள்ளார்.

பாராளுமன்றக் குழுவினர், "அகதிகள் திரும்பி வருவதற்குரிய சூழ்நிலை உண்டா?" எனக் கேட்டதற்கு "ஆம்" என சிறீலங்கா ஜனாதிபதி பதில் கூறியுள்ளார். இதனை ஏற்க மறுத்த பாராளுமன்றக் குழுவினர், அரச சார்பற்ற நிறுவனங்கள் பல, அகதிகள் திரும்பிவருவதற்கு உரிய சூழ்நிலை இல்லை எனத் தமக்கு கூறியுள்ளதாகவும், அக்கூற்றுக்கள் ஏற்புடையதெனத் தாம் கருதுவதாகவும் பதிலளித்துள்ளனர்.

### குண்டு வீச்சுக்கு கண்டனம்

தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களால் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு பாராளுமன்றக் குழு கண்டனமும், கவலையும் தெரிவித்தபொழுது, திருதிரு என விழித்த சிறீலங்கா ஜனாதிபதி, புலிகள் அரச படைகளைக் கொல்வதால் தாங்கள் தாக்குதல்கள் நடாத்துவதாகவும், பொதுமக்கள் பாதிக்கப்படாதவாறு தாங்கள் முன்னேற்பாடுகள் செய்வதாகவும் கூறி மழுப்பியுள்ளார்.

### பாராளுமன்றக் குழுவினர் குழப்பம்

சிறீலங்கா ஜனாதிபதியின் முன்னுக்குப் பின் முரணான பதில்களால் ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவினர் பெரும் குழப்பங்களுக்கு உள்ளானதாக கொழும்பு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். முதலில் பயங்கரவாதப் பிரச்சினைதான் காணப்படுவதாகக் கூறிய ஜனாதிபதி, பின்னர் பேச்சுவார்த்தைக்கென விடுதலைப் புலிகளை அழைப்பதாகக் கூறியது கருத்தளவில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. பயங்கரவாதத்தைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வு எதற்கு? தூதுவர்களை அனுப்பி பேச்சு வார்த்தைக்கு அழைக்க வேண்டிய தேவை என்ன? என்ற கேள்விகள் எழுந்ததும் சிறீலங்கா ஜனாதிபதியின் 'பயங்கரவாதப் பிரச்சினைதான்' என்ற கூற்றின் பொய்மை நிருபணமாகிவிட்டது. இலங்கையில் அரசியல் தீர்வு காணப்படவேண்டிய அதிமுக்கிய பிரச்சினை உள்ளது என்பது வெளிப்பட்டுவிட்டது என கொழும்பு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வடக்கு - கிழக்கில் தேர்தல் நடாத்தப் போவதாகவும் குடியொப்பம் நடத்தப்போவதாகவும் சிறீலங்கா ஜனாதிபதி கூறியுள்ளமை அவர் எவ்வளவு தூரத்திற்கு அரசியல் யதார்த்தம் அற்றவராக உள்ளார் என்பதை ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவுக்கு விளக்கியுள்ளது.

### சிங்கள பௌத்த வெறித்தனம்

சிங்கள பௌத்த பேரினவாத வெறித்தனத்தில் ஊறிப்போய் நிற்கும் சிறீலங்கா அரசாங்கமும், எதிர்க் கட்சிகளும், அரசியல் தீர்வு என்று ஒன்றை சர்வதேச சமூகத்தினர் முன்வைக்கும் கூட்டாட்சி, அல்லது ஒன்றிணைப்பு வழியில் அணுகுவதானால் தமது பௌத்த சிங்கள பேரினவாத வெறி அதற்கு தடையாக நிற்கும் என்பதனை நன்குணர்கின்றனர். அதே வேளை வெளிநாட்டு நிதியுதவி

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிகழ்வும் நினைவும்

-தில்லன்-

# கடற்புலிகள் எதிர் கடற்சிங்கங்கள்

கடற்புலிகளுக்கு எதிராக, 'கடற்சிங்கங்கள்' என்ற பெயரில் புதிய படையணி ஒன்றை உருவாக்குவதற்கு சிறீலங்கா அரசு முயன்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆழ்கடல் தொழில் அனுபவம் உள்ள மீனவர்களைத் திரட்டி இப்படையணி அமைக்கப்படுமெனவும், இவர்கள் கடற்புலிகளின் நடமாட்டங்கள், போக்குவரத்துப் பாதைகள் பற்றிய விவரங்களைத் திரட்டி படையினருக்குத் தெரிவிப்பார்கள் எனவும் இத்தகவலை வெளியிட்ட இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினா தெரிவித்துள்ளார். இக்கடற்சிங்கங்களுக்குச் சீருடைகள் வழங்கப்படுவதுடன், சம்பளம் மற்றும் மேலதிகப் படிகள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

சிறீலங்காவின் கடற்படையினை விட, மேலதிகமாக ஏன் இந்தக் 'கடற்சிங்கங்கள்' உருவாக்கப்படுகின்றது?

கடற்புலிகளை எதிர்கொள்ள சிறீலங்காக் கடற்படையினரால் மட்டும் முடியாமல் இருக்கின்றது என்பததனையே, இது வெளிப்படுத்துகின்றது. கடற்புலிகளின் படகுப் பயிற்சிக் கல்லூரியில் பயின்று, புயலுக்கும் சூறாவளிக்கும் மத்தியில், ஆர்த்தெழும் கடலின் நடுவில் படகைச் செலுத்தக் கூடியவர்களாக வளர்ந்துள்ள கடற்புலிகளின் வீரத்திற்கும், வேகத்துக்கும் முன்பு, சாதாரண பயிற்சியினைக் கொண்ட போதிய கடல் அனுபவம் அற்ற, சிறீலங்காக் கடற்படையினரால் தாக்குப் பிடிக்க முடியாமல் போகும் என்பதனை அரசு உணர்ந்து கொண்டதன் விளைவாகவே, ஆழ்கடல் அனுபவம் கொண்ட புயலுக்கும், சூறாவளிக்கும், கடல்கொந்தளிப்புகளுக்கும் அஞ்சாது, கடலோடக் கூடிய மீனவர்களைக் கொண்டு 'கடற்சிங்கங்கள்' உருவாக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வளர்ச்சிக்குக் கடல் என்றும் உறுதுணையாகவே இருந்துவருகின்றது. எமக்குக் கடல் எல்லைகள் இல்லாமல், தரை எல்லைகள் மட்டும் இருந்திருக்குமேயானால் இந்திய உளவுத் துறையின் கெடுபிடிகளை, சதித்தனங்களை மீறி எமது போராட்டம் வளர்ந்திருக்க முடியாது போயிருக்கும். எமது கடல் எல்லைகளை நாம் எவ்வளவு தூரம் சுதந்திரமாகக் கடக்க முடிகின்றதோ அவ்வளவு தூரம் அது எமது போராட்டத்திற்கு பலம் சேர்க்கக் கூடியது. ஆனால் எமது கடலில் எதிரியின் . மேலாதிக்கமே இதுவரை காலமும் இருந்து வந்திருக்கின்றது. போராட்டத்திற்குத் தேவையான விநியோகங்கள், தொடர்புகள் இந்தக் கடற்பயணங்களை முறியடிப்பதற்கு எதிரி தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டே வந்திருக்கின்றான்; வருகிறான். எதிரியின் படகினைக் கண்டவுடன் அல்லது அவனது தாக்குதலுக்கு மத்தியில் தமது கடல் பயணத்தை நிறுத்த வேண்டிய கட்டாயம் போராளிகளுக்கு இருந்து வந்திருக்கின்றது. எத்தனையோ போராளிகள் எதிரியின் தாக்குதலினால், கடலுக்குள் மூழ்கிப் போனார்கள். இருந்தும் ஓயாத கடல் அலைகளைப் போல், எமது போராளிகளின் கடல் பயணங்களும் தொடர்ந்தன. போராட்டத்திற்குத் தேவையான பல விடயங்களை இவை சாதித்துத் தந்தன.

மேலும், தமிழீழப் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்குக் கடல்வழி விநியோகங்கள் எதிரிக்கு மிக முக்கியமானதாக அமைந்து வருகின்றது. ஆனையிறவு முகாம் மீது போராளிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இருந்து மீளுவதற்குக் கடல்வழி விநியோகம், எதிரிக்குத் துணையாக அமைந்தது. இதேபோல் எதிரியினால் தொடுக்கப்பட்ட பாரிய தாக்குதல்களிலும் எதிரிக்கு, கடல்வழி விநியோகங்கள் பெரிதும் உறுதுணையாக அமைந்தன. கடல்வழி விநியோகங்கள் மட்டுமல்ல, கடலிலேயே நிலைகொண்டிருக்கும் எதிரியின் கப்பல்களும் படகுகளும் போராளிகள் மீதும் மக்கள் மீதும் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடாத்துவதும் வழக்கம்.

இராணுவ நடவடிக்கைகளின் போது மட்டுமல்ல, ஏற்கனவே படையினர் நிலை கொண்டிருக்கும் முகாம்களைப் பாதுகாக்கவும், இம்முகாம்களுக்குத் தேவையான ஆள் -ஆயுத -உணவு -எரிபொருள் மற்றும் தேவையான சகல விநியோகங்களை மேற்கொள்வதற்கும் கடலைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வது படையினரைப் பொறுத்தவரையில் அவசியமாகின்றது.

எனவே, தமிழீழக் கடல் எம்மைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல, எதிரியினைப் பொறுத்தவரையிலும் மிக மிக முக்கியமானது. இவ்வளவு காலமும் எதிரியின் மேலாதிக்கம் கடலில் நிலை நிறுத்தப்பட்டமையினால் எதிரி கடலின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தபோதிலும், அதுபற்றிப் பெரிதும் அலட்டிக் கொள்ளவில்லை. தனது கடற்படையினை பலப்படுத்துவதற்குத் தேவையான ஆயுத தளபாடங்களையும் படகுகளையும் தேவைக்கேற்றவாறு பெற்றுவந்தபோதிலும் கடற்படைக்கு மேலதிகமாக போராட்ட அணிகள் எதனையும் உருவாக்குவதற்கு எதிரி முனையவில்லை.

இப்போது எதிரியின் கடல் மேலாதிக்கத்திற்கு, கடற்புலிகள் மூலம் சவால் விடப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 11ம் திகதி வெடித்த சிறீலங்கா அரசுடனான இரண்டாம் கட்டப் போரின் பின் விடுதலைப் புலிகளின், 'கடற்புலிகள் படையணி' மெல்ல மெல்ல வளர்ச்சிகண்டு வந்தது. சிறீலங்காக் கடற்படையின் இரண்டு யுத்தக் கப்பல்கள் கடற்புலிகளின் கரும்புலித் தாக்குதல்கள் மூலம் தகர்க்கப்பட்டன. கடற்கண்ணி வெடிகள் மூலம் கடற்படையினரின் ரோந்துப் படகுகள் தகர்க்கப்பட்டதுடன், பல கடற்படையினர் கொல்லப்பட்டும் வந்தனர். இத்தாக்குதல்கள் சிறீலங்கா அரசுக்கு, கடற்புலிகள் தொடர்பான மிகுந்த அவதானிப்பினைக் கொடுத்தது.

கடற்படையினருக்கும், கடல்புலிகளுக்கும் இடையில் கிளாலிக் கடலோரப் பகுதியில் நடந்த பலப் பரீட்சையில் கடற்புலிகளின் கையோங்கியமை, கடற்புலிகளின் வளர்ச்சியினை, சிறீலங்கா அரசுக்குத் தெளிவாக வெளிப்படுத்தியது. கிளாலிக் கடலேரியினால் பயணம் செய்வதற்குக் தடை விதித்த சிறீலங்கா அரசு, கிளாலி ஊடாகப் பயணம் செய்த பொதுமக்கள் மீது, கடற்படையினர் மூலம் படுகொலைகளை மேற்கொண்டது. இதன் பின்னரும் கடற்புலிகளின் படகுகள் பாதுகாப்புக் கொடுக்க, பொதுமக்கள் கிளாலி ஊடாகப் பயணம் செய்து வருகின்றனர். பொதுமக்கள் படகுகள் மீது தாக்குதல் மேற்கொள்ள முனையும் கடற்படையினரின் படகுகளை கடற்புலிகளின் படகுகள், விரட்டித் தாக்க, கடற்சண்டைகளின் மத்தியில் பொதுமக்கள் பயணம் தொடர்கின்றது.

இச்சூழலில், ஆவணி இறுதிப் பகுதியில் கடற்புலிகளின் கரும்புலிப் போராளிகளினால், அடுத்தடுத்து நடாத்தப்பட்ட இருதாக்குதல்கள் கடற்படையினருக்குப் பெரும் அதிர்ச்சியினைக் கொடுத்தது. 26-08-93 அன்று இரண்டு படகுகளில் சென்ற கடற்புலிகளின் இரு கரும்புலிப் போராளிகள், கிளாலிக் கடலேரிப் பகுதியில் கடற்படையினரின் இரு படகுகளைத் தகர்த்து கடற்படையிருக்குப் பெரும் சேதத்தினை ஏற்படுத்தியிருந்தனர். இத்தாக்குதல் நடாத்தப்பட்டு மூன்று தினங்களுக்குள் 29-8-93 அன்று, பருத்தித்துறைக் கடலில் வைத்து இஸ்ரேலியத் தயாரிப்பான கடற்படையின் 'டோறா' படகின் மீது நடாத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல் கடற்படையினருக்குப் பலத்த ஆள் , ஆயுத இழப்பை ஏற்படுத்தியது.

ஒட்டுமொத்தமாகநோக்கின் கடற்புலிகளின் வளர்ச்சியினை, சிறீலங்காவின் இராணுவ பலத்தின் மீது விடுக்கப்பட்ட ஒரு சவாலாக, சிறீலங்கா அரசு உணர்ந்து கொண்டதன் விளைவாகவே கடற்புலிகளை எதிர்கொள்வதற்கு இன்று கடற்சிங்கங்கள் உருவாக்கப்படுகின்றது எனலாம். இக் கடற்சிங்கங்களின் உருவாக்கம் தொடர்பாக கருத்து வெளி

தொடர்ச்சி 10ம் பக்கம் ....

# அமெரிக்காவின் யோசனையை பிரதமர் நிராகரித்தார்

இலங்கைத் தீவில் தனிநாடு கோரும் தமிழர்களுக்கு எதிராக, சிறீலங்கா அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை விசாரிக்கவும் உண்மையைக் கண்டுணரவும் சர்வதேச ஆணைக்குழு (TRUTH COMMISION) ஒன்றை சிறீலங்கா நியமிக்க வேண்டும் என, அமெரிக்க அரசின் வெளிநாட்டு அபிவிருத்திச் சபையினால், தெரிவிக்கப்பட்ட யோசனையை, சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வாசிங்டனில் வைத்து நிராகரித்தார்.

"நாம் இப்பொழுதே சர்வதேச நிறுவனங்கள் அங்கு வர அனுமதித்துள்ளோம். சிறீலங்கா போன்ற சுதந்திரமான சமுதாயத்தில், இப்பிரச்சினைகள் தினமும் பாராளுமன்றத்திலேயே ஆராயப்படலாம்" என சிறீலங்காப் பிரதமர் பதிலளித்துள்ளார்.

அமெரிக்க அரச செயலாளர் வரன் கிறிஸ்தோப்பர், தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி அரச செயலாளர் றொபின் ரபெல், சிறீலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் டெரிசிட்டா சீவ்வர் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### மனித உரிமை இன்னும் முன்னேற்றம் அடைய வேண்டும்

அமெரிக்க அரசுச் செயலாளர் வரன் கிறிஸ்தோப்பர் விடுத்த குறிப்பொன்றில், "சிறீலங்காவில் மனித உரிமை தொடர்பான விடயங்கள் இன்னும் முன்னேற வேண்டிய நிலையில் உள்ளன" எனக் கூறியுள்ளார். சிறீலங்காவில் மனித உரிமைகளின் நிலை பற்றியும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரைத் தீர்ப்பதற்கான வழிகள் பற்றியும் ஆராயப் பட்டதாகத் தெரிகின்றது.

சிறீலங்காப் பிரதமர் அமெரிக்காவின் ஆதரவை வெல்லக்கூடிய 'வகையில்', "அமெரிக்காவின் சுறுசுறுப்பான தலைமைத்துவத்தை சிறீலங்கா எதிர்பார்க்கின்றது" என நேரடியாகவே வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிகின்றது. அத்துடன் அமெரிக்க முதலீடுகளை ஊக்குவிக்கக் கூடிய வகையிலும் அமெரிக்க வர்த்தகத்திற்கு சாதகமான வகையிலும் சிறீலங்கா தனது பொருளாதாரக் கொள்கைகளை கடைப்பிடிக்க உறுதியளித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

## தீர்வுகளை ஆராய....

களில் தங்கியிருப்பதற்கு பெயரளவில் அரசியல்தீர்வு, மனித உரிமைகள் என்பன பற்றி பேச வேண்டிய நிலையில் இருப்பதனால் அவைகளைப் பற்றியும் இடைக்கிடை உதட்டளவில் உச்சரித்துக் கொள்கின்றனர். அதேவேளை சர்வதேச சமூகத்தின் தீர்வு ஒன்றினையும் பரிசீலனைக்குக் கூட எடுக்காது 'வெளியார் தலையீடு இன்றி நாம் தீர்ப்போம்' எனக்கூறி தமிழின அழிப்பைத் தொடர்கின்றனர்.

### தமிழீழமே தீர்வு

இதனால்தான் அரசியல் தீர்வு எதையும் வழங்க மறுக்கும் சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து, தமிழீழ மக்கள் பிரிந்து சென்று, தமது இறைமையைப் பயன்படுத்தி 'தமிழீழ அரசு' எனும் தமது அரசை நிறுவ விரும்புகின்றனர் என்ற உண்மையை சர்வதேச சமூகம் இனியாவது விளங்கி செயலாற்ற வேண்டிய நேரமிது. ■

### மனம் வருந்துகிறோம்

கடந்த (8/10/93) "களத்தில்" செய்தித்தாளின் பின்பக்கத்தில், இடம்பெற்ற 2வது லெப் . றெஜினோல்ட் அவர்களின் படம் 2வது லெப். ஆனந்தகுமார் என்ற பெயரிலும், 2வது லெப். ஆனந்தகுமார் அவர்களின் படம், 2வது லெப். றெஜினோல்ட் என்ற பெயரிலும் தவறுதலாக அச்சுப்பதிவாகியமைக்கு மனம் வருந்துகிறோம். ■


ஈழத்தமிழர் கலையரங்கம் நடாத்தும்
மூன்றாவது மாபெரும்
மாவீரர் ஞாபகார்த்தக் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி.- 93.

1. நேரடிமுறை (OVERGAME) நான்குபேர். ஏ பிரிவு , பீ பிரிவு.
2. சர்வதேசமுறை (Set-up game) ஆறுபேர்.

- போட்டி நடைபெறும் திகதி : 14.11.1993.
- விண்ணப்பப் படிவம்.

ஈழத்தமிழர் கலையரங்கத்தால் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் இக் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி வழமைபோல இம்முறையும் மிகச்சிறப்பாக நடாத்தப்படவுள்ளது. தங்கள் கழகமும் மேற்படி போட்டியில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

- நேரடிப் போட்டிகள் யாவும் TVU சட்ட விதிகளுக்கமைய நடைபெறும்.
- சர்வதேச ஆட்டங்கள் சர்வதேசவிதிப்படி நடாத்தப்படும்.
- இப்போட்டிகளில் TVU வில் அங்கம் வகிக்கும் கழகங்கள் பங்குபற்றும். அதேவேளை TVU வில் இதுவரை அங்கம் வகிக்காத கழகங்களும் பங்குபற்றலாம்.
- ஒரு கழகம் எத்தனை பிரிவுகளிலும் பங்குபற்றலாம். ஆனால் ஒவ்வொரு பிரிவுக்கும் விண்ணப்பப் பணம் 150 குறோணர்.
- விண்ணப்பப் பணத்தை இத்துடன் இருக்கும் (Den Danske Bank) கணக்கில் செலுத்தி, பணம் செலுத்திய ரசீதையும் விண்ணப்பப் படிவத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும். ( ஏனெனில் வங்கியில் எக்கழகம் பணம் செலுத்தியுள்ளது என்பதைநாம் உறுதிசெய்துகொள்வதற்குக் கண்டிப்பாக இந்த ரசீது அவசியம். )
- கணக்கு இலக்கம் 4665 110575
- விண்ணப்ப முடிவு திகதி 30.10.1993.
- விண்ணப்பங்களை அனுப்பவேண்டியமுகவரி:

*ELLATH TAMILAR KALAIYARANGAM,*
*POST BOX : 133,*
*7400 HERNING.*

*PHONE: 97 215425.*

டென்மார்க்கில் நடைபெறும் அதிசிறந்த கரப்பந்தாட்டப் போட்டிகளில் மாவீரர் ஞாபகார்த்தக் கரப்பந்தாட்டப் போட்டியும் ஒன்று.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாய் நிலம்





அப்பு பத்திரமாய் அடைத்த வேலி,
உள்ளம் உவந்துருகித் தங்கை
வளர்த்த வெள்ளைப்பேடு,
வெள்ளாட்டுக் குட்டி இரண்டும்
குண்டொன்றின் குழியிலடங்கலாம்.
குரூரம், அந்த நாட்களைத் தின்னும்.
வீடு திறந்திருக்கும்; கூரையின்றி
இவையல்ல நம் வாழ்வு
நீங்களெல்லாம் வீதிகளில் திரிவீர்
வார்த்தையின்றி; துயர் சுமந்து
பேசாது மௌனித்து,
இடம் விட்டகன்று..

போரின் பிறகு,
வீசிய குண்டில் விழுந்த முருங்கையைப்போல்
வேறெதுவும் புதிதாய்த் தளிர்க்கலாம்.
உடைந்த வீட்டின் முகட்டை விடவும்
அழகாய் ஒரு குடில் நிமிரலாம்.
பனிபடிந்த காலையைப் போலப்
பிறகும் இனிதாய்
பழகிய நாட்கள் எழுந்து வரலாம்.

யாதும் நிகழும் என்பதாகுக;
நாம் விரும்பாத போரின் பிறகு
யாவையும் புதிதாய் எழுவதாகுக.





ஆயினும்,
நிலம் வேண்டுமே; நிலம்
எனக்கு, உனக்கு; அவனுக்கு
நம் எல்லோருக்குமான நிலம்
தாய் நிலம்.

கருணாகரன்
(தாய்நிலம் கவிதையில் இருந்து)


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

T.C.C
P.O.Box 694, Mulgrave North
Victoria 3170, Australia
Tel 03-457 6347 F 5608224

T.C.G
Post Fach 340251
51624 Gummersbach-34
Germany

T.C.C
Via Marlano Stabile - 34
90139 Palermo, Italy
T/F 091-611 3179

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

W.T.C.C
HOFJECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel 077 - 816609

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்